விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (24.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## பிரேரணையை தட்டிக்கழித்தால்

# இலங்கை அரசு மீது மீண்டும் நடவடிக்கை

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இலங்கை அரசாங்கம், அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானத்தில் முன் மொழியப்பட்டுள்ள சர்வதேச சமூகத்தின் கரிசினைகளை கவனத்தில் கொண்டு, மனிதவுரிமைகளைப் பேணுவதில் முன்னேற்றத்தை வெளிப்படுத்தவில்லையென்றால், தாம் மீண்டும் இலங்கை அரசு மீது அடுத்த கட்ட நகர்வுகளை சட்ட ரீதியாக மேற்கொள்ள முடியும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு கால அவகாசம் கொடுத்துப் பயனில்லை

### தீர்மானம் குறித்து சம்பந்தன்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் கொடுத்துப் பயனில்லை. எனவே பிரேரணைகள் நிறைவேற்றிக் காலத்தை வீண் விரயமாக்காமல் அடுத்த கட்ட நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கை அரசுடன் தமிழ்த் தலைவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களை அது உதாசீனப்படுத்திய படியால் தான் (23ஆம் பக்கமம் பார்க்க)

## மனித உரிமைகள் பாடத்தை எமக்கு கற்பிக்க தேவையில்லை

### இலங்கை இறுமாப்பு



(கொழும்பு)

மனிதவுரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அனைத்துலக சமூகம் வலியுறுத்தி வருகிற நிலையில் மனிதவுரிமைகள் குறித்து எவரும் தமக்கு பாடம் கற்பிக்கத் தேவையில்லை என்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை மன்றத்தில் விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் வாக்குறுதிகளை சர்வதேசம் மறந்துவிடாது

### அரசின் நினைப்பு தவறு – கிரியல்ல

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது சர்வதேச நாடுகள் இலங்கை மீது பலவந்தமாகத் திணித்ததொன்றல்ல. இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென்று




தான் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் சர்வதேச நாடுகள் இதனைத் தம்மீது பலவந்தமாகத்திணிக்கின்றனஎன்று இலங்கையரசு கூறுகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல (23ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டை இந்தியா தவிர்க்க வேண்டும்

### பா.ம.க. வலியுறுத்து



(கொழும்பு)

கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வில் ஈழத்தமிழ் மக்களை ஏமாற்றிய இந்தியா, இது தொடர்பில் உறுதியான முடிபு எடுக்க வேண்டும் எனவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை இனப்படுகொலைகளுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தண்டிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் கடுமையான தீர்மானம் (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக எதிர்ப்பை மீறி இந்தியா எமக்கு உதவியது!

### அமைச்சர் டலஸ் பெருமிதம்

(கொழும்பு)



2009ஆம் ஆண்டு புலிகள் அமைப்பை தோற்கடிக்கும் போதும் இதேபோன்று தமிழகத்தில் எதிர்ப்புக்கள் கிளம்பின. ஆனாலும் இந்தியா ஒத்துழைத்தது. இப்போதும் அதையே இந்தியா செய்துள்ளது.

இந்தியா எமக்கு எதிரியல்ல. இந்திய எதிர்ப்பை உருவாக்க நாட்டில் சில ஊடகங்களும் சக்திகளும் செயற்படுகின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்திய எதிர்ப்பு என்ற கட்டத்திற்கு நாம் செல்ல மாட்டோம் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இலங்கை மன்றத்தில் நடைபெற்றது. இதன்போது ஜெனிவா தீர்மானம் குறித்து விளக்கமளித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவிக்கையில், ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் கொண்டு (02ஆம் பக்கம் பார்க்க)

| | |
|---|---|
| CMB - CHENNAI -CMB | 16600/= |
| CMB - MADURAI -CMB | 14400/= |
| CMB - TRICHY -CMB | 16300/= |
| CMB - LONDON -CMB | 91800/= |
| CMB - FRANKFURT-CMB | 81300/= |

Call 0773629799
AiR MARK
Travels & Tours
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777
IATA

சித்திரைப் புத்தாண்டு
SALE
விசேட விலைக்கழிவு
சர்வதேச தரத்தில்...
சாதாரண விலையில்...
Ranjanas CERAMIC
# 212, Palaly Road, Jaffna.
021 222 0033 / 021 222 4777 / 021 226 2000

சிங்கர் காட்சியறை திறப்பு விழா அழைப்பிதழ்
27.03.2013 புதன்கிழமை பகல் 11.15 மணிக்கு SINGER Plus முல்லைத்தீவு காட்சியறை கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளதால் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
உங்கள் வீட்டிற்கு, அலுவலகத்திற்கு தேவையான சகல தளபாடங்களையும் மற்றும் அனைத்து வகையான இலத்திரனியல் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
03.04.2013 வரை கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு விசேட சலுகைகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
பிரதான வீதி முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

தற்போது யாழ் நகரில்...

சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்



BTEC HND in
BIOMEDICAL SCIENCE
Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புகளுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Macro Ads
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

# தமிழக எதிர்ப்பை மீறி...

வரப்பட பிரேரணைக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளிட்ட 25 நாடுகள் வாக்களித்ததுடன்,13 நாடுகள் அதை எதிர்த்தன. 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. எமக்கு சார்பாக வாக்களித்த நாடுகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஜெனிவா தீர்மானம் குறித்து நாம் கவலையடைகின்றோம்.

2009-ம் ஆண்டுக்குப் பின்னர் இனங்களுக்கிடையில் தேசிய சமத்துவத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் இந்த விடயத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். 30 வருடங்கள் நாம் கொடூர யுத்தத்தைச் சந்தித்தோம். இக்காலப் பகுதியில் புலிகள் 348 தடவைகள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். எனினும், யுத்தத்தின் இறுதிப் பத்து நாட்கள் தொடர்பிலேயே இன்று பேசப்படுகின்றது.

ஏகாதிபத்தியர்கள் அன்று பிரித்தாளும் சூழ்ச்சியைக் ்கையாண்டனர். அதன் நவீன வடிவத்தை இலங்கையை ஆய்வுகூடமாகப் பயன்படுத்தி பரிசீலனை செய்வதற்கு ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை முயற்சிக்கின்றது.

அதேவேளை, ஜெனிவாத் தீர்மானம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெளிவாகச் சொன்னார். அதாவது, இந்திய அரசுக்குத் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை எமக்கும் ஏற்பட்டிருந்தால் நாமும் அவ்வாறானதொரு முடிவையே எடுத்திருப்போம். ஆட்சியின் ஸ்திரத்தன்மையை இழக்க எவரும் விரும்ப மாட்டார்.

இந்திய எதிர்ப்பை உருவாக்க நாட்டில் சில ஊடகங்களும்,சக்திகளும் செயற்படுகின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்திய எதிர்ப்பு என்ற கட்டத்துக்கு நாம் செல்ல மாட்டோம்.

புலிகள் அமைப்பை தோற்கடிக்கும் போதும் இதேபோன்று தமிழகத்தில் எதிர்ப்புக்கள் கிளம்பின. ஆனாலும் இந்தியா ஒத்துழைத்தது. இப்போதும் இந்தியா எமக்கு உதவிகளையே செய்ய முனைகின்றது. 543 ஆசனங்களில் காங்கிரஸ் அரசு 206 ஆசனங்களையே கொண்டுள்ளது.

எனவே, கூட்டணி அமைப்பதற்கு அவர்களுக்கு சிறிய சிறிய கட்சிகளின் ஆதரவு அவசியம். தி.மு.க. 18 ஆசனங்களைக் கொண்டுள்ளது. எனவே, அவ்வாறானதொரு நிலை இருந்தால் நாமும் எவரையும் பகைத்துக்கொள்ள மாட்டோம். இந்தியா எமக்கு எதிரியல்ல என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (செ-11)




**கார் வாடகைக்கு Or விற்பனைக்கு**
நாள் வாடகை 2000/=
மாத வாடகை 35000/=
சாரதியுடனோ or இல்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: 0779361427
(2238)

**வான் விற்பனைக்கு**
மகேந்திரா படி வான் விற்பனைக்கு.
சுந்தரம் ஸ்ரோர்ஸ்
சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.
(2237)

**பிள்ளையார் இன்**
இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.
25% கழிவு
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(C-1660)

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து சிவபாலேந்திரன் (சாரதி-பாலு)

வரணி நாவற்காடு குடமியனை பிறப்பிடமாகவும், வெளிச்சீமா அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவபாலேந்திரன் (22.03.2013) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-தெய்வானப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், தேவமலரின் அன்புக் கணவரும், பிரகாசினி, சிவரூபன், சுதர்சினி, (CIC Agri Businesses Pvt LTD-Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, சிவலோகநாயகி, சிவசோதி, சிவாஸ்வரி, சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணபாலசிங்கத்தின் (கனடா), அன்பு மாமனாரும், இந்திராணி, காலஞ்சென்றவர்களான தவராசா, செல்வராசா, பாலசுப்பிரமணியம்(கிளி) மற்றும் உதயகுமாரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இந்திரபாலன், பாலராணி(கனடா), பாலசுமதி(கனடா), இராசகுமார்(கனடா), பாலகுமார்(கனடா), பாலநளனி, தவகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும், பவராஜ்(கனடா), குருபரன்(கனடா),சயந்தினி(கனடா) ஆகியோரின் மாமனாரும், நிகாஷன், லிலக்ஷன், சந்தோஷ்(கனடா), சாரங்கா (கனடா), கஜானி(கனடா), விதுஷ்ன் (கனடா), றக்ஷிதன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெளிச்சீமா
அல்வாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு மின்சாரம் பெற்ற ஒன்பது பேருக்கு அபராதம்

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் திருட்டு மின்சாரம் பெற்ற 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் 9 பேர்களிடமிருந்து நஷ்ட ஈடு மற்றும் குற்றப்பணமாக 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நீதிமன்றங்களினால் அறவிடப்பட்டுள்ளதாக யா.ழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரரத்ன தெரிவித்தார்.

மல்லாகம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் பிரதேசங்களினைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸாரின் திடீர் சோதனைகளின் மூலமே இவ்வாறு திருட்டு மின்சாரம் பெற்று வந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொள்ளும் இத்திடீர் பரிசோதனையின் மூலமே இத்திருட்டு மின் பெறுவோர் கைதாகி வருகின்றனர்.

குறிப்பாக சனநடமாட்டமற்ற பிரதேசங்களிலும் வயர் அல்லாத கம்பியின் ஊடாக மின் வழங்கப்படும் பிரதேசங்களிலும் இத்திருட்டு மின்சாரம் அதிகம் மேற்கொள்ளப்படுகின்றது.

பிரதான மின்வடங்களில் சட்ட விரோத மின்னிணைப்பினை ஏற்படுத்தியும் மின்மானியின் சுழற்சியில் மாற்றத்தினை ஏற்படுத்தியும் அல்லது சட்ட முறையான வேறு ஏதாவது முறையினை பின்பற்றி மின்சாரத்தினை பெறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

சட்ட விரோத மின்சாரம் பெற்ற கால அளவு, மின்சாரம் பெறும்முறை என்பவற்றினை கருத்திற் கொண்டு நீதிமன்றங்களின் மூலம் இலங்கை மின்சார சபைக்கு நஷ்டஈடும் குற்றத்திற்குரிய தண்டப்பணமும் சட்ட விரோத மின் பாவனையாளரிடமிருந்து பெற்றுக் கொடுப்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)

## இலவச மூக்கு கண்ணாடி விநியோகம்

ஹெல்ப் ஏச் நிறுவனத்தால்கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மூன்று கிராமங்களில் ஏற்கனவே பரிசோதனை செய்தவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ,27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பரந்தன் கோரக்கன் கிராம பொதுநோக்கு மண்டபத்திலும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தருமபுரம் நெசவு நிலைய மண்டபத்திலும் அதனை தொடர்ந்து 11 மணிக்கு பெரிய குளம் பொது நோக்கு மண்டபத்திலும் வழங்கப்படவுள்ளது.

எனவேபரிசோதனைசெய்யப்பட்டஅனைவரும் அப்பகுதிகளுக்கு வருகை தந்து நமக்குரிய இலவச மூக்குகண்ணாடியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (அ-2-84)

# பொது நூலகத்திற்கான 5 இலட்சம் ரூபா நிதி கிடப்பில்

பூநகரி பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ்இயங்கும் பூநகரி பொது நூலகத்திற்கு பாடசாலை மாணவர்களின் நலன்கருதி கனடாவில் இயங்கும் பூநகரி -கனடா சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதி செலவிடப்படாமல் ஒருவருடமாக தேங்கி கிடப்பதையிட்டு கனடாவில் உள்ள சங்க நிர்வாகிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புத்தகக் கொள்வனவுக்கான நிதி பூநகரி பிரதேசசபை உறுப்பினரும் பூநகரி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினருமான தி.ஆனந்தவர்ணனின் வேண்டுகோளுக்கமைய இந்நிதி அனுப்பப்பட்டும் பிரதேச சபை நிர்வாகம் கரிசனை எடுக்கவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பிரதேசசபை தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது வடமாகாண ஆளுநரின் அனுமதி கிடைத்தால் தான் செய்ய முடியுமென பதிலளித்தார். (அ-2-84)

## 70 வயதிற்கு மேற்பட்டோருக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு

70 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை தொடக்கம் தாங்கள் பெற்றுக்கொள்ளும் தபாலங்களில் பெற்றுக் கொள்ளலாம் என கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த கொடுப்பனவை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள தவறியோர் அதனை நேரில் சென்று பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில் அவர்களுக்கு சார்பாக வேறு ஒருவரை நியமித்து கிராம அலுவலர்கள் மூலம் உறுதிப்படுத்தி பிரதேச செயலர் ஊடாக அனுமதி பெற்று இக்கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான மூன்று மாதங்களுக்குள் இப்பணத்திணை பெற்றுக்கொள்ள தவறினால் பின்பு அவருடைய பெயரில் இப்பணத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விடும். எனவே இப்பணத்தினை உரியவர்கள் உரிய நடைமுறையின்படி விரைவில் பெற்றுக் கொள்ள பிரதேசசெயலரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ-3-254)

# வாரம் ஒரு தகவல்

## நாட்டை ஆள்பவரின் அச்சம்...

அரசன் ஒருவன் நாட்டை ஆண்டு வந்தார். அவர் ஒருமுறை அந்நிய நாட்டின் மீது படையெடுத்தார். அப்படையெடுப்பில் தோற்றுப் போனதால் அவருக்கு பயம் ஏற்பட்டது.

நாட்கள் நகர்ந்தன. மீண்டும் அந்நாட்டின் மீது அரசன் போர் தொடுத்தார்.

இப்படையெடுப்பில் இவர் வெற்றி கண்டார். எனினும் அவ் வெற்றியும் அவரிற்கு பயத்தையே கொடுத்தன. ஏனெனில் தோற்றுப் போன எதிரி நாட்டு அரசன் எந்நேரத்திலும் பழிவாங்க வரலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

இது இப்படி இருக்கையில், ஒருநாள் அந்த அரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். அப்போது காட்டினுள் துறவியொருவரை அரசன் சந்தித்தார்.

உடனே அரசன் அந்த துறவியை நோக்கி "துறவியாரே! இந்நாட்டின் மன்னன் நான். உங்களுக்கு என்னுடைய உதவி எதுவும் தேவைப்படின் சொல்லுங்கள்...!" என்று கூறினார்.

அரசன் இவ்வாறு கூறியதும் அரசனை நிமிர்ந்து பார்த்த துறவி "என்னுடைய அடிமையின் அடிமை நீ.... நீ எப்படி எனக்கு உதவ முடியும்" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அரசனிற்கு கோபம் மேலோங்கியது. எனினும் அதை வெளிக்காட்டாமல் "துறவியாரே... என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு துறவி என்னுடைய அடிமைகளில் ஒருவனிடம் நான் உதவி கேட்பது முறையாகாது என்று சொல்கிறேன் என்றார்.

அரசனிற்கு எதுவுமே விளங்கவில்லை. இதனால் அரசன் குழம்பிப் போனார்.

பின்னர் "சற்று விளங்கும்படி கூறுங்களேன்" என்றார் அரசன்.

எனவே துறவி விளக்கமாக கூறினார். "என்னிடம் ஓர் அடிமை இருக்கிறான். அவன் உனக்கு எஜமானன்! இதைக் கேட்ட அரசன் உங்களிற்கு அடிமையாக இருப்பது யார்?" என்று கேட்டதும் "அச்சமே என் அடிமை" என கூறி முடித்தார்.

அரசன் அச்சத்திற்கு அடிமையாகவுள்ள தன் நிலையை உணர்ந்து தலைகுனிந்து நின்றார்.

பதவியில் இருப்பவர்கள் பயத்திற்கு அடிமையாகி விடுகிறார்கள். அந்தப் பயத்தின் காரணமாகவே பதவியையும் விடாமல் பற்றிக் கொள்கிறார்கள்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

24.03.2013
(பங்குனி 11, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு
துவாதசி பிற்பகல் 4.53 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 9.24 மணிவரை
இராகுகாலம் 4.45-6.15 மணிவரை
சுபநேரம் 9.15-10.45 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும், கண்ணன் வழிபாடு திருப்தி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாகன யோகமுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும், பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், தொழில் நன்மை கருதி முயற்சி எடுப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மாதர் நட்புண்டு.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சி கருதி தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள்.

**தனுசு** உதாசினப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, காரியங்கள் தாமதம் ஆகலாம்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இல்லத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், காணாமல் போன பொருள் ஒன்று கைக்குக் கிடைக்கும், உடல் நலம் சீராகும், சுவாரஸ்யமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 120 | 120 |
| தக்காளி | 80 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 20 | 60 | 60 |
| கரட் | 70 | 110 | 120 | 100 |
| பூசணி | 50 | 30 | 50 | 60 |
| புடோல் | 80 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 60 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 110 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 60 | 90 | 60 | 120 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 90 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 110 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 600 |
| போஞ்சி | 120 | 100 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 45 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 90 | 120 | 90 |
| வெங்காயப்பூ | 140 | 180 | 140 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் கிரிக்கெட் போட்டி மத்திய கல்லூரி வெற்றி





அமிர்தஜன் 53 பந்துகளுக்கு முகம் கொடுத்து 38 ஓட்டத்தினையும் சன்ஜயன் 85 பந்துகளுக்கு முகம் கொடுத்து 38 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹரிஹரன் 27 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டினையும் செளபீதரன் 35 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து மூன்று விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஹரிகரன் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித் தலைவர் அமிர்தஜன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் டார்வின் 50 பந்துகளுக்கு முகம் கொடுத்து 39 ஓட்டத்தினையும் நிறோஜ் 47 பந்துகளுக்கு முகம் கொடுத்து 38 ஓட்டத்தினையும் அலன்டிலன் 61 பந்துகளுக்கு முகம் கொடுத்து 37 ஓட்டத்தினையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் பிரியசங்கர் 17 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் கானாமிர்தன் 41 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் லோகதீஸ்வர் 42 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



209 ஓட்டத்தினைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 44.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையுமிழந்து 174 ஓட்டங்களை பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் கவாஸ்கர் 48 பந்துகளுக்கு முகம் கொடுத்து 45 ஓட்டத்தையும்

## கிரிக்கெட் போட்டி

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 9-வது ஆண்டாக நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 8-வதும், தொடரின் 102-வது மான போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஜொனியன்ஸ் அணியும் சிறிகாமாட்சி அணியும் மோதவுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி மானிப்பாய் பரீஸ் அணியுடனும், தோல்வியுறும் அணி ஜொலிஸ்ரார் அணியுடனும் 2-வது சுற்றில் கலந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் நூற்றி ஆறாவது குருபூசைத்தினம்

செந்தமிழ் அணங்கின் சிந்தனையில் என்றும் தங்கும் தமிழொளித் துங்கவன் எனப் போற்றப்படுகின்றவரும், தமிழ் நாட்டில் சைவமும் தமிழும் வளர்த்துப் புகழீட்டியவருமான மேலைப் புலோலி சதாவதானம் கதிரைவேற்பிள்ளை பெருமகனார் பெருமை சொல்லுந்தரத்தன்று. நாவலர் அவர்களுக்குப் பின்னர் தமிழ் மொழிக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றியவர் களில் சதாவதானியும் முக்கிய பங்கினை வகிக்கிறார்.

பெருமகனார் சதாவதானி அவர்கள் 1871 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 3 ஆம் திகதி இலங்கைத் தீவின் வடபகுதியில் அமைந்துள்ள மேலைப் புலோலியிலே நாகப்பிள்ளை சிவகாமி தம்பதிகளின் குழந்தையாக அவதரித்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை அயலில் இருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றதுடன் சிறுவயது தொட்டு படிப்பில் மகா விவேகியாகவும் அதிலே தளராத விருப்பும் அளப்பெரிய ஆற்றலும் மிக்கவராக விளங்கினார். பின்பு தான் கற்ற பாடசாலையிலே ஆசிரியராகக் கடமை யாற்றிய காலத்தில் தாம் கற்றவை கைமண்ணளவு கூடவில்லையே என்ற ஏக்கமும் மேலும் பல நூல்களை ஐயந்திரிபறப் பெரியார் வாய்க் கேட்டறிதல் வேண்டுமென்ற தளராத விருப்பினால் தனது இருபத்திரண்டாவது அகவையில் தமிழ் நாட்டுக்குப் பிரயாணமாயினார்.

அக்காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் கற்கப் புகுவார்க்குக் கலங்கரை விளக்கம் போலிருந்த கனக சுந்தரம்பிள்ளையவர்களிடம் கதிரைவேற்பிள்ளை அண்டியார் நாளடைவில் தொல்காப்பிய சங்கவிலக்கியம் முதலான அருங்கலை நூல்களை வேறும் பல வித்துவான்களிடம் பாடங்கேட்டு விற்பத்திமானாயினார்.

செந்தமிழ் இலக்கணத்தையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் நுணுகியாராய்வதற்கு இன்றியமையாத வடமொழியையும் கற்று அதிலே ஆழ்ந்த புலமையெய்தினார். பின்னர் 1897 ஆம் ஆண்டு முதலாக ஆசிரியர் வேலை கிடைக்கப் பெற்று முதலில் வேப்பேரி உயர் நிலைப் பாடசாலையிலும் பின்

## இவரது குருபூசை தினம் நாளை

னர் சென் தோம் உயர் நிலைப் பாடசாலையிலும் ஆசிரியாராய்க் கடமையாற்றினார். பிள்ளையவர்களின் கற்பித்தல் முறை மாணவரை வெகுவாகக் கவர்ந்தது.

பிள்ளையவர்கள் தமது ஓய்வு நேரங்களில் சென்னைக் கந்தகோட்டத்து வசந்த மண்டபத்திலும் சித்தாரிப் பேட்டை அம்மன் கோயில் மண்டபத்திலும் அரிய சமயப் பிரசங்கங்கள் செய்வராயினர். இவர் தணிகைப் புராணமும் கந்தபுராணமும் ஒழுங்காகப் பிரசங்கஞ் செய்து வந்த காலத்திலே மாயாவா தத்தை இவர் தாக்கி உண்மைச் சுத்தாத்தவித சைவசித்தாந்தத்தை நிலைநாட்டினார்.

இவருடைய சீரிய தொண்டினைப் பாராட்டிச் சென்னையில் ஒரு மாபெருங் கூட்டத்திலே காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தலைமையில் [illegible] கோளரி என்னும் [illegible]

அதைத் தொடர்ந்து சைவத் தமிழன்பர்கள் தமிழ் நாட்டிற் பல இடங்களிலும் பேரவை கூட்டிப் பிள்ளையவர்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்து மேலும் பல விருதுகளும் பட்டங்களும் வழங்கினர்.

சைவசித்தாந்த மகாசரபம், அத்துவித சித்தாந்த மகோத்தரணர், மகா வித்துவான், நாவலர், பெருஞ்சொற்கொண்டல் என்பன போன்ற பட்டங்கள் பிள்ளையவர்களின் பெயரை மொய்த்தன. ஆரணி சமஸ்தான வித்துவானாய் இருந்த காலத்திலேயே அவ்வாதீனத் தலைவர் இவருக்கு அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் என்னும் பட்டத்தை நல்கினார்.

இவர் எழுதிய சிவசேத்திராலய மஹோற்சவ விளக்கம், ஏகாதசிப் புராண அரும்பதவுரை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு முதலாய நூல்கள் அவருக்குப் பெரும் புகழையீட்டிக் கொடுத்தன. இவற்றை விடப் பழனித்தலபுராணம், திருவருணைக் கலம்பகம், சிவராத்திரிப் புராணம் முதலியவற்றுக்கும் தெளிவான விருத்தியுரையெழுதினார். இவர் அதிவீரராமபாண்டியன் இயற்றிய தமிழ்க் கூர்மபுராணத்துக்கும் அரியதோருரை எழுதியுள்ளார்.

புலவர்களுக்கு ஔடதமெனப் போற்றப்படும் நைடதத்துக்கு ஓர் ஆராய்ச்சியுரையெழுதிய பிள்ளையவர்களின் புலமையைப் பாராட்டாதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

[illegible] சைவமடங்களாலும் குறுநில [illegible]னாலும் புரவலராலும் பெரிதும் போற்றப்பெற்ற கதிரைவேற்பிள்ளை சதாவதானஞ் செய்யப் போகின்றாராம் என்னுஞ் செய்தி சென்றையிற் பரவியது.

அக்காட்சியைக் காண்பதற்கு வித்துவான்கள், கவிராயர்கள், பண்டிதர்கள், பிரபுக்கள், மடத்துத் தம்பிரான் சுவாமிகள் அன்றித் திறந்தாரெல்லாரும் சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் நிறைந்திருந்தார்கள்.

இதுகாறும் உரையெழுதுவதிலும் கட்டுரை எழுதுவதிலும் புராணப் பிரசங்கஞ் செய்வதிலும் சொற்பொழிவாற்றுவதிலும் தலைசிறந்து விளங்கிய பெரியார் 1907 ஆண்டிற் சதாவதானமுஞ் செய்து சதாவதானம் கதிரைவேற்பிள்ளையெனப் பெயர் பெற்றார். பெருமகனாரின் பணிகளில் மிக முக்கியம் வாய்ந்தது அகராதிப் பணியே. பிள்ளையவர்கள் செய்த பெயரகராதி பல பதிப்புக்கள் வெளிவந்தன.

மேலைப் புலோலி நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் பதிப்பித்த அகராதியே இற்றைவரை வெளிவந்த அகராதிகளுள் தலைசிறந்தது. அவர் நிரம்பிய புலமையும் புத்திக் கூர்மையும் அபூர்வஞானமும் படைத்தவர். அவரைப் போன்ற விவேகிகளை இக்காலத்திற் காண்பதரிது. அவர் கல்வி கற்பித்தலும் பிரசங்கஞ் செய்வதிலும் நூல்களை எழுதி அச்சிற் பதிப்பதிலும் இணையற்றவர்.

இவ்வாறு தமிழ்மொழிக்கும் சைவத்திற்கும் அரும்பெரும்பணிகள் ஆற்றிய பெருமானார். 1907 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பதின்மூன்றாம் திகதி தமிழ் செவ்வாய்க்கிழமை அகண்டாகாரப் பொருளாஞ் சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

அம்பலவாணர் துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். சொவ்ட்லொஜிக் காட்சியறையில்

ஒளிமயமான சொவ்ட்லொஜிக் புத்தாண்டு

25% வரையிலான புத்தாண்டு தள்ளுபடிகள்

இன்றே விரையுங்கள்!!!

➤ ஒவ்வொருவரும் வெற்றியாளர்களே!
➤ 100 மில்லியன் பெறுமதியான விலைக் கழிவுகள் மற்றும் இலவச வெகுமதிகள்.

SAMSUNG
Panasonic VIERA




Pay As You Use with Softlogic's easy payment plans and Hire-Purchase schemes

0% Interest Free 12 - 60 months with all leading banks

(சி/2783)

softlogic
BEST IN THE BUSINESS

இல. 63, கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 5671108, 0777 397770

## பொலிஸார் மக்களுடன் நல்லுறவை பேணவேண்டும்

(தும்பளை)

தண்ணீரும் மீனும் போலவும் குழந்தையும் தாயும் போலவும் மக்களும் பொலிசாரும் நல்லுறவு கொண்டிருந்தாலே அசம்பாவிதங்களை தவிர்த்துக் கொள்ளமுடியும் என பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்று பருத்தித்துறை சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஜே/401 கிராம அலுவலர் பிரிவிற்கான சிவில் பாதுகாப்புக் குழுவின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில், பருத்தித்துறை பிரதேசத்தில் மதுபானசாலை அமைந்துள்ள இடத்தில் சனநெருக்கடியும் போக்குவரத்து நெருக்கடியும் இருப்பதால் மதுபானங்களை வாங்கி வீதியோரகளில் அருந்திய 45 பேரை கைது செய்து நடவடிக்கை எடுத்தோம்.

இவ்வாறு இடம்பெறும் பல்வேறு வகையான அசம்பாவிதங்களை தீர்க்கும் ஒரு நடவடிக்கையாகபொலிசாரினதும் பொது மக்க ளினதும் நல்லுறவு அமையும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-3-19)

நீரிழிவு நோயாளர்களே!
உங்கள் கவனத்திற்கு
100% Pure Natural Products Ayurvedic Herbal Sidda

உங்கள் நோயை கட்டுப்படுத்தும் இயற்கை மூலிகை மருந்துவகைகள் உணவு வகைகள்

இலங்கை ஆயுள்வேத மருத்துவ சபையின் அங்கீகாரம் பெற்ற தயாரிப்புக்கள்

(சி/2754)

டயபோஷா
உணவுக்கலவை

நாவல் கோப்பி மதுமேக கப்சூல் குறிஞ்சா பவுடர்

உங்கள் வீடுகளுக்கு கொண்டுவந்து வழங்கப்படும்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

தொடர்புகளுக்கு- 0114 651 199
0777229080 0214 920 920

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மத்திய கல்லூரியின் புவியியல் ஆசிரியரும்
வேத சிவாகமப் பணிகளில் முன்நிற்பவருமான
சுன்னாகம் - மயிலணி
பிரம்மஸ்ரீ
**நாகேஸ்வர சர்மா சிவசங்கர சர்மா**
அவர்கள் 22.03.2013 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்செய்துகொண்டதையிட்டு பெருமகிழ்வடைவதோடு மேலும் அவரது சேவை வளம் பெற வாழ்த்துகின்றோம்.

'நீர்வை மணி ' ஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்
நீர்வேலி. (2235) - குடும்பத்தினர்



QP மூலம்
சவுதி அரேபியாவுக்கு
பலதியா
சுத்தீகரிப்பாளர்கள்

உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையிலிருந்து பயணிக்க
பணம்தேவையில்லை

சம்பளம் - SR 650/- (1 SR = Rs.35/-)

பயணத்திற்கான செலவு மாத சம்பளத்திலிருந்து அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 38,500/- அறவிடப்படும்.

AL/1316 Advt:/04/13

Terms & Conditions:

- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 3 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபிய சட்டத்திற்கு உட்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்களுடன் உடன் நேரே வரவும்.

(சி/2781)

தொடர்புகளுக்கு: 0112 681515 / 0112684433


QP Employment (pvt) Ltd,
No.06, Campbell Terrace, Punchi Borella, Colombo 10.
Tel: 0112 681212, 2684433, 2681515. e-mail: admin@qpjobsonline.com

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>8இல் செவ்.<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. நில அளவையாளர் (UK-PR)<br>தொ.இ: B -1448 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 58.5<br>உயரம்: 155 செ.மீ<br>தகைமை/தொழில்: BA, Teacher<br>தொ.இ: G -1467 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா. 67, 7இல் செவ்.<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: வங்கி உதவியாளர்<br>தொ.இ: B -1450 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5' 2"<br>2இல் செவ்<br>தகைமை/ தொழில்: BA, நூலக டிப்ளோமா, நூலக ஆசிரியர்<br>தொ.இ: G-1469 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 9.75<br>உயரம்: 5' 11"<br>தகைமை/தொழில்: BSc, Software Engineer<br>தொ.இ: B -1451 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>12இல் செவ்.<br>உயரம்: 150 செ.மீ<br>தகைமை/ தொழில்: O/L.அறநெறி பாடசாலை ஆசிரியர்<br>விவாகரத்துப் பெற்றவர்<br>தொ.இ: G -1470 |
| பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: விவசாயம்<br>விவாகரத்துப் பெற்றவர்<br>தொ.இ: B -1454 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>தகைமை/ தொழில்: MSc<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -1477 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வல்வெட்டித்துறையில் 13 வல்லுறவு சம்பவங்கள் இவ்வாண்டு பதிவாகின

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தகவல்

(கரவெட்டி)

வடமராட்சி வல்வெட்டித்துறை பிரதேச பொலிஸ் பிரிவில் இவ்வருடம்13 பாலியல் வல்லுறவு, 5 மீற்றர் வட்டி, 4 கொள்ளைச் சம்பவங்கள் என்ற குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் இடம் பெற்ற பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர்களை தாம் உடனடியாக கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பாரிய குற்றச்செயல்களை தடுப்பதற்கு மக்கள் தமக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவ்வாறு ஒத்துழைக்கும் போது இவ்வாறான குற்றச்செயல்களை தடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட சமூக பிரதிநிதிகள் சிலர் பொலிஸாரின் செயற்பாடுகள், அச்சுறுத்தல்களை கண்டு மக்கள் அச்சமடைவதனாலேயே பொலிஸாருக்கு தகவல் வழங்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் கலந்து கொண்டவர்கள் தமக் குள்ளே பேசிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. (அ-3-24)

## வடமராட்சியின் சில பகுதிகளில்

# 25 தனியார் வீடுகளில் இராணுவ முகாம்கள்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதேசங்களில் 25 இராணுவ முகாம்கள் தற்பொழுது தனியார் வீடுகளில் இயங்கி வருவதாக தெரிய வருகின்றது.

இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின் பின் யாழ். மாவட்டத்தில் அதிகளவான தனியார் வீடுகளில் இருந்த இராணுவ முகாம்கள் படிப்படியாக அகற்றப்பட்ட போதும் மேற்படி பிரதேசங்களில்இராணுவ முகாம்கள் தனியார் வீடுகளில் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

இதில் அதிகளவான வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளை மீள முடியாமல் தொடர்ந்தும் பல அரச அதிகாரிகளின் அலுவலங்களுக்கு மகஜர்களை கையளித்து வருகின்றனர்.

இருந்தபோதும் இன்னமும் இராணுவ முகாம்கள் அகற்றப்படாமையால் வீட்டு உரிமையாளர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சி வடக்கு ஒருங் கிணைப்பு குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக பலமுறை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-3-24)

# அழுகிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறு பகுதியில் அழுகிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் வல்வெட்டித்துறை பொலிசாரால் நேற்று முன்தினம் மதியம் மீட்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி நாவலடிப் பகுதியை சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர் கடந்த இரண்டு வருடங்களாக குடும்பத்தினரை பிரிந்து தொண்டைமானாறு காட்டுப்புல பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்து வந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை முதல் நடமாட்டம் காணப்படாமையால் தொண்டைமானாறு காட்டுப்புல பகுதிக்கு சென்று உறவினர்கள் தேடிய சமயம் வீட்டிற்குள் இருந்து துர்நாற்றம் வீசியது.

இதனையடுத்து வல்வெட்டித்துறை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் வீட்டிலிருந்த சடலத்தை மீட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் சரவணகுட்டி உதயசூரியன் (வயது 54) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# யாழ்ப்பாண மாநகரசபையில் ஆளும் எதிர்க்கட்சியினர் வாக்குவாதம்

## துப்பாக்கிதான் உங்களுக்கு சரி என கூறினார் மாநகரசபை முதல்வர்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் அதிருப்தி வெளியிட்டதையடுத்து முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உறுப்பினரை நோக்கி துப்பாக்கிதான் உங்களுக்கு சரி என காட்டமாக கூறியதோடு கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டார்.

இதனால் சபை நடவடிக்கைகள் சில நிமிடங்கள் குழப்பமடைந்ததோடு சலசலப்பும் ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப்பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் முதல்வர் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்திலும் யாழ்.மாநகர சபையினால் கடந்த மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் பல்லூடகத்தில் காண்பிக்கப்பட்டது.

இதனை அடுத்து முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவினால் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தினை கோபப்படுத்தும் நோக்குடன் இங்கு பல்லூடகத்தில் காண்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் உறுப்பினருக்கு சமர்ப்பணம் என கூறப்பட்டது.

இவ்வாறு முதல்வர் கூறியதை அடுத்து உறுப்பினர் விந்தனுக்கும் முதல்வருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. இதன்போதே முதல்வரினால் உறுப்பினரை நோக்கி உங்களுக்கு துப்பாக்கிதான் சரி என கூறினார். இதற்கு பதிலளித்த உறுப்பினர் விந்தன் எங்களுக்கு துப்பாக்கி தூக்க தெரியும். கடந்த 30 வருட கால இருண்ட யுகத்திற்கு எங்களை அழைத்துச் செல்ல நீங்கள் முற்பட்டால் அதற்கு நாமும் தயாராகத்தான் உள்ளோம் என காட்டமாக பதிலளித்து முதல்வருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அண்மையில் யாழ்.செம்மணி பகுதியில் வீதியின் ஓரமாக மதகு அமைப்பதற்காக வெட்டப்பட்டிருந்த குழிக்குள் விழுந்த 2 இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த விபத்து சம்பவத்தை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தனினால் யாழ்.மாநகர சபையின் ஆளும் தரப்பிற்கு எதிராக கண்டனம் வெளியிடப்பட்டிருந்தது.

அதில் யாழ்.மாநகர சபையை ஆளும் கட்சி சுடுகாடாக மாற்றி வருகிறது என குறிப்பிட்டிருந்தார். அத்தோடு நாயன்மார் கட்டு பகுதியில் தற்போது பாரிய குழி ஒன்று ஓலைகளால் மூடப்பட்ட நிலையில் உள்ளதாகவும் அதிலும் உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது எனவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலும் சுட்டிக்காட்டியிருந்தார். (அ-6-3)

# பரு. பேருந்து சாலைக்கு நல்ல பேருந்துகள் இல்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இ.போ.ச சாலையில் நல்ல நிலையிலான போதிய பேருந்துகள் இல்லாமையால் போக்குவரத்துக்கள் செய்யும் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தற்போது சேவையில் ஈடுபடும் பேருந்துகள் பல பழுதடைந்த நிலையில் இருப்பதனால் உத்தியோகத்தர்கள் மற்றும் பயணிகள் தமது கடமைகளுக்கு உரிய நேரத்திற்கு செல்லமுடியாமல் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பேருந்துகளில் தூர இடங்களுக்கு பயணிக்கும் பயணிகள் பேருந்து பழுதடைந்ததும் வீதிகளில் இறங்கி மாற்று பேருந்துகளில் பயணிக்க வேண்டிய அவல நிலை உள்ளது.இதனால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் பருத்தித்துறை பேருந்துசாலைக்கு சேவையில் ஈடுபடக் கூடிய நல்ல பேருந்துகளை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-10)

# தனியார் வீட்டிலுள்ள இராணுவ முகாமை அகற்றித் தாருங்கள்

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறு சின்னக்கடற்கரை பகுதியில் உள்ள தனியார் வீட்டில் இயங்கி வரும் இராணுவ முகாமை அகற்றித் தருமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அப்பிரதேச மக்களின் பிரதிநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அம் மக்களின் பிரதிநிதி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் யுத்தம் நிறைவடைந்த பின் அதிகளவான தனியார் வீடுகளில் இருந்து இராணுவ முகாம் அகற்றப்பட்ட போதும் தொண்டைமானாறு சின்னக்கடற்கரை வீதியில் உள்ள தனியார் வீட்டில் இயங்கி வரும் இராணுவ முகாமை அகற்றித்தர வேண்டும் என அக்கூட்டத்தில் அப்பிரதிநிதி வேண்டுகோள் விடுத்தார். (அ-3-24)

# உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை கற்பக விநாயகர் கலை யரங்கில் கு.சாரங்கசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் வைத்திய கலாநிதி திருமதி விமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் ஓய்வு நிலை ஆசிரியர் எம்.ஆர். நரேந்திரா, பாடசாலை அதிபர் அ.அருணந்திசிவம், பாடசாலையின் உப அதிபர் க.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)




# வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

(தும்பளை)

நெல்லியடி மாலுசந்தியில் இருந்து அல்வாய் முத்துமாரியம்மன் கோவில், நாவலடி, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கான போக்குவரத்து பாதை நீண்டகாலமாக திருத்தப்படாதுள்ளது.

குறிப்பாக நாவலடிக்கும் மாலுசந்திக்கும் இடையேயான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதுடன் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இவ் வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இவ் வீதியை புனரமைக்க ஆவன செய்ய வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் 1 பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் தடுப்பூசி வழங்கும் நடமாடும் சேவை கடந்த 20 ஆம் திகதி முதல் குறித்த தினங்களில் இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இத்திட்டத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணி வரையும் குருநகர் சனசமூக நிலையம் முன்பாகவும் அன்றைய தினம் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை பான்சால் வீதி, 3 ஆம் குறுக்குத்தெரு சந்தி பகுதியிலும் நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரை புதுமைமாதா கோவிலிற்கு அண்மித்த பகுதியிலும் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை யூபிலி மகப்பேற்று நிலையத்திலும் விலங்கு விசர் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. (அ-5)

# மோட்டார் சைக்கிள்கள் நான்கை ஆளுநர் வழங்கினார்

சுகாதார பரிசோதகர்கள் சுகாதார மேம்பாட்டினை துரிதமாக மேற்கொள்ளும் வகையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் நான்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநரின் பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது வடமாகாண ஆளுநர் மேற்படி மோட்டார் சைக்கிள்களுக்கான ஆவணங்களினை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் வழங்கி வைத்துள்ளார். (அ-2)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் இல. 120 , 3 ஆம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு 01.04.2013 தொடக்கம் வாடகைக்கு உண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
(இ) 0776055555

## விற்பனைக்கு

தாவடி வன்னியசிங்கம் வீதியில் 1 1/2 பரப்பு காணி மற்றும் 5 KW டீசல் இஞ்சின் (கறுப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
0772105803 (2336)

## வீடு வாடகைக்கு

தெல்லிப்பழை, துர்க்கையம்மன் கோவிலுக்கு அண்மையாக கே.கே.எஸ். வீதியிலிருந்து 350 யார் தூரத்தில் பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை ஆகியவற்றிற்கு அருகில் 7 பரப்பு காணிக்குள் அமைந்துள்ள நவீன வசதிகளுடன் உடன் குடியிருக்க உகந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
0777247868 (2225)

## தேவை

கொழும்பு சுற்றுப்புறம்/ யாழ்.போன்ற பிரதேசங்களில் கட்டட நிர்மாணத் துறையில் உடனடியான வேலைவாய்ப்புக்கள்.
மேசன் / கையுதவியாளர் பெயின்டர்/ பிளம்பர்/ எலக்றிசன்/ செடலின் பாஸ்/ தேவை 18-50 வயதினர் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் தொழில் அடிப்படையில் 18000, 45000,
தொடர்பு: 077561883 வவுனியா.

0775561883 உங்களுக்கு தொழில் இல்லாத பிரச்சினையா? எம்மிடம் நிரந்தர தொழில்கள் உண்டு. ஏற்றுமதி தொழிற்சாலைகளான (கொழும்பு பகுதியில்) ஜேம் / பிஸ்கட்/ சோஸ்/ கிளவுஸ்/ PVC/Fram/ஆடைத்தொழிற் சாலைகள் போன்றவற்றுக்கு உற்பத்தி/ லேபல் / பொதியிடல் பிரிவுக்கு ஆண்-பெண் 17-50 வயதினர் சம்பளம் 18000, 20000, 25000, 32000 உணவு தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளன்றே வேலை (நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியினர்) ஒரே தொழிற்சாலைகளில்.
தொடர்பு: 0775561883

யாழ். கொழும்பு பிரதேசங்களில் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. வயது 20-55 உணவு தங்குமிடம் சகாய விலைகளில் சம்பளம் 15000/=, 18000/=, 25000/=, 35000/= விரைவாக அழையுங்கள்.
தொடர்பு: 0775561883 வவுனியா (சு/2777)

## UNIVERSITY OF JAFFNA
INVITATION FOR BIDS

### CONSTRUCTION OF SINGLE STOREY SEMI PERMANENT LECTURE HALLS FOR THE UNIVERSITY OF JAFFNA.

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| Bid ID | Description of Work | Estimated Cost | Contract Period | Minimum Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| YA/CWP/ ADI/ 2013-01 | Construction of single storey Semi Permanent Lecture Hall for The Faculty of Medicine | Rs.10.0 million | 90 Calander Days | C6 | Rs. 100,000.00 | 7th August 2013 |
| YA/CWP/ ADI. 2013-02 | Construction of single storey Semi Permanent Lecture Hall for The Faculty of Science. | Rs.10.0 million | 90 Calander Days | C6 | Rs. 100,000.00 | 7th August 2013 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
   Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 25.03.2013 until 08.04.2013** from **9:00 hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees two thousand five hundred **(Rs.2,500/-)** for each bid.
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 09.04.2013 or be deposited in the tender box kept in the Registrar's office.** Bids will be opened immediately thereafter **on 09.04.2013** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period for **91 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of "**Vice Chancellor, University of Jaffna.**"
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.30 hrs on the 3rd April, 2013

**Vice- Chancellor,**
**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely,Jaffna.**
21.03.2013

(சி-2782)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசமற்ற தேசம் நோக்கி....

1882 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் நாள் றொபேட்கொச் (Robert Koch) என விஞ்ஞானி காசநோயினை ஏற்படுத்தும் கிருமி மைக்கோ பக்றீரியம் ரியுபகி லோசிஸ் (Mycobacteium tuberculosis) என நுணுக்குக்காட்டியினால் கண்டறிந்து உலகிற்கு கூறிய தினமே உலக காசநோய் தினமாக அனுஷ்டிக்கப்பபடுகின்றது. இக் காலப் பகுதிகளில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பியாவில் ஏழு பேருக்கு ஒருவர் காசநோயினால் மரணித்துக் கொண்டிருந்தனர்.



இற்றைக்கு ஏறத்தாழ 8000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்திய மம்மிகளில் (Mummies) இக்கிருமி காணப்பட்டது. இது காசநோய்க் கிருமியின் உலக காலநிலை மாற்றங்களுக்கும் தப்பி உயிர்வாழும் தன்மையைக் காட்டுகின்றது.

இலங்கையில் 2012 ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 342 பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். இதே அளவு காசநோயாளிகள் 2013 ஆம் ஆண்டு பாதிக்கப்படக்கூடிய நிகழ்தகவு உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு 348 பேரும் 2010 ஆம் ஆண்டு 420 பேரும் 2011 ஆம் ஆண்டு 354 பேரும் 2012 ஆம் ஆண்டு 319 பேரும் காசநோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் போலவே இவ் வருடமும் உலக காசநோய் தினத்தின் தொனிப்பொருள் எம் வாழ்நாளில் காசத்தினை இல்லாது செய்வோம் என்பதே ஆகும். காசநோய்க் கட்டுப்பாட்டில் முக்கியமான செயல்கள் நோயாளிகளை நேர்காணல், நோயாளிகளுடன் தொடர்புடையவர்களைப் பரிசோதித்தல், மருந்துகளை இடையில் கைவிட்டவர்களை மீளவும் ஒழுங்காக மருந்தினை எடுப்பதற்கான நடவடிக்கையினை எடுத்தல், காசநோய் அதிகமுள்ள பிரதேசங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் விசேட கவனம் செலுத்துவர். சலரோக நோயாளிகளில் காசநோயின் அறிகுறிகளை ஆராய்தல், முதியவர்களில் காசநோய் அறிகுறிகளை ஆராய்தல் என்பன வேலை செய்யும் இடங்களில் காசநோய் அறிகுறிகளுக்கு விசேட மருத்துவ பரிசோதனையை ஊக்குவித்தல் வேண்டும். காசநோயின் அறிகுறிகளாக தொடர்ச்சியாக 2 கிழமைகளிற்கு மேற்பட்ட இருமல், உடல் மெலிதல், மாலை நேரக்காய்ச்சல், சளியுடன் இரத்தம் வெளிவரல்,

## இன்று உலக காசநோய் தினம்

உணவில் விருப்பம் இன்மை, இரவில் வியர்த்தல் என்பன காணப்படலாம். இத்தகைய அறிகுறியுடையோர் மருத்துவரை அணுகி, சளிப்பரிசோதனை மூலம் தமக்கு காசநோய் தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் மிக அவசியம். காசநோய் பரம்பரை நோயல்ல. சுவாசம் மூலம் பரவும் ஒரு தொற்றுநோயாகும். காசநோய் முற்றாக, இலகுவாகக் குணப்படுத்தக்கூடிய நோயாகும். காசநோய் வராது தடுக்கப்படக்கூடிய நோயாகும். காசநோய் தொடர்பான சமூக நாணத்தினை அகற்ற இவை விழிப்பூட்டப்பட வேண்டியவை.

உலகில் காசநோயினை இல்லாது செய்வதற்கு 4 படிகளில் நாம் வெற்றி அடைய வேண்டும். முதலாவதாக காசநோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கையினை பூச்சியமாக்கல் வேண்டும். இரண்டாவதாக் காசநோயினால் பாதிப்புக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கையினை பூச்சியமாக்க வேண்டும். மூன்றாவதாக காசநோயின் தாக்கத்திற்கு உள்ளாகுவோரை பூச்சியமாக்கல் வேண்டும். நான்காவதாக காச நோய்த்தொற்று ஏற்படுத்துபவர்களின் எண்ணிக்கையினைப் பூச்சிய மாக்கல் வேண்டும்.

காசநோய் தொடர்பான விழிப்பினை நாம் பொதுமக்களுக்கு வழங்கல் வேண்டும்.

மருத்துவர்களுக்கும் மருத்துவ சேவை வழங்குநர்களுக்கும் விசேடமாக வழங்க வேண்டும். இதன் மூலம் சர்வதேச தரத்திலான பராமரிப்பினை காசநோயாளிகளுக்கு நாம் வழங்கமுடியும்,

உலக காசநோய் தினம் ஒவ்வோர் வருடமும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

சோமசுந்தரம் ரூபதாஸ்
பொது சுகாதாரப்பரிசோதகர்,
மார்புநோய்ச் சிகிச்சை நிலையம்,
யாழ்ப்பாணம்.

# வாழ்நாளில் காசநோயை இல்லாதாக்குவோம்

உலகத் சனத்தொகையில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் காசநோயை ஏற்படுத்தும் மைக்கோ பக்றீரியம் ரியூபோகுளோசிஸ் (Mycobacterium tubercuiosis) எனும் வெற்றுக் கண்ணுக்குத் தென்படாத நுண்ணங்கியின் தொற்றுக்குள்ளாகின்றனர். ஏறத்தாழ 95%மான நோயாளிகள் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற பல்வேறு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வாழ்கின்றனர். என்பு, சிறுநீரகம் போன்ற அங்கங்களை காசநோய்க் கிருமி பாதித்தாலும் 90% நோயாளிகள் சுவாசத் தொகுதியை பாதிக்கும் காசநோய்த் தாக்கம் உள்ளவர்களாக உள்ளனர்.

ஒரு சந்ததியிலிருந்து மற்றொரு சந்ததிக்கு பரம்பரைக் காரணிகளால் காசநோய் கடத்தப்படுவது இல்லை. எனவே காசநோய் ஒரு பரம்பரை நோய் இல்லை. பெரும்பாலும் இது சுவாசத் தொகுதி அங்கங்களில் காற்றின் மூலம் தொற்றிக் கொள்ளும். மேற்குறிப்பிட்ட நுண்ணங்கியால் ஏற்படுகின்றது. மேற்படி மைக்கோ பக்றீரியம் ரீயூபோ குளோசிஸ் எனும் பக்றீரியா நோயாளி பலமாக இருமும் போது தும்மும் போது சிறிய சளித் திரவத் துணிக்கைகளினூடாக காற்றில் விடப்படும். இக்கிருமிகளுடன் காணப்படும் திரவத் துணிக்கைகளை சுகதேகியான ஒருவர் சுவாசிக்கும் போது அவரின் உடலினுள் இலகுவாக இக்காசநோய்க் கிருமிகள் தொற்றலடைகின்றன.

காசநோய்க் கிருமியை உட்சுவாசிக்கும் அனைவருக்கும் இந்நோய் ஏற்படுவதில்லை, அதாவது ஒருவரின் உடலின் நோயெதிர்க்கும் ஆற்றல், போசன மட்ட நிலை, சுகாதார பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, உடற் திணிவுச் சுட்டி, உட்செல்லப்படும் கிருமிச் செறிவு, BCG வக்சின் ஏற்பட்ட




நிலை போன்ற காரணிகள் நோயேற்படுவதற்குரிய சந்தர்ப்பத்தை தீர்மானிக்கும் சில காரணிகளாக கருதப்படுகின்றன.

காசநோய்க்குரிய கிருமிகள் நேரடிச் சூரியஒளியில் இறக்கும் ஆற்றலுடையன. எனினும் போதிய வெளிச்ச வசதிகள் இல்லாத வீடுகளில், அறைகளில், லொஜ்ஜில் வசிப்பவர்களில் இந்நோய் ஏற்படும் சாத்தியம் அதிகம். போதிய காற்றோட்டம் காணப்படுமிடத்து கிருமி காற்றில் செறிவாக காணப்படாது. பொதுவாக புதிய கட்டட நிர்மாணங்களில் சுகாதார வைத்திய அதிகாரியின் மூலமாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் காற்றோட்ட வெளிச்ச வசதிகளுக்குரிய அறிக்கையை சமர்ப்பிப்பது தற்போதும் இலங்கையில் நடை முறையில் இருந்து வருகின்றது. எனவே, நகரமயப்படுத்தப்படும் கட்டட நிர்மாணங்களில் போதிய காற்றோட்ட வெளிச்ச வசதிகளை கருத்தில் கொள்வதனால் காசநோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.

### காசநோயின் அறிகுறிகள்

இரண்டு அல்லது மூன்று கிழமைக்கு மேலாக தொடரும் இருமல் இருமும் போது சளியுடன் இரத்தம் வெளியேறுதல், இரவு நேரத்தில் மெல்லிய காய்ச்சலும் வியர்த்தலும் உணவில் விருப்பமின்மை, உடல் நிறை குறைதல், இளைப்புப் போன்றவற்றை கருத்தில் கொள்ளலாம்.

எனினும் காசநோயை மேற்படி அறிகுறிகளுடன் சளிப் பரிசோதனை அல்லது மன்று தோல் பரிசோதனை அல்லது எக்ஸ்கதிர் பரிசோதனை அல்லது சளிப்படல வளர்ப்பு (களிச்சல் பரிசோதனை) மூலம் உறுதிப்படுத்த முடியும். காசநோய் என உறுதிப்படுத்திய நோயாளிகள் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மருத்துவ சிகிச்சையை பெற்று வந்தால் பூரணமாக காசநோயில் இருந்து குணமடைந்து விடலாம். பெரும்பாலான நோயாளர்கள் கிரமமாக சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று மாத்திரைகளைப் பெற்று குணமடைந்துவிடுகின்றார்கள். எனினும் கிரமமாக மாத்திரைகளை பெறாது இடையில் சிகிச்சையை கைவிடுபவர்கள் பல்வகையான மாத்திரைகளுக்கு எதிர்க்கும் ஆற்றல் உடைய காசநோயை (MDRTB) பெற்றுவிடுவதனால் இவர்களுக்கு மேலதிக சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டி ஏற்படும். கிரமமாக மாத்திரைகளை உட்கொள்ளும் போது சிலரில் ஏற்படும் அசௌகரியங்களை வைத்தியரிடம் தெரிவித்து ஆலோசனையை பெறுதல் வேண்டும்.

### காசநோய் பரவுவதைக் குறைக்கும் வழிமுறைகள்

நோயாளி இருமும் போது கைக்குட்டை பாவித்தல், புகைப் பிடித்தலை தவிர்த்தல், பொது இடங்கள், அலுவலங்களில் புகைப்பிடித்தல் தடைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பின்பற்றல், இருமும் போது வெளிவரும் சளியை கண்ட கண்ட இடங்களில் துப்பாது பாத்திரத்தில் தும்பி அதனை புதைத்தோ அல்லது எரித்தோ அகற்றுதல், இளைப்பு மற்றும் நீண்ட காலமுள்ள கடுமையான சுவாச நோய்கள் காசநோய் ஏற்பட ஏதுவாக அமையுமென்பதால் அவ்வாறான நோய்களை நல்ல முறையில் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளல், சிறந்த போசனையான உணவுகளை உண்டு நோயெதிர்ப்புத் தன்மையை அதிகரித்தல் வேண்டும். உதாரணமாக நோயெதிர்ப்புத் தன்மையை குறைந்த Aids நோயாளி இலகுவில் காசநோய்த் தொற்றுக்குள்ளாகின்றனர். நாம் அறிந்த விடயங்களை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி ஒற்றுமையாக காசநோயை வாழ்நாளில் இல்லாதொழிக்கப் பாடுபடுதல் காலத்தின் தேவையாகும்.

வை.பிறேமகுமார்
முன்னாள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்
கொழும்பு தேசிய வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



### ஈரம்

தூக்கத்தின் கனதியில்- விழியில்
துளிர்க்கும் ஈரம்
கன்னத்தை தாண்டி
கடலை சேரத்துடிக்க
தலையணை கண்ணீரை
தத்தெடுக்க முடியாமல்
விழிநீரின் நதியில்
விலையான வாழ்வு
உறக்கத்தை கூட
உவந்தளித்திட மறுக்குது!
கனவுகளின் காயங்கள்
கண்விழித்தால்
கலைவாழ்வின் வலிகள்
அத்தனையும் விழியில்
ஈரமாய்...!

க.அனுசா
வற்றாப்பளை

### என்னவள்

கண்டேன்
பசும்புல் அடைகாக்கும்
பனித்துளியை
இரவின் பனிக்குளியலை
துவட்டிக் கொள்ளாத
இளம் ரோசாவை
வானவில்லின்
சாயம் தீட்டிய
வண்ண விழிகளை
நடந்து வரும்
நந்தவனத்தில்
அசைந்து நிற்கும்
பூங்கொடியை
முகில்கள் முகம் துவட்டி
செல்லும்
முழுநிலவை
நரம்புகள் தெறிக்கும்
ஓசைகளற்ற
சங்கீதத்தின் சாரலை
அவள்தான்
என் காதலி

ஆர்.எஸ்.ஆனந்தன்
பருத்தித்துறை

### பிரிவுத் துளிர்கள்

கனவென்னும் நினைவில் நான்
பாடசாலை வாழ்க்கை அது
கண்கொள்ளாக் காட்சி
அந்த நாட்களின் பொழுது
நினைக்கத்தான் தூண்டுகிறது
வாழ்வெனும் அரங்கில்
கண்ணீராய் வடியுது
பாடசாலையின் நினைவலைகள்
தினம் தினம் பல தடவை
கேட்கும் குரல் ஓசைக்கு
அன்றெல்லாம் பழகிப்போய் இருந்தாலும்
இனி அக்குரலைக் கேட்காதிருக்க முடியாது
பள்ளிப் பருவத்தின் நினைவுகளை
துடைத்தெறியத்தான் முடியாது- இது
காலத்தின் கோலமா? அல்லது
இறைவனின் திருவிளையாடலா?
புரியவில்லை எனக்கு

எஸ்.மிதுசிகா
தம்பசிட்டி

### இமயம் தொட...

நீ செல்லும்
பாதைகள் பலவிருக்கும்
உன் பாதையினை
நீயே தீர்மானித்துக்கொள்
வேகம் கொண்டெழுவதிலும்
விவேகத்துடன் செயற்படு
ஊர் என்ற சொல்லை
உனதாக்கு
உன்னை ஊர் தனதாக்கும்

மாவை. நா. கஜேந்திரன்

### முற்றத்து மல்லிகை

என்வீட்டு முற்றத்து மல்லிகை
மலருகின்ற பொழுதெல்லாம்
உன்னைத்தான் தேடுகிறேன்
நானும் என் இதயமும்
ஏன் தெரியுமா?
மல்லிகைப் பூச்சூடி ம(ன)ணம் வீசி
வந்து- என்னை நீ!
உன் வசப்படுத்தியவள்
என்று எனக்குத்தானே தெரியுமடி!
மல்லிகைப் பந்தலும் இப்போது
மலர மறுக்கிறது- மலர்ந்தாலும்
மணம் கமழ மறுக்கிறது!ஏன் தெரியுமா?
நீ என்னருகில் இல்லை என்பது
எனக்கு மட்டுமல்ல
என் வீட்டு முற்றத்து மல்லிகைக்கும்
தெரிந்துவிட்டது
என்பது உனக்குத் தெரியுமா?

எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய் வடக்கு

# மௌனத்தின் தேடல் - 148



### இறைவனிடம் ஆசி பெறுக!

கண்மூடி விழிப்பதற்குள்
கடுகதி ஓட்டம்
விண்ணுக்கு விடுமென்று
தெரியாத வேகம்
தண்டனைகள் கண்டீரே
தம்பியரே நீவீர்
கொண்டீரே மனதுக்குள்
இறைவனிடம் ஆசி

விஜய. றபின்சன்
புன்னை நீராவி

### யார் காரணம்

வாழவேண்டிய வயதினிலே
வழிதவறி விழுவதற்கு
யார் காரணம்
வீதியின் சீர்கேடா இல்லை
விரைவான ஓட்டமா?

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

### நிறுத்தி விடு

வயதுத் துடிப்பின்
வலிமையால்
வீதி வழியே விளையாடி
விபரீதம் தேடும்
வாலிபமே!!
வலியோடு சுமந்த
வாழ்வை தேடியலையும்
பயணத்தை நிறுத்திவிடு

ஜெ.கிஷோக்குமார்
அல்வாய்

### போதை

நாட்டின் வசந்தம் தோன்ற
இளைஞரின் வாழ்வில்
போதையின் ஆதிக்கம்
தலைவிரிக்க கண்மூடித்தனமான
ஓட்டத்தால் தங்கள் வாழ்வினை
கெடுப்பதுதான் ஏனோ?

ஷாலுகா
யாழ்ப்பாணம்

### இளைஞர்களே!

கலையாத கனவோடு
அலைமோதும் ஆசைகள்
வலைவீசும் வயதினிலே
மலைபோல சாயும்
விலைமதிப்பற்ற உங்களை
நிலைமாற வைக்கும்
கொலைகார விபத்திற்கு
தலைசாய்த்துதானோ
தலைக்கசவம் அணியவில்லை

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### சிந்தித்து செயற்படு

இளைஞனே!
உனது இளமையையும்
துடிப்பையும் துணிவையும்
காட்டும் நேரம்
இதுதானா...?

ஞா.வதனி
குருநகர்

### நாளைய நிலை

நாகரிகம் என்ற போர்வையில்
நாதாரித்தனமாய் நானிலம்
சுற்றிவரும் இளைஞர்களுக்கும்
நாளைய நிலை இதுதான்
புரிந்துகொண்டால் இளைஞர்
சமுதாயம் உயிர் பிழைக்கும்

பா.அனு
கொற்றையூர்

### அவசரம் வேண்டாம்

இளைஞர்களே!- ஏன்
இந்த ஆவேசம்
உங்களில் மறைந்திருக்கும்
வீரத்தை காட்டவோ
இடமில்லை
வீதியில் இப்படி
விளையாடுகிறீர்களே

இ.வதனி

### வேகமும் விவேகமும்

வீதி விசாலமானதும்
விபத்துக்களின் வேகமும்
அதிகரித்து விட்டன
திருத்தங்கள் முடியாததும்
திரைப்படங்களில் வரும்
திகில் காட்சிகளாலும்
ஓடுவதற்கல்ல...
பறப்பதற்கென்ற
விளம்பரங்களின்
வசீகரிப்பாலும்
தூக்கி வீசப்படுகின்றனர்

அரு.கனகராசா

### புரிந்து கொள்ளுங்கள்

வாகனத்தின் விதிமுறைகள்
தவறினால்
விபத்து ஏற்படும்
வாழ்க்கையின் விதிமுறைகள்
தவறினால்
விபரீதம் ஏற்படும்

கெ.நிவேதா,
யாழ்ப்பாணம்

### வாழ்க்கையை சிதறடிக்காதீர்

விலை மதிக்க முடியாத உயிரை
வீதியில் பணயம் வைத்து
இடைநடுவே தடம்புரண்டு
வாழ்க்கையை சிதறவிடாதீர்- எம்
எதிர்கால சிற்பிகளே

குபேரநிலா
மட்டுவில்

### அவதானம்

அபிவிருத்தி வந்ததால் அகமகிழ்ந்து
ஊர்கள் சிறக்க!
அநியாயமாய் எங்கள் இளசுகள் அழிந்து
நாளொன்றாய் சாகிறது!
ஏனிந்த அழிவு எங்கள் சனத்துக்கு
அவதானத்துடன் பயணித்தால்
இவைகள் வருமா

க.முத்துராசா
கட்டைக்காடு

### எமனைத் தேடி

உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
உறங்க இடமின்றி
உயிரை விட்டான் ஒரு மகன்
இன்னொரு மகனையும்
இழக்க எந்தத் தாயால்
முடியும் மகனே

பா. சத்யா
அல்வாய்

### தறுதலைகளா?

தலைவிதிப்படியே
தலைக்கவசம் அணியாமல்
தலைகால் புரியாத
போதையில்
தரைநோக்கி
விழும் இவர்கள்
தறுதலைகளா?

த.மோகனரூபன்
யாழ். விக்டோறியா கல்லூரி
சுழிபுரம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -149



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 29.03.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

407

## கண்ணுக்குத் தெரியாத பரிசு



சுவர்ணபுரி ராஜாவுக்கு குழந்தைப் பாக்கியமே இல்லாததால் ராஜாவும் ராணியும் மிகவும் வருந்தினர். அவர்கள் செல்லாத தலங்களிலில்லை. செய்யாத தான தர்மங்களில்லை. அப்படியும் பல ஆண்டுகளாகக் குழந்தை பிறக்கவில்லை. கடைசியில் ஒருவாறு கடவுள் கண்ணைத் திறக்க ராணி வகுளாதேவி கருவுற்றாள்.

உரிய காலத்தில் ராணிக்குப் பெண் குழந்தை பிறந்தது. ராஜா, ராணியின் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. இராச்சியத்தில் மக்கள் அனைவரும் மிகவும் குதூகலத்தில் ஆழ்ந்தனர். நாடெங்கும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

குழந்தைக்கு ஒரு வயது பூர்த்தியானபோது ராஜா அதை மிக விமரிசையாகக் கொண்டாட நினைத்து மக்க்ள் அனைவரையும் விருந்துக்கு அழைத்தார். மன்னரின் இந்த அழைப்பினால் மக்களின் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது.

**அம்புலிமாமா கதைகள்**

தலைநகரில் செருப்புத் தைக்கும் தொழில்செய்து வந்த ராமு வும் மன்னரின் விருந்துக்குச் செல்ல ஆயத்தமானான். ஆனால் இளவரசியின் பிறந்த நாளுக்கு வெறு ங்கையுடன் விருந்துண்ண செல்லமுடியுமா? ஏதாவது பரிசு எடுத்துச் செல்லவேண்டாமா? அதைப்பற்றி ராமு ஏற்கனவே முடிவு செய்து விட்டான். விருந்துக்குச் செல்லும் சமயம் வரை கிடைக்கும் தினக்கூலியில் ஏதாவது ஒரு பரிசு வாங்கிச் செல்லத் தீர்மானித்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இளவரசி பிறந்த நாளன்று ஒருவருமே ராமுவிடம் செருப்புத் தைத்துக்கொள்ள வரவில்லை. அன்று கிடைக்கும் வருமானத்தில் ஒரு பைசா கூட தனக்கு எடுத்துக் கொள்ளாமல் பட்டினியாயிருந்தாவது அத்தனை பணத்திற்கும் ஒரு பரிசு வாங்கத் தீர்மானித்திருந்தவனுக்கு சோதனையாக'



அன்று ஒரு தம்படிகூட வருமானம் வரவில்லை. அதேசமயம் மன்னரின் விருந்துக்குச் செல்லாமலிருக்கவும் மனம் இடம் தரவில்லை. கடைசியாக மனத்தை ஒருவாறு சமாதானம் செய்து கொண்டு ராமு விருந்துக்கு சென்றான்.

அரண்மனையை அடைந்த சிவா அங்கு அவனைப் போலவே விருந்துக்கு வந்திருந்த பொது மக்கள் அனைவரும் தங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு பரிசுகளுடன் வரிசையாக நின்று அரசாங்க அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைத்த வண்ணம் இருந்ததைக் கண்டான். அதிகாரிகள் மக்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த பரிசுப் பொருட்களையும் ஒரு பெரிய குறிப்பேட்டில் பதிவு செய்து வந்தனர்.

ராமுவின் முறை வந்த போது அவன் அதிகாரியிடம் தன் பெயரைக் கூறிய பின் என் பெயருக்கெதிரே கண்ணுக்கு தெரியாத பரிசு என்று குறித்துக் கொள்ளுங்கள் என்றான்.

அதிகாரி தலை நிமிர்ந்து அவனை ஒரு மாதிரியாக பார்த்தார். என்னப்பா வெறுங்கையுடன் வந்துவிட்டு கண்ணுக்கு தெரியாத பரிசு என்று கதை விடுகிறாயே என்றார்.

ஐயா என்னை எதுவும் கேட்காதீர்கள். நான் சொல்வதை மட்டும் குறித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு ராமு மிகுந்த மனவேதனையுடன் அகன்றான். மற்றவர்களைப் போல் பிறந்த நாள் விருந்தை ரசிக்க முடியாமல் குற்ற உணர்வு அவனை வருத்தியது.

மறுநாள் வகுளாதேவி தன் குழந்தைக்குக் கிடைத்த பரிசுகளை ஆர்வத்துடன் பார்வையிட்டாள். அதிகாரி ஒருவர் ஒவ்வொரு பரிசையும் காட்டி அதை அளித்தவரின் பெயரையும் படித்தார். ராமுவின் முறை வந்த போது கண்ணுக்கு தெரியாத பரிசு என்ற குறிப்பைக் கண்டு ராணியே அந்தக் குறிப்பேட்டை வாங்கிப் பார்த்தாள். பின்பு மன்னரிடம் அதைப்பற்றி கூறினாள்.

உடனே மன்னர் ராமுவை சபைக்கு அழைத்து வருமாறு உத்தரவிட்டார். அவன் வந்தவுடன் பயப்படாதே உன்னை தண்டிப்பதற்காக அழைக்கவில்லை. கண்ணுக்கு தெரியாத பரிசு




என்று நீ சொன்னதாக அறிந்தேன். அது என்ன விளக்க முடியுமா? என் குழந்தைக்கு அப்படியென்னதான் பரிசு கொண்டு வந்தாய்? என்றார்.

இதற்கு ராமு பிரபு நான் ஒரு சாதாரண செருப்புத் தைக்கும் தொழிலாளி. அன்றாடம் அரை வயிற்றுக் கஞ்சிக்கே அல்லாடுபவன். குழந்தையின் பிறந்த நாளன்று எனக்கு கிடைக்கும் வருமானம் அனைத்தையும் செலவழித்து குழந்தைக்கு பரிசு வாங்க எண்ணினேன். ஆனால் என் ஆசை நிராசையாயிற்று. அன்று எனக்கு ஒரு பைசா கூட வரு மானம் தேறவில்லை. குழந் தைக்கு ஏதாவது பரிசு அளிக்காமல் விருந்துண்ணவும் மனம் இடம்பெறவில்லை. அதனால் தான் கண்ணுக்குத் தெரியாத பரிசு என்று அளித் தேன். அது தான் குழந்தைக்கு என் மனமார்ந்த ஆசீர்வாதம். இளவரசி தீர்க்க ஆயுளுடன் நலமாக வாழ வேண்டும் என்றான்.

அதைக் கேட்டு ராஜாவும் ராணியும் மிகவும் மகிழ்ந்தனர். ராஜா ராமுவின் தோளைத் தட்டி மற்றவர்களைப் போல் உன்னால் பரிசு தர முடியவில்லையே என்று வருத்தப் படாதே. உண்மையைச் சொல்லப்போனால் உன் இதயபூர்வமான ஆசீர்வாதத்தை ஏனைய எந்தப் பரிசுகளை யும்விட விலைமதிப்பானதான கருதுகிறேன் என்று சொல்லிவிட்டு அவனுக்குப் பொன்னும் பொருளும் அளித்தான்.

ஆன்ால் அவற்றை ஏற்க மறுத்த ராமு, பிரபு குழந்தைக்கு நான் அளித்த ஆசீர்வாதத்தை மிகவும் விலை மதிப்புள்ளதாக நீங்கள் கருதும் போது நானும் நீங்கள் என்மீது காட்டும் பரிவை பொன்னையும் பொருளையும் விட மேலாக கருதுகிறேன் என்று சொல்லி விட்டு ராஜாவையும் ராணியையும் வணங்கிவிட்டு குழந்தைக்கு மீண்டும் ஆசி வழங்கிவிட்டு ராமுவின்மீது மிகவும்பரிவு கொண்ட மன்னன் அவனை நல்ல வருமானம் தரக்கூடிய ஒருவேலையில் அமர்த்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரையிலிருந்து சென்னைக்கு மூவரும் ஒரே விமானத்தில் பயணிப் பது- இஷிமுரா சென்னையில்

ஒன்றும் புரியவில்லை. இருக்கைப் பட்டையோடு எழப் பார்த்தான்; இடி பட்டான்; அவள் உதவினாள். விடை சொல்ல வார்த்தையின்றி வெளி யேறினான்; ஏணியில் தாவி இறங்கி னான்.

அணைத்து வைத்த கைத்தொலை பேசியை இப்போது இயக்கினான். அடுத்த வினாடி அடித்தது; எடுத் தான்; மறுமுனையில் அலறியது ஒரு குரல்:

"அய்யோ... அய்யய்யோ... உயிர்ப் பலியாகிப்போச்சப்பா சின்னப்பா ண்டி... எங்கயிருந்தாலும் வந்துசேரு" முழுவிவரம் சொல்லாமல் அழுதகுரல் அடங்கியது.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினான் சின்னப்பாண்டி.

☆☆☆☆☆☆

நட்டதடம் மாறுமுன்ன நட்ட செடி காய்க்குங்கறது கத்திரிக்குத்தான் பொருந்தும்.

நாப்பந்தஞ்சாவது நாள்ல பூவும் பிஞ்சும் எறங்கி 'என்னைப் பார்; என் அழகைப் பார்'னு எந்திருச்சு நிக்குது கத்திரி. இப்ப விடணும் இன்னொரு தண்ணி.

தாடி மீசை முளைச்சுக் கெடக்கு வாய்க்கா வரப்பெல்லாம். அருகும் கோரையும் வல்லாரையும் 'சாரணத்தி யும் 'நீ என்ன பண்ணுணாலும் வரு வோமில்ல'ன்னு எகத்தாளம் பேசி நிக்குதுக.

"நான் முன்னுக்க வெட்டிக்கிட்டே போக, நீங்க பின்னுக்கு முளைச்சுக் கிட்டே வந்தா நான் என்ன பண்ணு வேன்?" களைகளோட பேசிக்கிட்டே எடுத்துட்டாரு மம்பட்டிய. இருபத்தி ன்னு வண்டிமைப் பதத்துக்கு அதுல கூடி வருது ஒரு களிம்பு. அதக் காயத் துல அப்புனாரு. பழைய சும்மாட்டுத் துணிய ஒரு ஓரம் கிழிச்சுக் கட்டிட் டாரு காயத்து மேல. ரத்தம் நிக்கிற மாதிரி இருக்கு; வலி நிக்கல. மம்பட் டியப் பூட்டி விட்டுகுறை வேலையச் செய்யலாமுன்னு பாத்தா 'விண்ணு விண்ணு' ன்னு தெறிக்குது நரம்பு; கட்டுக்கு மேல வேற கசியுது ரத்தம்.

"ச்சீ... இதுக்குக் கைப்பண்டுதம் ஆகாது; பெரிய வைத்தியம் பாக்க ணும்" வாய்க்கால்லயே மம்பட்டியப் போட்டுட்டு விந்திவிந்தி நடந்து வீடு போயிச் சேந்துட்டாரு. சட்டை வேட்டி மாத்துனாரு. அங்கேயும் இங்கேயும் தேடி ஆசுபத்திரிக்குத் துட்டுச்சேத்தாரு. வீட்டைவிட்டு வெளியேற- ஓடி வந்தானய்யா அடுத்த தோட்டத்துக்கார உளியன்.

"கருத்தமாயண்ணே... என்னமோ நடக்கப்போகுது உன் தோட்டத்துல. ரெண்டுமூணு வண்டிக வந்து எறங்கி உன் கட்டாப்பை இடுக்குது. வெறி நாயி மாதிரி வேசங்கட்டி நிக்கிறாய் ங்க அஞ்சாறு ஆளுக. இன்ன நேர மின்னு இல்ல நிலத்துக்குள்ள இறங் கறது. போண்ணே. போயி உன் பூமியக் காப்பாத்து"

கட்டுப்போட்ட காயத்து வலி இப்ப எங்க போச்சுன்னே தெரியல. விந்தி விந்தி நடந்து வந்த ஆளு இப்ப வேட்டிய மடிச்சுக்கட்டிக்கிட்டு ஒரே ஓட்டமா ஓடுறாரு. நேராப்போன நேர மாகுமுன்னு தெரிஞ்சுதட்டக்குன் னான் தோட்டத்து வரப்புவழி விழுந்து குறுக்குவழியில போறாரு.

போயிப்பாத்தா-

அப்பன் சீனிச்சாமி காலத்துல போட்ட கட்டாப்பு வேலிய இடிச்சு எறிஞ் சுக்கிட்டிருக்கு ஜேசிபி வண்டி. கட்டாப்புல நின்று காவல் காத்த கள்ளி, கொடுக்காப்புளி, வேலிகாத் தான், காட்டாமணக்கு, செங்கிலுவை, அரசங்குட்டி, வேப்பங்குட்டி, ஊணா ங்கொடி, கோவங்கொடி, மிதுங்கக் கொடி எல்லாத்தையும் இன்னைக்குத் தின்னு தீக்காம விடமாட்டேன்னு அஞ்சாறு யானைக சேந்த மாதிரி வருது வண்டி எந்திரத் துதிக்கைய நீட்டி நீட்டி. வேலிய அழிச்சுக் கத்திரித் தோட்டத்துக்குள்ள இறங்க வண்டிய மறிச்சுட்டாரு கருத்தமாயி.

"ஏலேய் வண்டி ஓட்டுறவனே... எந்தக் காட்டு நாயிடா நீயி? நிறுத்துடா வண்டிய"

கருத்தமாயி கத்துனது காதுல விழுகல வண்டிச்சத்தத்துல. கத்திரிச் செடிகளை நசுக்கி நாலாவிதம் பண் ணிக் கோவக்காரன் சண்டைக்கு வர்ற மாதிரி வருது முரட்டுவண்டி. மூஞ்சி உரசற தூரத்துல முன்னால வந்து நின்னு நிறுத்திப்புட்டாரு வண்டிய. வண்டி ஓட்டுறவனை அடையாளம் தெரிஞ்சு போச்சு அவருக்கு.

# மூன்றாம் உலகப்போர்

## 81 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

இறங்கி சிங்கப்பூர் வழியே டோக் கியோ செல்வது- எமிலியும் சின்னப் பாண்டியும் ஃபிராங்ஃபேர்ட் வழியே அட்லாண்டா செல்வது- இது திட்டம்.

துணைவேந்தருக்கு நன்றி சொன்ன தில்-துறைகளில் விடை கொண்ட தில்- பெட்டிகளில் பொருள் அடைத் தத்தில் சில மணிநேரம் செலவழிந் தது.

நண்பகல் 1.40 க்குப் புறப்பாடு.

12.30 க்கு அடைந்தார்கள் விமான நிலையத்தை.

மூவருக்கும் ஒரே வரிசையில் பயணச்சீட்டு.

7 D ஜன்னல் இருக்கை- எமிலி

7 E நடுவிருக்கை- சின்னப்பாண்டி

7 F ஓர இருக்கை- இஷிமுரா.

"இது உங்களுக்கு முதல் விமானப் பயணமா?" என்றாள் எமிலி.

"ஆம்" என்றான் சின்னப்பாண்டி.

எப்படிப்பூட்டுவது கழற்றுவது என்று சொல்லிக்கொடுத்து, சின்னப் பாண்டியின் இருக்கைப் பட்டையை எமிலியே பூட்டினாள்.

"போய்வருகிறேன் தாய் மண்ணே"- ஜன்னலோரம் எட்டிப் பார்த்துக் கண்ணிமை மூடி, மார்பில் கை வைத்து மனசுக்குள் மண்ணை வணங்கினான் சின்னப்பாண்டி.

"நன்றி எமிலி. நான் உயரப் பறப்பதற்கு நீதான் காரணம்"

"சிறகு கட்டிவிடுவது மட்டும்தான் நான். பறக்கப்போவது நீங்கள். இன்னும் உயர உயரப் பறப்பீர்கள்"

நிறைந்தது விமானம்.

கதவு சாத்தப்படும் நேரம்.

'உங்கள் இருக்கைப் பட்டையை அணிந்து கொள்ளுங்கள்; கைத் தொலைபேசிகளை அணைத்து விடுங்கள்' கடைசியாய்க் கூவி முடித்தது விமானக்குயில்.

இனி ஏணி எடுக்கப்பட வேண்டி யதுதான்; கதவு சாத்தப்பட வேண்டி யதுதான்.

திடீரென ஓர் அறிவிப்பு.

"தயவு செய்து கவனியுங்கள். 7E இருக்கையில் உள்ள சின்னப்பாண்டி க்கு ஓர் அவசரச் செய்திகாத்திருக் கிறது. உடனடியாக அவர் விமா னத்தை விட்டு இறங்கி விமான நிலைய மேலாள்ரை அணுகவும்"

திகைத்தான்- திகிலடைந்தான்-

சின்னப்பாண்டியும் எமிலியும் இஷிமுராவும் கண்ணைவிட்டு மறை யிற வரைக்கும் அவுக போறதையே பூாத்துக்கிட்டிருந்த கருத்தமாயி கண்ணு ரெண்டையும் அழுத்தித் தொடச்சுக் கிட்டாரு.

"அதுக பொழப்பத்தேடி அதுக போகுதுக; நம்ம பொழப்ப நம்ம



பாப்பம்" வாய்க்காச் செதுக்க மம் பட்டி எடுத்துட்டாரு.

"பழைய கஞ்சியில மோர் ஊத்திப் புளிக் கத்திரிக்கா போட்டுக் கொடுத்து விட்டாப் பத்தாதா?"- கெணத்தோர வேப்பங்குட்டிகிட்டச் சொல்லிட்டு வரப்புவழி நடந்து போறா சிட்டம்மா.

நாலு வயசு இளந்தாரி மாதிரி சரக் சரக்குன்னு செதுக்கிக்கிட்டே போறாரு கருத்தமாயி.

பொருந்தாமப் புடிபோட்ட மம் பட்டி ஒரு கல்லுல பட்டுக் கடக் குன்னு கழண்டு காலப் போட்டுத் தள்ளிருச்சு.

"யாத்தே" புடிய எறிஞ்சிட்டு வரப் புல உக்கார்ந்து போனாரு.

கட்டைவிரல ஒட்டி எடது கால் பள்ளத்துல விழுந்திருச்சு வெட்டுக் காயம். வெள்ளெலும்பு தெரியது; சதசதன்னு ரத்தமா ஒழுகுது; உசுரு போகுது வலி.

## "அதுக பொழப்பத் தேடி அதுக போகுதுக நம்ம பொழப்ப நம்ம பாப்பம்"

பிள்ளைக்குப் பண்டுதம் பாக்கப் பெரியகுளம் தருமாஸ்பத்திரிக்குப் போயிட்டாக சொள்ளையனும் ரோசா மணியும்.

காயுது கத்திரித்தோட்டம். எம்புட் டுத் தண்ணிவிட்டாலும் அம்புட்டுக் காய்க்கும் கத்திரி ஒண்ணுமட்டும்.

"என்ன பண்றது இப்ப?"- சுத்தி முத்தியும் பாத்தாரு. வரப்புல ஒரு ஓரமாத் தள்ளி முளைச்சிருந்துச்சு க(ன)ரப்பான் குழை. அத எக்கிப் புடுங்குனாரு; கசகசன்னு கசக்கிச் சாறு புழிஞ்சாரு. அத மம்பட்டி மேல விட்டு ஒரு கல்லெடுத்துக் கடகடன்னு குட்டுஞ்சாரு. கடையக் கடைய மசமச

"ஏலேய்! பேய்ச்சாமி மகன் செய ராமுதான நீயி...? கட்டாப்பப் பேத் துக் கத்திரித்தோட்டத்த அழிக்கிறீ களே... என் தோட்டமுடா இது. எவனக் கேட்டு இறக்குனீக வண்டிய? ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிப் போயிரு முடா. ஒழுங்காப்போயிருங்க"

வண்டிய நிறுத்திட்டான் செய ராமு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெற்செய்கைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளின் பட்டியலை காட்சிப்படுத்தவேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சியிலிருந்து புதுமுறிப்பு குள பகுதியில் சிறுபோக நெற்செய்கைக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின்பட்டியல் வெளிப்படுத்தப்படவேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் புதிய கமக்கார அமைப்புத் தெரிவினை ஏற்படுத்த வேண்டும் எனவும் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இவ்வருடத்திற்கான சிறுபோக நெற்செய்கை கூட்டம் இடம்பெற்ற போது நெற்செய்கைக்கென 498 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இதற்கான அட்டவணை அக் கூட்டத்திலேயே அறிவிக்கப்பட்டது.

எனினும் சில பிரதேசங்களுக்கு நிலங்கள் ஒதுக்குவது தொடர்பாக கலந்தாலோசிக்கப்படாததோடு கூட்டத்தில் தீர்மானிக்காது சிறுபோக நெற்செய்கையில் பொதுப் பங்கிற்கென காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலங்களின் அட்டவணைகள் இதுவரையிலும் வெளியிடப்படவில்லை.

அந்நிலம் குறித்த ஏலம் விடுதல் உட்பட எவ்விடயமும் வெளிப்படுத்தப்படவில்லை எனவும் விவசாயிகள்விசனம்தெரிவிக்கின்றனர்.

எனவே தற்போது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள காணிகளின் அளவு எவ்வளவு. அக்காணியில் இணைக்கப்பட்டுள்ள பங்குகள் எவ்வளவு என்பன குறித்த அட்டவணை வெளியிடப்பட்டு பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும்இவ்விடயத்தில் வெளிப்படைத்தன்மை ஏற்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதன்மூலம் தொடர்ந்து வரும் ஊழல் கள் இல்லாதொழிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை புதிய கமக்கார அமைப்புத் தெரிவை ஏற்படுத்திதர வேண்டுமென தம்மால் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் கமநல சேவைத் திணைக்களத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாகவும்குறித்த விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்தகால காலநிலை சீரின்மையால் நெற்செய்கையில் அழிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள குறித்த பகுதி விவசாயிகளிற்கு இவ்விடயங்கள் தொடர்பில் உரிய வர்கள் கவனமெடுத்து செயற்பட வேண்டுமென இவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-5-254)

## விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு

வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் விவசாயிகளின் நன்மை கருதி கால போக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளது.

வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் வவுனியா நகரம், ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை, கோமரசங்குளம் பாலமோட்டை ஆகிய கிளைகள் மூலம் நெல்லை கொள்வனவு செய்யவுள்ளது என சங்கத்தலைவர் சி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சம்பா கிலோ ஒன்றுக்கு 35 ரூபாவாகவும் ஏனைய நெல் இனங்களுக்கு 32 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2-250)

## கும்பாபிஷேகம்

விழிசிட்டி ஞானவைரவர் ஆலய முதலாவது கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 108 கலச சங்காபிஷேகத்துடன் வசந்த மண்டபபூசை இடம்பெற்று தொடர்ந்து வீதியுலாவும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (அ-5)

# அமெரிக்க தீர்மானம் மூலம் நன்மைகள் ஏற்படாது-பீரிஸ்

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் அமெரிக்கா நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் நன்மைகள் எதுவும் ஏற்படப்படபோவதில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் ஊடாக தென் ஆசிய நாடுகளுக்கு இடையில் பிளவுகள் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் ஆபிரிக்கா நாடுகளே அதிகளவில் ஆதரவளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையான ஆசிய நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமநிலையான ஓர் தீர்மானத்தை நிறைவேற்றுவதாகவே அமெரிக்கா முதலில் அறிவித்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் சாதகமான விடயங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே அமெரிக்க ஆதரவு நாடுகளினால் முன்வைக்கப்பட்ட இந்தத் தீர்மானனது இலங்கைக்கு எவ்வித நன்மைகளையும் அளிக்கப் போவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## புனரமைப்புக்காக வீதி மூடப்பட்டிருக்கும்

யாழ். பொன்னாலை பருத்தித்துறை வீதி (யாழ்.கோட்டை பின்புறமாக) மீள் செப்பனிடல் வேலைகளுக்காக நாளை முதல் இவ் வேலைகள் முடிவுறும் வரை மூடப்பட்டிருக்கும். பொதுமக்கள் மாற்றுவழியாக யாழ். காங்கேசன்துறை வீதியையும் சுற்று வட்ட வீதியையும் பயன்படுத்துமாறு யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# ஐ.நா. தீர்மானம் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்

## ஒபாமா நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வரவேற்றுள்ளார்.

இந்தத் தீர்மானம் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழிகோலும் என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புப் பேச்சாளர் டொமி வெய்டர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு விரிவான அளவில் உலக நாடுகள் ஆதரவளித்து வந்தமை வரவேற்கப்பட வேண்டியது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் பொறுப்பு கூறல் போன்றவற்றை உறுதிப்படுத்த சரியான பொறிமுறைமை ஒன்றை உருவாக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் முக்கியமான முயற்சிகளுக்கு பங்குதாரராக விரும்புகின்றோம்.

நாட்டில் நல்லிணக்கம், சுபீட்சம் மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டு தீர்மானம் வழியமைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புப் பேச்சாளர் டொமி வெய்டர் தெரிவித்துள்ளார். (அ-2)

# எதனோல் இறக்குமதி தடை செய்யப்பட்டது

(கொழும்பு)

எதனோல் இறக்குமதி செய்வதை தடை செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தார்.

இதன்படி எதனோல் இறக்குமதி செய்வது தொடர்பில் 1969 முதலாம் இலக்க இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலைசெயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித் தல் பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்க வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெலவத்த சீனி தொழிற்சாலையின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் அதனுடன் சார்ந்த எதனோல் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. உள்நாட்டில் எதனோல் தேவையை பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் அதனை இறக்குமதி செய்ய ஏற்றவாறு இந்த கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது. (அ-2)

# நெளுக்குளம் ஊடான செட்டிகுளம் வீதியை புனரமைத்து தாருங்கள்

## பயணிகள் கோரிக்கை


வவுனியாவில் இருந்து நெளுக்குளம் ஊடாக செட்டிக்குளம் செல்லும் வீதி செப்பனிடப்படாமையினால் போக்குவரத்தின் போது பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல கிராமங்களை ஊடறுத்து சென்று செட்டிக்குளம் செல்வதற்கு பிரதான வீதியாக காணப்படும் இவ் வீதியானது பல ஆண்டு காலமாகவே செப்பனிடப்படாததுடன் சேதமடையும் போது முறையான விதத்தில் சீர் செய்யப்படுவதில்லை எனவும் இவ் வீதியை பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.

சுமார் 28 கிலோமீற்றர் தூரத்தை கொண்டமைந்த இவ் வீதி செட்டிக்குளம் மக்களின் பொருளாதார,கல்வி,வெளியிட தொடர்புகளுக்கான பிரதான பாதையாக பங்கு வகிக்கின்றது.

இவ்வீதி திருத்தம் செய்யப்படாமையினால் இப்பகுதியால் பயணிக்கும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட உத்தியோகத்தர்கள், நோயாளர்கள் ஆகியோர் குறிப்பிட்ட நேரத்திற்கு சென்றடைய முடிவதில்லை எனவும் வாகனங்கள் பெரும் சேதமடைவ தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ் வீதியை திருத்தம் செய்து தருமாறு பல தடவை இவ் வீதிக்கு பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு தெரிவித்த போதிலும் அவர்கள் செப்பனிப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-266)




யா/சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் ந.சூரியகுமார் நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கி வைப்பதையும் மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் இந்தியாவை போற்றுகிறதா? அல்லது தூற்றுகின்றதா?- மனோ கேள்வி

ஐ.நா.மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்திய அரசு நடந்து கொண்ட முறைமையை இலங்கை அரசாங்கம் போற்றுகிறதா அல்லது தூற்றுகிறதா என்ற சந்தேகம் இலங்கை மக்கள் மத்தியில் எழுந்துள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர்மனோகணேசன்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ள தாவது,

அமெரிக்க தீர்மானத்தின் கடுமையை குறைத்து இந்தியா செய்த உதவிக்கு அரசாங்க அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பகிரங்கமாக நன்றி தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோர் இந்தியாவை கண்டித்து உள்ளனர்.

இது இந்தியா தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கும் இரண்டு முகங்களை காட்டுகின்றது. இந்த இரண்டு இலங்கை முகங்களில் எது உண்மையானது என்பது தொடர்பிலும் இது சம்பந்தமாக இந்தியாவின் உண்மையான முகம் எது என்பது தொடர்பிலும் இன்று பாரிய கேள்விகள் எழுந்துள்ளன.

இவை தமிழ் சமூகத்தின் மனசாட்சி இன்றைய தினத்தில் எழுப்பும் கேள்விகள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் இந்திய பிரதிநிதி திலிப் சிங்ஹா ஆற்றிய உரை தொடர்பில் தனது கண்டனத்தை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

யுத்தத்தின்போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக பொறுப்பு கூறல் விடயங்களை பற்றி பேசி இந்தியா தம்மை ஏமாற்றி விட்டது என அவர் கூறியுள்ளார்.

இவரது கருத்தையே வீரவன்ச, ரண வக்க ஆகிய அமைச்சர்களும் எதிரொலித்துள்ளனர். இந்த இரண்டு நிலைப்பாடுகளில் எது உண்மையானது என இன்று தமிழ் மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன.

அதேவேளை மனித உரிமை பேரவை தீர்மானம் தொடர்பில் இந்திய மத்திய அரசு முன்னெடுத்த உண்மையான கொள்கை எது என்பது பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன. இந்திய ஆதரவு, இந்திய எதிர்ப்பு ஆகிய இரண்டு எதிரெதிர் நிலைப்பாடுகளை எடுத்து கொண்டு இலங்கை அரசாங்கம் சிங்கள மக்களையும் இத்தகைய நிலைப்பாடுகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்குவதன் மூலம் இந்திய அரசு தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்றனவா என்ற கேள்விகள் இன்று எழுந்துள்ளன.

சொல்லொணா துன்பங்களுக்கு முகங்கொடுத்து விட்டு இன்று பாரிய எதிர்பார்ப்புகளின் மத்தியில் வாழ்ந்து வரும் தமிழ் இனத்தின் மனசாட்சி இன்றைய தினத்தில் எழுப்பும் கேள்விகளையே நான் இங்கே எதிரொலிக்கின்றேன் என்றுள்ளது. (அ-2)

# விநாயகர் முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி தென் கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ கைதடி விக்னேஸ்வர வித்தியாலய மைதானத்தில் விநாயகர் சனசமூக நிலைய பொருளாளர் பொ. கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி. துரைராஜா, தென் மராட்சி முன்பள்ளி உதவிப்பணிப்பாளர் சு. பாக்கியராஜா, யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் சு. சிவானந்தன், யாழ். செயலக புள்ளி விபரவியல் உத்தியோகத்தர் து. சிறிகரன், சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் த. சுபத்திரா தேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலக பொறுப்பதிகாரி சி. பத்மநாதன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் ஜே. சிற்சபநாதன், ஓய்வு பெற்ற வைத்தியர் வைத்திய கலாநிதி பி. சண்முகரட்ணம், விநாயகர் விளையாட்டுக் கழக தலைவர் வீ. தனுசன், கைதடி பொது நூலக நூலகர் க.மகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (அ-5)




★ 1882-காசநோயை உருவாக்கும் நோய்க்கிருமியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக ரொபேர்ட் குக் அறிவித்தார்.

★ 1923-கிறீஸ் குடியரசாகியது.

★ 1944-ரோமில் ஜேர்மனியப் படைகள் 335 இத்தாலியப் பொதுமக்களைப் படுகொலை செய்தன.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் சகான் என்ற இடத்தில் ஜேர்மனிய சிறையில் இருந்து 76 போர்க் கைதிகள் தப்பித்தனர்.

★ 1947-மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் பிரித்தானிய ஆளுநரானார்.

★ 1965-டட்லி சேனநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

★ 1965-நாசாவின் ரேஞ்சர் 9 விண்கலம் சந்திரனில் மோதும் முன்னர் சந்திரனின் புகைப்படங்களை வீடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் பார்க்கக் கூடிய படங்களாக மாற்றி பூமிக்கு அனுப்பியது.

★ 1972-ஐக்கிய இராச்சியம் வட அயர்லாந்தில் தனது நேரடி ஆட்சியை ஏற்படுத்தியது.

★ 1999-கொசோவோ போர்: நேட்டோ படைகள் யூகோசெலாவியாவில் வான் தாக்குதலை நடத்தின.

**பிறப்புக்கள்**

★ 1776-முத்துசுவாமி தீட்சிதர், இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ.1835)

★ 1884-பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ.1966)

★ 1903-அடொல்ஃப் பியூட்டினண்ட், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ.1995)

★ 1923-டி.எம்.சௌந்தரராஜன் , பாடகர்

★ 1917-ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (இ.1997)

★ 1984-கிரிஸ் பாஷ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ 1905-ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1828)

★ 1988-சீர்காழி எஸ்.சோவிந்தராஜன், கர்நாடக திரையிசை பாடகர் (பி.1933)

★ 2002-சேசார் மில்ஸ்டைன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1927)

**சிறப்பு நாள்**

★ அனைத்துலக காசநோய் தினம்

**டட்லி சேனநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தம் 1965**

டட்லி- செல்வா ஒப்பந்தம் 1965 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும் தமிழர் தரப்பு தலைவர் எஸ். ஜே.வி.செல்வநாயகம் அவர்களுக்குமிடையே 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிப் பயன்பாட்டை ஏதுவாக்குவதும் வட கிழக்கில் அரச நில பகிர்ந்தளிப்பில் தமிழ் மொழிபேசுவோருக்கே முன்னுரிமை வழங்கவும் இவ் ஒப்பந்தத்தின் சாராம்சங்கள் ஆகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகவும் ஆவணங்கள் பதிவு செய்யும் மொழியாகவும் ஏற்கப்பட்டது. வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ்மொழி பாவிக்கப்பட உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவாதம் தரப்பட்டது.

பிரதேச ஆட்சிமுறை மன்றங்கள் தாபிக்கப்பட வேண்டும் என்று ஏற்கப்பட்டது. அவற்றிற்கடங்கலான விடயங்கள் இரு தலைவர்களாலும் பின்னர் நிர்ணயிக்கப்படவிருந்தது. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிப்பங்கீடு சம்பந்தமாகப் பின் வரும் விடயங்கள் முக்கியமாகக் கருத்துக்கெடுக்க உடன்பாடு ஏற்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் இருக்கும் அரசாங்க நிலங்கள் முதற்கண் அப்பிரதேசக் காணியில்லா குடியானவர்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும் இரண்டாவதாக அவ்வாறு காணிபெற ஏற்றவர்கள் இல்லாத பட்சத்தில் வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். மூன்றாவதாக நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு ஒதுக்கப்படலாம்.

ஆனால், முன்னுரித்து நாட்டில் வாழ் தமிழ்பேசும் மக்களுக்கே உரித்தானது.

# முறையற்ற வரியறவீட்டால் பாதிக்கப்படுகின்றோம்

## பளை மீன் வியாபாரிகள் விசனம்

(பொற்பதி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளை மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் போது முறையற்ற வரி அறவீட்டால் தாம் பலத்த சிரமங்களை எதிர்கொள்வதாக அவ் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, பல வருட காலமாக பளை மீன் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. நாள்தோறும் அவர்கள் கொண்டு வரும் மீன்களை காலையில் நிறுவை எடுக்கும் சந்தை ஒப்பந்தகாரர்கள் மீன்கள் காலையில் என்ன விலை விற்கப்படுகின்றதோ அதே விலை க்கே கொண்டு வரப்படும் அனைத்து மீன்களுக்குமான வரியினை அறவிடுகின்றனர். குறிப்பாக காலையில் சற்று உயர்வாக மீன் விற்கப்பட்டு நேரம் செல்லச் செல்ல மீன்களின் விலை சற்று குறைவாகவே விற்க ப்பட்டு வருவதாக அந்த வியாபா ரிகள் தெரி விக்கின்றனர்.

எவ்வாறு மீன்கள் விற்கப்பட்டாலும் காலை மீன்களின் விலை என்னவாக இருக்கின்றதோ அந்த விலைக்கேற்பவே வரி அறவிடப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சில வேலைகளில் முற்று முழுதாக மீன்கள் விற்கப்படாமல் வியாபாரிகள் மீண்டும் தமது மீன்களை திருப்பி கொண்டு செல்ல வேண்டிய நிலையும் காணப்படுகிறது. சந்தைக்குள் கொண்டு செல்லப்படுகின்ற மீன்களுக்கு கட்டாயம் வரி கட்ட வேண்டிய துர்ப்பாக்கிய சூழலில் வியாபாரத்தில் ஈடுபட வேண்டியிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நாள் ஒன்றுக்கு 400 ரூபாவில் இருந்து ஆயிரம் வரைக்கும் வரி செலுத்துவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமது பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கோரி 13 மீன் வியாபாரிகள் கையொப்பம் இடப்பட்ட அறிக்கை ஒன்று பளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினருக்கு அறிவித்தும் இன்று வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர். (அ-3-64)

# வர்த்தகர்களுக்கு அடையாள அட்டை

(குருமன்காடு)

வர்த்தக சங்கத்தால் வர்த்தகர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா நகர ச்பை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி ஆகியோரால் அடையாள அட்டை வழங்கப்படும். அத்துடன் வர்த்தகர்களின் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது. ஆதலால் அனைத்து வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு வர்த்தக சங்க செயலாளர் கேட்டுள்ளார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றவாளிகளை தூக்கில் போடு!

## 40 ஆண்டுகளாகியும் போர்க்குற்றங்களை மறவாத பங்களாதேஷ் மக்கள்

*1971* ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் இணைந்திருந்த- அப்போது கிழக்குப் பாகிஸ்தான் என்று அழைக்கப்பட்ட பங்களாதேச மக்கள் வங்காள தேசியத்தின் அடிப்படையில் பாகிஸ்தான் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக போராடினர்.

அந்த போராட்டங்களை அடக்குவதற்கு பாகிஸ்தானிய இராணுவ வீரர்கள் இறக்கி விடப்பட்டனர். அவர்களுடன் உள்ளூர் மத வெறியர்

கொல்லப்பட்ட இணையப் பதிவாளர் ரஜீப் ஹைதர்



களும் சேர்ந்து கொண்டு போராட்டத்தை நசுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். இரஜாக்கர்கள் என்று அழைக்கப்படும் உருது பேசும் பாகிஸ்தானிய ஆதரவு இஸ்லாமிய மத வெறியர்கள் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக நாடெங்கிலும் வன்முறையை அவிழ்த்துவிட்டனர். இரஜாக்கர்கள் என்ற சொல் பங்களாதேஷில் துரோகிகள் என்ற பொருள் உடையதாக மாறிவிட்டது.

சுமார் 10 இலட்சம் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குள் வந்தனர். இதை சாக்காக வைத்து இந்திய அரசு பாகிஸ்தானை தனிமைப்படுத்தி இராணுவ நடவடிக்கை மூலம் பங்களாதேசை தனிநாடாக ஆவதற்கு வழி வகுத்ததன் மூலம், வங்கத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட ஷேக் முஜிபூர் ரஹ்மானின் தலைமையில் அவாமி லீக் கட்சியின் ஆட்சி அமைக்கப்பட்டது.

பின்னர், இராணுவத் தளபதிகளால் ஷேக் முஜிபூர் ரஹ்மான் கொலை செய்யப்பட்டு இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. இராணுவத் தளபதி ஜியா உர் ரஹ்மான் பொறுப்பேற்றபின், பங்களாதேஷ் தேசியக் கட்சியை உருவாக்கினார். ஆனால், அவரது ஆட்சியும் நீண்டகாலத்திற்கு தொடரவில்லை. இராணுவத் தளபதிகளால் ஜியா உர் ரஹ்மானும் கொலை செய்யப்பட்டு 1982-ல் ஹுசைன் முகமது எர்ஷாத் என்ற இராணவத் தளபதி இராணுவ ஆட்சி அரங்கேறியது. இப்படியாக வன்முறை நிறைந்த வரலாறாக பங்களாதேஷ் வரலாறு தொடர்ந்தது.

*1991* இல் இராணுவ ஆட்சி வீழ்த்தப்பட்டு முஜிபூர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹசீனா பேகம் தலைமமையிலான அவாமி லீக்கும், ஜியா உர் ரஹமானின் மனைவி பேகம் கலீடா ஜியா தலைமையில் பங்களாதேஷ் தேசியக் கட்சியும் மாறிமாறி தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி செய்து வருகின்றனர்.

2008 ஆண்டு நடந்த தேர்தலின் போது 1971-ல் போர்க் குற்றங்கள் புரிந்தவர்கள் மீதான சிறப்பு விசாரணை ஆணையம் நியமிப்பதாக வாக்களித்து ஆட்சிக்கு வந்தார் ஹசீனா பேகம். அதன்படி 2010-ம் ஆண்டு 3 உறுப்பினர்கள் கொண்ட பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றம், 7 உறுப்பினர்கள் கொண்ட விசாரணைக்குழு, 12 உறுப்பினர்கள் கொண்ட வழக்கறிஞர்கள்குழு ஆகியவை உருவாக்கப்பட்டன.

1971 இன் போர்க் குற்றவாளிகளான இரஜாக்கர்களில் பலர்



ஜமாத்-இ-இஸ்லாமி என்ற இசுலாமிய மதவாத கட்சியின் மூலம் அரசியலில் வளர்ந்தனர். 2001- ஆம் ஆண்டு தேசியக் கட்சி கூட்டணி ஆட்சியில் ஜமாத் -இ- இஸ்லாமியும் பங்கு பெற்றிருந்தது. மீர்பூரின் கசாப்பு கடைக்காரர் என்று அழைக்கப்படும் அப்துல் காதர் முல்லா இப்போது ஜமாத்-இ-இஸ்லாமியின் தலைவராக உள்ளார்.

போர்க்குற்ற நீதிமன்றம், பாகிஸ்தானுக்கு ஓடிப்போய்விட்ட *அப் துல் கலாம் ஆசாத்* என்ற போர்க் குற்றவாளிக்கு ஜனவரி மாதம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

பெப்ரவரி 5ஆம் திகதி அப்துல் காதர் முல்லாவின் குற்றங்களை உறுதிசெய்து மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கியது போர்க்குற்ற நீதமன்றம். அப்துல் காதர் நீதிமன்றத்திலிருந்து வெளிவரும் போது ஆணவமாக சிரித்துக்கொண்டே வெற்றிக் குறியீடான இரண்டு விரல்களைக் காட்டினார். அவர் செய்த குற்றங்களுக்கு அயுள் தண்டனை மிகவும் குறைவானது. என்று பெரும்பான்மை மக்கள் கொதித்தனர்.


பங்களாதேஷின் ஒவ்வொரு குடும்பமும் 1971 போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்துல் காதரின் வெற்றிக் களிப்பைக் கண்டு கோபமடைந்த இலட்சக்கணக்கான இளைஞர்களும், பெண்களும், பொது மக்களும் அவருக்கும், போர் குற்றத்துக்காக குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் 11 பேருக்கும் மரண தண்டனை விதிக்கக் கோரி தலநகர் டாக்காவில் உள்ள *ஷாபாக் சதுக்கத்தில்* கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போர்க்குற்றங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஷாபாக் சதுக்கத்தில் தொடர்ந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாக எழுதிய ரஜீப் ஹைதர் எனும் மதசார்பற்ற வலைப்பதிவரை ஜமாத் -இ- இஸ்லாமி கட்சி குண்ணடர்கள் பெப்ரவரி 15 ஆம் திகதி படுகொலை செய்தனர். ரஜீப்பின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு மத பயங்கரவாதிகளுக்கு எதிராக தமது ஒற்றுமையை வெளிப்படுத்தினர்.

ரஜீப் ஹைதர்

பெப்ரவரி 28 ஆம் திகதி 2வது குற்றவாளியான டெல்வார் உசைன் சயீதிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜமாத்- இ- இஸ்லாமி குண்டர்கள் நாடு முழுவதும் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டனர். மார்ச் 3, 4ஆம் திகதிகளில் நாடுதழுவிய வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தனர். இந்த வேலை நிறுத்தத்திற்கு மக்கள் ஆதரவு இல்லை என்றாலும் ஜமாத்- இ- இஸ்லாமி மதவெறியர்கள் கலவரம் செய்ய முயன்றனர். இந்தக் கலவரங்களில் 6 பொலீஸ் உட்பட 76பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பொலீசால் சுட்டுக்கொல்லப்பட்டோர் அதிகம். அந்தப் பொலிசாரிலும் ஜமாத்-இ-இஸ்லாமி கட்சிக்காரர்கள் அதிகம்.

மேலும் எப்படியாவது இஸ்லாமிய மதவெறியை கிளப்புவதற்காக ஜமாத்-இ-இஸ்லாமி குண்ணடர்கள் வங்கதேசத்தில் வாழும் சிறுபான்மை இந்துக்களை தாக்கியும், இந்துக் கோவில்களை சேதப்படுத்தியும் வருகின்றனர். தமது தலைவருக்கு எதிரான மக்கள் போராட்டம் இந்தியாவின் சதி, நாத்திக சதி, காஃபியர்கள் சதி என்றெல்லாம் அவர்கள் பேசினாலும் முழு வங்கதேச மக்களும் இசுலாமிய மதவெறியர்களை தண்டிப்பதில் ஒன்றுபட்டு போராடி வருகின்றனர். ஒரு சிறுபான்மைக் குழுவினர், அதிலும் உதிரியான நபர்கள்தான் ஜமாத்-இ-இஸ்லாமி கட்சிக்காக போராடி வருகின்றனர். ஆனால், நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் 1971 ஆம் ஆண்டு நடந்த போர்க் குற்றங்களை மறக்க வங்கதேச மக்கள் தயாரில்லை.



வங்கதேசம் போன்ற ஏழை நாடுகளை இஸ்லாமிய மதப் பிற்போக்கு நிலையிலேயே வைத்தருக்க விரும்பும் ஏகாதிபத்தியங்களும் அவற்றின் ஊடகங்களும் மதவெறிக்கு எதிரான வங்கதேச மக்களின் போராட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருட்டடிப்பு செய்கின்றன.

போர்க் குற்றவாளிகளை தூக்கில் போடு, மதவாத ஜமாத்-இ-இஸ்லாமி அமைப்பை தடை செய் என்ற முழக்கங்களோடு வங்கதேச மக்களின் ஜனநாயக போராட்டம் தொடர்கிறது. இறுதியில் பெரும்பான்மை மக்கள் இசுலாத்தையும் இசுலாமிய மதவெறியையும்விட ஜனநாயகத்தையும், நீதியையும் பெரிதாக கருதுகிறார்கள் என்பது வங்க தேசத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தைப் போல உலகெங்கும் மதவெறியைத் தூண்டிவிடும் சங்க பரிவாரங்கள் வரலாற்றின் கல்லறைக்கு போவது உறுதி.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆந்திர சினிமாவில் கலக்கும் சுருதி

ஏழாம் அறிவு, 3 படங்களில் நடித்த ஸ்ருதிஹாசனுக்கு அதன்பிறகு தமிழ் சினிமா கைகொடுக்கவில்லை. ஆனால், ஆந்திர சினிமாவில் அவர் நடித்த இரண்டொரு படங்கள் மெகா ஹிட்டாகவே அங்கு அமோகமாக வரவேற்பு கொடுத்துவிட்டனர். அத்துடன் அடுத்து வெளிவரவுள்ள முக்கிய ஹீரோக்களான, ரவிதேஜா, ஜூனியர் என்டிஆர், ராம்சரண்தேஜா ஆகியோரின் படங்களாக இருப்பதால், இந்த படங்களில் ஒன்றிரண்டு வெற்றி பெற்றாலும், டோலிவுட்டில் முதலிட நடிகையாகி விடுவார் ஸ்ருதி. அதற்கான அறிகுறி அவருக்கு தெரியத் தொடங்கி விட்டதால், பெரிய படங்களாக தெரிவு செய்து வருகிறார்.

இதையடுத்து அங்கிருக்கும் சில நடிகைகள் ஸ்ருதியின் அதிரடி பிரவேசத்தால் நாம் ஆட்டம் கண்டு விடுவோமா என்ற கலக்கத்தில் உள்ளார்களாம்.



கோமல் சர்மா

# மென்மையான வேடத்தில் அர்ஜுன்




அர்ஜுன் படமென்றால், அடிதடிக்கு பஞ்சமிருக்காது. ஆனால், சமீபகாலமாக, இளம் நடிகர்களின் ஆரவாரம் அதிகரித்திருப்பதால், அடி-தடியை கொஞ்சம் ஓரங்கட்டி விட்டு, நடிப்புக்கு முக்கியத்துவமுள்ள வேடங்களில் கவனத்தை திருப்பியுள்ளார். மணிரத்னத்தின், கடல் படத்தில் வில்லனாக நடித்தவர், வசந்தின் மூன்று பேர் மூன்று காதல் படத்தில், ஒரு சண்டைக் காட்சி கூட இல்லாத, மென்மையான வேடத்தில் நடித்துள்ளாராம். இந்நிலையில், பிரசாந்த் என்ற கன்னட படத்தில் நடித்த அர்ஜுனுக்கு கர்நாடக அரசின் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்துள்ளது. இதனால், உற்சாகத்தில் இருக்கிறார், அவர்.

# சத்தியராஜின் 200 ஆவது படம்

மணிவண்ணன் இயக்கி வரும், "நாகராஜ சோழன் எம்.ஏ., எம்.எல்.ஏ என்ற படத்துக்கு, சத்யராஜ் நடிக்கும், 200ஆவது படம் என்ற பெருமையும் உண்டு. இப்படத்தின் மூலம், கோமல் சர்மா என்ற புதுமுகம், கோலிவுட்டுக்கு அறிமுகமாகிறார். இவர், பிரபலமான ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனையும் கூட. இந்த படத்தில், அநீதி கண்டு பொங்கி எழும், வீரத்தமிழ் பெண் வேடத்தில் நடிக்கிறாராம், கோமல் சர்மா. அவர் கூறுகையில், இந்த படத்துக்கு பின், தமிழில் எனக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இயக்குநர், ஹீரோ, யார் என்பது முக்கியமில்லை. நல்ல கதை யுடன் கூடிய கதாபாத்திரங்களில் மட்டுமே நடிப்பது என்ற முடிவில் இருக்கிறேன்என்றார்.

கோலிவுட்டின் எவர் க்ரீன் நடிகை என, புகழப்படும் த்ரிஷா சமீபத்தில் மாலைதீவில் ஆழ்கடலில், 'ஸ்கூபா டைவிங்' பயிற்சி மேற்கொண்டு, தன் நீண்ட நாள் கனவை நிறைவேற்றியுள்ளார்.

அவர் கூறுகையில், ஸ்கூபா டைவிங், புது அனுபவத்தை ஏற்படுத்தியது. மீன், நண்டு, ஆக்டோபஸ் ஆகியவற்றுடன் சேர்ந்து, நீந்தியது, என் வாழ்நாளில் ஏற்பட்ட, மறக்க முடியாத அனுபவம். ஆழ் கடல், கும்மிருட்டு, சுற்றிலும் கடல் வாழ் உயிரினங்கள் என, ஸ்கூபா டைவிங்கின் ஒவ்வொரு நொடியும், எனக்கு வித்தியாசமாக இருந்தது என்கிறார். அத்துடன், எனக்கு, இன்னும் ஒரு ஆசை உள்ளது. ஆபிரிக்க கடலில், வெள்ளை சுறா மீன்களுக்கு மத்தியில், நீச்சலடிக்க வேண்டும். விரைவில், அந்த ஆசையையும் நிறைவேற்றுவேன் என்று, உறுதியாக கூறுகி றார்.



ஆழ்கடலில் திரிசா

## 5 தமிழ் படங்களுக்கு தேசிய விருது

2012 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. "விஸ்வரூபம்' படத்துக்கு 2, "வழக்கு எண் 18/9' படத்துக்கு 2, பரதேசி படத்துக்கு 1 என தமிழ்ப் படங்களுக்கு ஐந்து விருதுகள் கிடைத்துள்ளன.

14 மொழிகளைச் சேர்ந்த 38 திரைப்படங்களுக்கு தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் கடந்த ஆண்டைப் போலவே இந்த முறை யும் தமிழ்ப் படங்களுக்கு ஐந்து விருதுகள் மட்டுமே கிடைத்துள்ளன. கமல்ஹாசன் தயாரித்து, இயக்கி, நடித்த விஸ்வரூபம், பாலாஜி சக்திவேல் இயக்கிய வழக்கு எண் 18/9 ஆகிய படங்கள் தலா இரண்டு விருதுகளையும் பாலா இயக்கிய பரதேசி ஒரு விருதையும் பெற்றுள்ளது.

விஸ்வரூபம் படத்தில் சிறந்த நடன இயக்கத்தை வெளிப்படுத்திய பண்டிட் பிர்ஜு மக ராஜ், கலை இயக்கத்துக்குப் பொறுப்பேற்ற லால் குடி என். இளையராஜா, பூண்ட்டவீ தோர் டவீபாசஸ் ஆகியோர் விருதுகளுக்குத் தேர்ந்தெடுககப்பட்டுள்ளனர்.


வழக்கு எண் 18/9 படத்தில் சிறந்த ஒப்பனை செய்த ராஜா விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இது தவிர, சிறந்த பிராந்திய மொழிப் படத்துக்கான விருதும் இந்தப் படத்துக்குக் கிடைத்துள்ளது.

பரதேசி படத்தின் சிறப்பான ஆடை வடிவமைப்புக்காக பூர்ணிமா ராமசாமி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.





படம் : உ



சித்தார்த் - சமந்தா ஜோடியை இணைத்து, ஆந்திராவில் விதவிதமான காதல் செய்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன என்றாலும், அவர்கள் இருவரும் சேர்ந்து நடிப்பதையோ, சேர்ந்து ஊர் சுற்றுவதையோ நிறுத்தவில்லை. சமீபத்தில் கூட, இருவரும் இணைந்தே காளஹஸ்தி சிவன் கோவிலுக்கு தங்களது பெற்றோர்களுடன் வந்தனர். அங்கு தரிசனம் செய்து விட்டு, இருவரும் ஜோடியாக அமர்ந்து, ராகு-கேது பூஜை செய்துள்ளனர். இந்த செய்தி வெளியானதை தொடர்ந்து, தெலுங்கு சினிமாவில் சித்தார்த்- சமந்தாவின் காதல் செய்திகள், பெரிய அளவில் பற்றி எரிகிறது. இருப்பினும், சமந்தா தரப்பில் இருந்து இந்த செய்திக்கு மறுப்போ, எதிர்ப்போ வெளியாகவில்லை. இந்த விவகாரத்தில், சமந்தா மனசில் என்ன இருக்கு என, தெரியாமல் புலம்புகிறது திரையுலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அமெரிக்க இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் ஆகியவை தொடர்பில் இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி வலியுறுத்தியுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை அடுத்து அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி வோஷிங்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்ற போர் மற்றும் ஸ்திரமற்ற நிலையில் இருந்து நிலையான சமாதானத்தை அடைவதற்குரிய சுபீட்சமான பாதையில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஊக்குவிக்கிறது.

2012 ஆம் ஆண்டு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் போன்று இத்தீர்மானமும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய விவகாரங்களில் தனது நாட்டு மக்களுக்கான கடப்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என சர்வதேச பங்காளர்களுடன் இணைந்து அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை இலங்கையில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ள போதிலும், அங்கு இன்னும் செய்ய வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் மனிதவுரிமை விவகாரங்களில் அண்மையில் ஏற்பட்ட எதிர்மறையான நிலைமைகளில் இருந்து இலங்கை மீண்டும் திரும்பும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இத்தகைய முக்கியமான பணிகளுக்கு உதவ அமெரிக்கா தயாராகவே உள்ளது. இலங்கை அரசாங்கத்துடனான எமது தொடர்புகள் முன்நோக்கிச் செல்வதையும் இலங்கை மக்களுடனான எமது நல்லுறவை மேலும் வலுப்படுத்திக் கொள்வதையும் எதிர் பார்க்கிறேன் என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பொதுக்கூட்டம்

(கோப்பாய்)

முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# உடற்பயிற்சி போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

கிளிநொச்சி கரைச்சி கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டி முடிபுகள் கோட்டக்கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் இராமநாதபுரம் மகாவித்தியாலயம் முதலாமிடத்தினையும் கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும் பாரதிபுரம் பாரதி வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளன.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தினை கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம் முதலாம் இடத்தினையும் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் சிவநகர் அ.த.க. பாடசாலை மூன்றாவது இடத்தினையும் பெற்றுள்ளன. (அ-2-266)

# கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு மாணவர்கள் மத்திய அரசுக்கு காலக்கெடு!

(சென்னை)

ஈழத்தமிழர் குறித்த தமது கோரிக்கைகள் சம்பந்தமாக எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்காது விடின் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடப்போவதாக தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு எச்சரிக்கை முழக்கம் விடுத்துள்ளது.

ஈழத்தமிழர் விவகாரம் குறித்து நேற்று முன்தினம் சென்னையில் வழங்கிய போட்டியின் போதே மாணவர் கூட்டமைப்பு சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும். தமிழகத்தில் இருந்து இலங்கை துணை தூதரகத்தை அகற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராடி வருகின்றனர்.

எனினும் எங்கள் போராட்டம் பற்றி மத்திய அரசு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எங்கள் கோரிக்கைகள் தொடர்பாக மார்ச் 31 ஆம் திகதிக்குள் தன்னுடைய நிலைப்பாட்டை மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

இல்லை என்றால் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுவோம். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் மாணவர் சக்திகளை ஒன்று திரட்டி இந்த முற்றுகை போராட்டத்தை நடத்துவோம். மேலும் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இலங்கை இன படுகொலை பற்றி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாணவர்கள் பாசறை தொடங்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 2014 ஆம் ஆண்டு வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்த எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.


குறித்த தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் அமுல்படுத்தியதா என்பது குறித்து அடுத்த ஆண்டு நடைபெறும் அமர்வுகளின் போது ஆராயப் படவுள்ளது.

மனித உரிமைப் பேரவையினால் இவ்வாறு நாடொன்றுக்காக விசேட அமர்வு ஒன்றை நடாத்தும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், அதிகார பகிர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறெனில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய எந்தவொரு பரிந்துரையும் அமுல்படுத்தப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தீர்மானம் நிறைவேற்றுவதற்கு 26 அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. (அ-2)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது நினைவு தினம் அண்மையில் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்ட போது...

# பெண்களுக்கான நலன்புரி திட்டங்களுக்கு சீனா உதவி

பெண்களுக்கான நலன்புரி திட்டங்களை விரிவுபடுத்தவும் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கும் இலங்கைக்கு சீனா உதவ முன்வந்துள்ளது. இரு நாடுகளும் இணைந்த செயற்றிட்டங்களை நாட்டின் சகல பகுதிகளிலும் ஆரம் பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இலங்கையின் சிறுவர் அபிவிருத்தி பெண் கள் விவகார அமைச்சும் சீனாவின் சங் காய் மகளிர் அமைப்பும் இணைந்து இத ற்கான செயற்றிட்டங்களை வகுத்து நடை முறைப்படுத்தப்படவுள்ளன.

நான்கு முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இத்திட்டம்செயற்படுவதாக அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்து ள்ளார்.

இது தொடர்பில் மேற்படி சீன அமைப்பின் தலைவி எஹங்லிலி தலைமையிலான 11 பேரடங்கிய தூதுக்குழுவொன்று அமைச்சின் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சர் தெரிவித்தார்.

பெண்களுக்கான தொழில்வாய்ப்புக்களை அதிகரித்தல், பெண்களின் உரிமை மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் தொடர்பில் அடிமட்டத்திலிருந்து தெளிவுகளைப் பெற்றுக் கொடுத்தல், பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள பெண்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல், உள்ளூர் பெண்கள் அமைப்புகளுடனான தொடர்புகளை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் இதன்மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கிரிக்கெட் இறுதி சுற்று போட்டி இன்று

கோப்பாய் மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் க.வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அழைக்கப்பட்ட கழகங்களில் இறுதிப் போட்டியில் பங்குபற்ற கரவெட்டி ஞானம்ஸ் கழகமும் உடுவில் உதய சூரியன் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பாடசாலை அணிகளில் அச்சுவேலி மத்திய கல்லூரியும் கோப்பாய் மகா வித்தியாலயமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. இப்போட்டியின் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கே. கணபதி ப்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார். மரதன் ஓட்டப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன என அதிபர் தெரிவித்துள்ளார். (அ-3)

# திருமலை எண்ணெய் குதங்களை மீளப்பெற நடவடிக்கை-அரசாங்கம்

இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள திருகோணமலை துறை முகத்தில் உள்ள எண்ணெய் குதங்களில் பயன்படுத்தாதவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான இணக்கப்பாடுகளை ஏற்படுத்த அரசாங்கம் எண்ணியுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்திய எண்ணெய் நிறுவனம் அவற்றை பயன்படுத்தாவிட்டால் அவற்றை மீள பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது. இந்திய நிறுவனம் தற்போது மூன்று எண்ணெய் குதங்களை பயன்படுத்தி வருகிறது என நம்புகிறோம்.

இந்திய எண்ணெய் நிறுவனத்துடனான உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அந்த நிறுவனத்துடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

10 வருடங்களுக்க முன்னர் இலங்கையின் எண்ணெய் விநியோகத்தில் மூன்றில் ஒரு வீதத்தை இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன், திருகோணமலையில் உள்ள எண்ணெய் களஞ்சியத்தின் ஒரு பகுதியும் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள் சிந்திய இரத்தம் வீண் போகாது

## வைகோ தெரிவிப்பு

இலங்கையில் விடுதலைப்புலிகள் செய்த தியாகமும் அவர்கள் சிந்திய இரத்தமும் நிச்சயம் வீண் போகாது. தமிழர்கள் வசிக்கும் பகுதியில் சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட்டு ஈழம் மீண்டும் மலரும் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொண்ட விக்ரம் உடலுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திய பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

இன்று இலட்சக்கணக்கான மாணவர்கள் ஈழப்பிரச்சினைக்காக பசியோடும் பட்டினியோடும் போராடி வருகிறார்கள். இதுபோன்ற எழுச்சி இதுவரை எங்கும் ஏற்பட்டதில்லை. இந்த போராட்டங்கள் முடிந்து விடாது. இன்னும் புதிய புதிய வடிவங்களில் உருவெடுக்கும்.

1965 இற்கு பின்னர் மாணவர்கள் ஒன்று திரண்டு இலங்கை தமிழர்களுக்காக போராடுவதை பார்த்து மத்திய அரசு பயந்து போய் உள்ளது. இது போன்ற போராட்டங்கள் மூலம்தான் ஈழப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காண முயல வேண்டும்.

முத்துக்குமாரில் தொடங்கி தம்பி விக்ரம் வரை 20ற்கு மேற்பட்டவர்கள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர். தமிழக இளைஞர்களின் காலில் விழுந்து கெஞ்சி கேட்கிறேன் இதற்கு மேல் யாரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாம்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் செய்த தியாகமும் அவர்கள் சிந்திய இரத்தமும் நிச்சயம் வீண் போகாது. தமிழர்கள் வசிக்கும் பகுதியில் சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட்டு தனி ஈழம் மீண்டும் மலரும்.

இன்று தம்பி விக்ரம் வைத்த நெருப்பால் கோடிக்கணக்கான தமிழர்கள் நெஞ்சம் வெதும்பி போய் உள்ளனர். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன் என வைகோ கூறினார். (அ-2)

# ஆண்டு நிறைவும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (rood) 31 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலட்டி 16/2, சீனியர் ஒழுங்கையிலுள்ள நிறுவன தலைமை காரியாலயத்தில் நடைபெறவுள்ளதென நிறுவனத்தின் பதில் செயலாளர் இ. ஓங்காரரூபன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகளாக இலங்கை செவிப்புலன் அற்றோர் நிறுவன தலைவர் செ. ஜெயகாந்தன், செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட தலைவர் து. அன்ரன்லியனகே, மட்டக்களப்பு மாவட்ட தலைவர் எஸ். விக்ரமன், வவுனியா மாவட்ட தலைவர் செ. கோமவாசன், கொழும்பு மாவட்ட தலைவர் எஸ். முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# இனப்பிரச்சினை தீர்வுக்கு காத்திரமான தீர்வு திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்

## சிவ்சங்கர் மேனன் வலியுறுத்து

சிறுபான்மை மக்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

வீ.கே. கிருஸ்ணா மேனன் நினைவுப் பேருரையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை நட்பு நாடு எனவும் பாதுகாப்பு விவகாரங்களில் பாதிப்பு ஏற்படாத வகையில் உறவுகள் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு பூரண உரிமைகளும் சுதந்திரம் வழங்கப்படக்கூடிய வகையிலான தீர்வுத் திட்டத்தையே இந்தியா வலியுறுத்தி நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் நட்புறவு ஆகிய இரண்டு காணிகளையும் சமனிலையாக பேணுவது மிகவும் சிரமமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இணையப் பயன்பாடு, தகவல் தொழில்நுட்பம் போன்ற காரணிகளால் பாதுகாப்பு தொடர்பான நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் யுவதிகள் 95 பேரும் தங்களது பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர். இந்நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சி படைத் தலைமையகத்தில் இடம்பெற்றபோது....

# சுகாதார சீர்கேட்டுடன் நவீன சந்தை கட்டட வளாகம்

## வியாபாரிகள் அல்லோலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கட்டடம் மிக மோசமான முறையில் சுகாதார சீர்கேடு அடைந்துள்ளதாகவும் வாய்க்கால்கள், மலசல கூடங்கள் என்பன அவ்விடத்தினையே மாசு படுத்துவதாகவும் துவிச்சக்கரவண்டி தரிப் பிடத்திற்குரிய கூரை இதுவரை அமைத்து கொடுக்கவில்லை எனவும் வியாபாரிகள், பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். மாநகர சபையினருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

நவீன சந்தை கட்டடத்திற்கும் வாழைப் பழக்கடைக்குமிடையிலுள்ள யாழ். மாநகர சபையினரின் துவிச்சக்கரவண்டி தரிப்பு நிலையம் கூரை இன்றி காணப்படுவதால் தமது வாகனங்கள் துவிச்சக்கரவண்டிகள் நீண்ட நேரமாக வெயில் நிற்கின்றன.

நவீன சந்தையின் வடக்குப் பக்கமாகவுள்ள அதாவது தெல்லிப்பழை, அச்சுவேலி, சுன்னாகம் போன்ற இடங்களிற்கும் செல்லும் தனியார் போக்குவரத்து பேருந்துகள் தரித்து நிற்கின்ற பகுதியின் கொங்கீறிற்றிலான மூடிப்பகுதி உடைந்த கம்பிகள் வெளித் தெரியும் நிலை காணப்படுகின்றன.

இதனால் குறித்த இடங்களிற்கு செல்லும் பயணிகள் தனியார் பேருந்துகளில் ஏறும் போது பெரும் சிரமமடைவதாகவும் பேருந்து நடத்துநர்கள் தமது செருப்பினை இவ்வாய்க்காலினால் தினமும் பறிகொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இங்கு காணப்படும் மலசலகூடங்கள் பயன்படுத்த முடியாத அளவிற்கு மாசடைந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருப்பதாகவும். மலசல கூடங்களின் கதவுகளின் பூட்டுக்கள் திறாங்குகள் என்பன அங்கு வருவோரினால் உடைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இம்மலசல கூடங்கள், மதுப் பிரியர்களிற்கு பிடித்த சிறிய மதுபானசாலை கடையாக தற்போது மாற்றமடைந்துள்ளன எனவும் வியாபாரிகள் தெரி க்கின்றனர்.

இதேபோன்று கடந்த 2 மாதத்திற்கு முன்னராக யாழ். மாநகரசபையினால் அமைத்து கொடுக்கப்பட்ட நவீனசந்தைக்கட்டட தொகுதிகள் காற்றோட்டமில்லாது அனல் பறப்பதாகவும் பழங்கள், மரக்கறிகள் என்பன விரைவில் வாடிவிடுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் நிரந்தரமாக அல்லது நீண்ட காலமாக பூட்டிக் காணப்படுகின்ற கடைகள் பறவைகளின் எச்சத்தினால் நிறைந்து துர்நாற்றம் வீசுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டுகளிற்கு முன்னர் இந்நவீன சந்தை கட்டடத் தொகுதி முழுவதும் ஒவ்வொரு மாத போயா விடுமுறை தினமன்றும் கடைகள் பூடப்பட்டு முழுமையாக தூய்மைப்படுத்தப்படுவது வழக்கம் எனவும் இதனால் நவீன சந்தை கட்டடத் தொகுதி அக்காலப்பகுதியில் என்றுமே புதுப் பொலிவுடன் காணப்படும் என்றும் சுட்டிக் காட்டினர். ஆனால் இன்று நிலைமை வேறு என முதிய வியாபாரி ஒருவர் கூறினார். (அ-4)

# கட்டட அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

மாற்றுவலுவுடையோர்களிற்கான தொழில் பயிற்சி விற்பனை நிலையத்திற்கான இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடம் அமைப்பதற்கான இரண்டு அத்திவார அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என அதன் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜன் அறிவித்துள்ளார். (அ)

# பொறுமை காக்க வேண்டும்-உடுகம தேரர்

இந்தியாவின் நடவடிக்கைகள் மத்தியில் பொறுமையாக செயற்படுத்துமாறு அஸ்கிரிய பிரிவு மகாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து தேரரை சந்தித்து ஆசி பெற்ற போது தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொறுமை இழந்தால் நாட்டுக்குள் அநாவசிய பிரச்சினை ஏற்படும் என தேரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவில் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டமைக்கு ஆறுமுகன் தொண்டமான் இதன்போது கண்டனம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக ஆறுமுகன் தொண்டமான் குறிப்பிட்டார். (அ-2)

# முழுநாள் ஹர்த்தாலுக்கு முஸ்லிம் அமைப்பு ஏற்பாடு

நாளை திங்கட்கிழமை அமைதியான சாத்விகப் போராட்டத்தினை அவர்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பினர் நாடளாவிய ரீதியில் முழு நாள் ஹர்த்தாலை மேற்கொள்ளவுள்ளதாக அவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம் மீதான இனவாத கெடுபிடிகளை உடனே நிறுத்து, முஸ்லிம்களின் வாழ்வியல் கலாசார உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்காதே, சிங்கள, முஸ்லிம் சமாதானத்தை சீர்குலைப்போரை சட்டத்தின் முன் நிறுத்து, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டிய அரசாங்கமே கண்ணை மூடிக்கொண்டிருக்காதே என பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

எனவே எமது வர்த்தக நிலையங்கள், அலுவலங்களை மூடி சகலவித செயற்பாடுகளிலும் விலகி நின்று அமைதியான முறையில் எமது எதிர்ப்பை காட்டுவோம் என அத் துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விடுதலைப்புலிகளென்று உள்ளே தள்ளிவிடுவோம்"

நாடு முழுவதிலுமுள்ள ஆயிரக் கணக்கான கல்லூரிகளிலிருந்து ஒரே இலக்குடன் வெகுண்டெழுந்து வெளிக்கிளம்பியுள்ளது மாணவர் சமுதாயம். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் மீதான அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க சொல்லி கோரிக்கை வைப்பதையெல்லாம் கடந்திரு க்கின்றனர் மாணவர்கள்...

ஆம், அது போர்க்குற்றம் அல்ல. இனப் படுகொலை என்று அந்த தீர்மானத்தில் சொல்ல வேண்டும், இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும், சர்வதேச விசாரணையை கொண்டு வர வேண்டும், தூதரக உறவை இந்தியா முறியடிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளே இப்போது வலுத்துள்ளன. அங்கொன்றும் இங்கொன்றுமாய் தூறல் போல வெளிப்பட்ட மாணவர்களின் குமுறல் மெல்ல வலுப்பெற்று இடிமழையாய் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருக்கிறது பத்து நாட்களாய்...

செய்வதறியாது கலங்கிக் கிடக்கிற தமி ழக அரசு மாணவர்களை (வழக்கம் போல்) நள்ளிரவில் கைது செய்து மருத்துவமனையில் அடைத்து வைக்க அங்கும் தொடர் நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது போராட்டம்.

நூற்றைம்பது ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் முதன்முதலில் தொடங்கி வைத்த உண்ணாவிரதப் போராட்டத்தை போராட்டத்தின் 3 வது நாள் அதிகாலையில் முறித்திட பொலிஸ் துணையுடன் வெறியாட்டம் நடத்தியது ஜெ. அரசு.

சென்னை லயோலா கல்லூரி மாணவர் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக களத்தில் இறங்கியவர்கள் புதுச்சேரி, கும்பகோணம், இராமநாதபுரம், வேலூர் அரசு கலைக்கல்லூரிகள், திருச்சி தூய வளனார் கல்லூரி, சட்டக்கல்லூரி, கலைக்கல்லூரி, நெல்லை பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, எவ். எக்ஸ். பொறியியல் கல்லூரி; ம.தி.த. இந்துக் கல்லூரி, பாளை செயிண்ட் சேவியர் கல்லூரி, ஜான்ஸ் கல்லூரி, நேஷனல் கல்லூரி, சட்டக்கல்லூரி, காரைக்குடி அழகப்பா (ம) மனோன்மணி பல்கலை., மதுரை அமெரிக்கன் கல்லூரி, சட்டக்கல்லூரி (ம) காமரா்ஜர் பல்கலை., கடலூர் அரசு பெரியார் கலைக்கல்லூரி, தூய வளனார் கல்லூரி, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், செங்கல்பட்டு சட்டக்கல்லூரி, சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி, ஆர். ஏ. புரம் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், புரசைவாக்கம் சட்டக் கல்லூரி மாணவர் விடுதி. ராயப்பேட் டை நியூ காலேஜ், வேளச்சேரி குருநானக், துரைப் பாக்கம் வி.டி.பி. ஜெயின் கல்லூரி, நந்தனம், பச்சையப்பன், பிரசிடென்ஷி ஆகிய கலைக் கல்லூரிகள், மாநில கிறிஸ்தவ கல்லூரி, விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, கும்பகோணம் அரசு கலைக் கல்லூரி, கோவை இந்துஸ்தான் கலைக் கல்லூரி, திருவாரூர் திரு. வி. க. அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை அரசு ஐ.டி.ஐ. மாணவர்கள், ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, கரூர் அரசு கலைக் கல்லூரி, உளுந்தூர்பேட்டை திருவெண் ணைநல்லூர் அரசு கலைக்கல்லூரி, சிவ கங்கை மன்னர் கல்லூரி, கன்னியாகுமரி விவேகானந்தர் கல்லூரி, அகஸ்தீஸ்வரம் கல்லூரி, புதுக்கோட்டை மன்னர் கல்லூரி, மன்னார் குடி ராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரி, சென்னை மயிலாப்பூர் விவேகான ந்தர் கல்லூரி, அரும்பாக்கம் டி.ஜி. வைஷ் ணவா கல்லூரி உள்ளிட்ட ஏராளமான கல் லூரி, திருத்தணி அரசுக் கல்லூரி, பல்கலை ஐ.டி.ஐ. மற்றும் பல கல்லூரி மாணவர்கள் போராட்டகளத்தில் குதித்துள்ளனர்.

தகவல் தொடர்பு சாதனங்கள் ஏதுமற்ற சுதந்திர போராட்ட காலத்தில் தொடர் உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த தோழர் ஜதீன்தாசின் மரணம் தேசத்தை உலுக்கியது. சக மாணவப் போராளிகளான சுகதேவ, பகத் சிங், ராஜகுரு ஆகியோருக்கு நேர்ந்த கொடூரம் மாணவ-இளைஞர் சக்தியை உலக வரலாற்றில் மிரட்சியுடன் பொறித்து வைக்குமளவு சூழலை ஏற்படுத்தியது.

1965களில் ஆரம்பமாகிய மொழிப்போர் போராட்டம் காங்கிரசின் அடுத்தகட்ட வளர்ச்சியை மொத்தமாய் தடுத்து வேரோடு பிடுங்கி ஏறிந்தது. தமிழ்நாட்டில் இப்போது இனப்படுகொலைக்கான எதிர்க்குரலெழுப்பிடும் மாணவர்களின் போராட்டம் தொடங்கியிருக்கிறது. மாணவர்களின் வலுவான உள்ளக்குமுறலை அவர்களின் குரலாகவே இங்கே தருகி றோம். முதலில் சென்னை ஆர்.ஏ. புரம் டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப்பந்தலிருந்து தொடங்குவோம்.

7 மாணவர்களுடன் மாசானிமோனிஷா என்ற மாணவியும் களைத்துப் போய் காணப்பட்டார்கள் உண்ணாவிரதப் பந்தலில். மாசானி மோனிஷா நம்மிடம், "இலங்கைத் தமிழர் படுகிறவேதனைகளை ஒவ்வொரு நாளும் செய்திகள் மூலமாக அறிய நேரிடும் போது மிகுந்த வேதனைப்படுவேன், உச்சகட்ட வேத னையாக சிறு குழந்தையான பாலச்சந்திர னின் கொடூர மரணம் அமைந்துவிட்டது. என் னால் என் சக்திக்கு ஏற்ற எதிர்ப்பை வெளிப் படுத்திக் காட்டவே இந்த அறவழி உண்ணா விரதப் போராட்டத்தை கையில் எடுத்தேன். எடுத்தேன் என்பதை விட மாணவர்களாகிய நாங்கள் எடுத்திருக்கிறோம். மாணவர்களின் போராட்டம் ஒருபோதும் தோற்றதில்லை என்று உறுதியாக நம்புகிறேன் என்றார் பளிச்சென...

கேல்வின் ஜோன்ஸ் நம்மிடம், இனப்படு கொலை கையில் எடுத்திருக்கிற இலங்கை ராஜபக்ஷ அரசை உலக நாடுகளின் சபையில் குற்றவாளி என நிறுத்தும் வரையிலும், தமிழீழம் மலரும் வரையிலும் எங்கள் போராட்டம் தொடரும் என்றார் ஊறுதியாக.

புதுக்கல்லூரியிலோ பி.காம். இறுதியாண்டு மாணவரான சல்மான் வழிநடத்தலில் பதின் மூன்று மாணவர்கள் போராட்டத்தை கையிலெடுத்துள்ளனர். பூட்டப்பட்ட கல்லூரி இரும்புக்கதவின் பின்னே உறுதியான இதய த்துடன் பேசினார் சல்மான்.

இது எந்த நிலையிலும் ஏற்க முடியாத, மன்னிக்கமுடியாத குற்றம். இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இனப்படுகொலைகளுக்கு போர்க்குற்றம் என்ற பெயரை சூட்டுவதையே கொடூரத்தின் உச்சமாகவே பார்க்கிறோம். அமெரிக்க அரசின் தீர்மானத்தில் இனப்படுகொலை என்ற வாசகத்தையும், இலங்கைஅரசு மீது கொலைக்குற்ற நடவடிக்கையும் கொண்டு வரப்பட வேண்டும். இதை இந்தியா பிடிவாதமாக இருந்து உறுதியாக செயற்படுத்த வேண்டும் என்றவர், அதுவரையில் மாணவர் அமைப்புகள் பல வழிமுறைகளை கையிலெடுக்கும் இது உறுதி என்றார் எச்சரிக்கை விடுக்கும் விதமாக.

சென்னை மாநிலக் கல்லூரி மாணவர் பேரவைத் தலைவர் ஞானகார்த்திகேயனோ உலகத்துக்கே சமாதானம் போதிக்கிற நாடு நமது நாடு. திபெத் உள்ளிட்ட உலகநாடுகளுக்கெல்லாம் உதவிடும் போது இலங்கைத் தமிழர்களிடம் மட்டும் ஏன் வஞ்சனை காட்டுகிறது? என்று கேள்வியெழுப்பிய அவர் நியாயம் கிடை க்கும் வரை போராட்டம் தொடரும் என்றார் உறுதியாக.

சென்னைக்கு மிக அருகேயுள்ள செங்கல்பட்டில் அரசு சட்டக்கல்லூரி மாணவர்களின் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் 27 மாணவர்களுடன் உறுதியாகத் தொடர்கிறது என்ற தகவலின் பேரில் அங்கே விரைந்தோம்.


இதுவரை எட்டு மாணவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அரசு செங்கல்பட்டு பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மாணவர் பேரவை தலைவர் திலீப் நம்மிடம் தெரிவித்தார்.

தமிழ் மணக்கும் மதுரை மண்ணில் தமிழினத்துக்கான ஆதரவுவக்குரல் பலமாய் கேட்கத் தொடங்கியிருக்கிறது. ஒருபுறம் சட்ட மாணவர் கணேஷ்பிரபு தலைமையில் ரயில் மறி யல் செய்ததாக 16 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மறுபுறம் காம ராஜர் பல்கலைக்கழக வாசலில் ஆராய்ச்சி மாணவர் ஜெகன் தலைமையில் 50 பேர் உண்ணாவிரதத்தை தொடங்கியருக்கின் றனர். இவர்களுக்கு ஆதரவாக அழகர் கோயில் சாலையில் சுமார் 200 மாண வர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர் களை கலைத்து விரட்டும் முயற்சியில் ஈடுபட்ட பொலிஸாருக்கு பொலிஸ்மைக்கிலிருந்து வந்தது அலே ட்டாக இன்னொரு அழைப்பு.

பசுமலை திருப்பரங்குன்றம் சாலையில் சவுராஷ்டிரா கல்லூரி மாணவர்கள் திரண்டு நிற்கின்றனர். அங்கே ஞ்ட்ரென்த் போடுங்கள். இதுதான் அந்த அழைப்பு, இது போக மதுரை சட்டக்கல்லூரி மாணவர்கள் தொடங்கியுள்ள உண்ணாவிரதப் போராட்டமும் இதை ஆதரித்து பல கல்லூரிகளின் மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பில் இறங்கியுள்ளதும் மதுரையில் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாங்கனிக்கும் பெயர் போன சேலம் மாநகரில் சேலம் அரசு கலைக்கல்லூரி மாணவர்களை பொலிஸாரும், கல்லூரி நிர்வாகமும் மிரட்டிருக்கிற வீதம் மாங்கனியையேகசக்க வைக்கும்படி போயிருக்கிறது?

எங்களுக்கும் மாநிலம் தழுவிய அளவில் போராடும் மாணவர்களுக்கும் ஆதரவாக களமிறங்கும் தனியார் கல்லூரி மாணவர்களை மிரட்டி போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வேலையை பொலிஸ் செய்வதுதான் வேதனையா னது. ஆனாலும் இதற்கெல்லாம் கவலைப் பட்டு பின்வாங்கப் போவதில்லை என்கிறா ர்கள் உறுதிபட.



கோவை பி.எஸ்.ஜி. மாணவ-மாணவியர் சுமார் 500 பேர் நடத்தியிருக்கிற உள்ளீர்ப்புப் போராட்டம் கோவையை கதிகலங்க வைத்திருக்கிறது.

அருண்குமார், வினோஜ். செம்மலர் அனிச்சம் ஆகிய மாணவ-மாணவியர் ஒரே குரலாய் நம்மிடம், டில்லியில் ஒரு மாணவி கற்பழிப்புக்கு அலறியது இந்தியா. இலங்கையில் ஓராயிரம் இசைப்பிரியாக்கள் கொடூரமாகக் கற்பழித்துக் கொல்லப்பட்டதற்காக இந்தியா ஏன் அலறவில்லை? தமிழிச்சிகள் கற்பழிக்கப்பட்டால் அது சதையாலான நிகழ்வாகவும் மற்ற இடத்திலே இதுவென்றால் அது உயர்வாலான நிழ்வாகவும் பார்க்கப் படுவது நியாயம்தானா?

இலங்கை ஜனாதிபதியை போர்க் குற்றவாளி என அறிவிக்க நாங்கள் தொடங்கியிருக்கும் கையெழுத்து இயக்கம் மக்களை வெகுவிரையில் சென்றடையும் என்கிற அவர்கள் தங்கள் போராட்டத்தை வலுவாக்கும் அடுத்த கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள்.

இப்படி பல விடியல்கள் பல மாவட்டங்களில், திசை திருப்பிவிடும் அரசின் ஊதுகுழல்களைத்தாண்டி ஒன்றாய் இணையத் தொடங்கியிருப்பது மீண்டும் ஒரு மொழிப் போராட்டத்தை நினைவில் கொண்டு வந்து நிறுத்துகிறது.

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கணவன் தன் மனைவியின் எண்ணங்கள் எல்லாவற்றுக்கும் இடம் கொடுப்பானானால் கடைசியில் எங்கு போய் முடியும்?

*பொ. இளவரசி, பருத்தித்துறை*

வியா சேர்!

3 ஏ எடுத்தும் பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களின் எதிர்கால கல்வி குறித்து உங்களின் கருத்து என்ன?

*படித்ததிற்கு பலன் பல்கலைக்கழகம்தான் என்ற முடிவில் இருந்தால் எதுவுமே ஆகிவிடாது. இன்று மேற்படிப்பு படிக்க பல வழிகள் இருக்கிறது. அதில் ஒன்றைக் கையில் எடுத்தால் போதும். வாழ்வில் முன்னேறி விடலாம்.*

*வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி*

வியா சேர்!

மனதிற்கு பிடித்த வேலை கிடைக்காமல் அலைபவர் பலர். தாங்கள் அவர்களுக்கு கூறும் புத்திமதி?

*மனதிற்கு பிடித்தது வேண்டும் என்று அலைவதை விட கிடைத்ததை மனதிற்கு பிடித்ததாக மாற்றிக் கொண்டால் போதும்.*

*சு. ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

உலகில் மனிதர்களுக்கும் மிருகங்களைப் போல் தலையில் கொம்புகள் இருந்தால் எப்படியிருக்கும்?

*ஆயுதப் போராட்டம் வந்திருக்காது. ஆளாளுக்கு முட்டி மோதி மோசம் போயிருப்பார்கள்.*

*மோகனரூபன், சுழிபுரம்*

வியாசர் அண்ணா!

கடவுள் இருக்கிறாரா? இல்லையா?

*தன்னை நம்பியோருக்கு காட்சி கொடுப்பான். நம்பாதோருக்கு மீட்சியே கொடுக்கான்.*

*பா. அனு, கொற்றையூர்*

அன்பின் வியாசரே!

யுத்தம், இயற்கை அனர்த்தம் என்பவற்றால் காவு கொள்ளப்பட்ட உயிர்களை விட இன்று விபத்தினால் தினமும் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. இவ்வாறு விபத்து அதிகரிக்கக் காரணம் என்ன?

*அண்ணன் வெளிநாட்டில் பணியில் கஷ்டப்பட தம்பி இங்கு பல்சரில் பறக்கிறான். அவனுக்கு அங்கு ஒரு நிமிடம் கூட லீவு இல்லை. இவனுக்கு இங்கு ஒரு நிமிடம்கூட வேலையில்லை.*

## மனதிற்கு பிடித்த வேலை கிடைக்காமல் அலைபவர் பலர். தாங்கள் அவர்களுக்கு கூறும் புத்திமதி?




*இ.வதனி, விசுவமடு*

அன்பின் வியாசரே!

குடும்பத்தில் மூத்த பிள்ளைக்குத்தான் சலுகைகள் அதிகம் ஏன் வியாசரே?

*பிள்ளையாருக்கு பழம் கிடைச்சதும் முருகன் கோபித்துக் கொண்டு ஆண்டியாய் பழனி மலைக்குப் போனதும் இது திருவிளையாடல் காலத்திலிருந்து தொடர்ந்து கொண்டே இருக்கிறது வதனி. எல்லாம் திரு விளையாடல்தான்.*

*கு.குலமகள், யாழ்ப்பாணம்.*

அன்பின் வியாசரே!

காதலிப்பவர்களைப் பற்றி உங்களது கருத்து?

*கருத்துக் கூறுமளவிற்கு தற்போதைய காதலர்கள் ஒன்றும் சங்க காலத்து காதலர்கள் இல்லையம்மா. எல்லாம் பொய்... வேசம்... பித்தலாட்டம்...*

*க.முத்துராசா, கட்டைக்காடு*

அன்பின் வியாசரே!

ஒரு கணவன் தன் மனைவியின் எண்ணங்கள் எல்லாவற்றுக்கும் இடம் கொடுப்பானானால் கடைசியில் எங்கு போய் முடியும்?

*முடிவும் இருக்காது. அவன் வாழ்வில் விடிவும் இருக்காது. விட்டுக் கொடுப்பு தேவைதான். சில இடங்களில் ஆண் ஆணாக இருப்பது தான் ஆணிற்குப் பெருமை. இல்லையென்றால் எல்லாமே தலைகீழாகத்தான் நடைபெறும்.*

*க.சி.சதாசிவம், மட்டுவில்*

அன்பின் வியாசரே!

கடவுள் எந்தக் கோவிலில் இருக்கிறார்?

*நல் மனதுள்ளவரின் உள்ளத்தில் இருப்பதைவிட வேறு எங்கும் இருக்க மாட்டான்.*

*சி.கோபுரன், கொக்குவில்*

அன்பின் வியாசரே!

மடங்களும் அன்னதானமும் அவசியம் தானா?

*மாட மாளிகைகளை விட மடங்களும் அடுத்தவன் வயிற்றில் அடிப்பதை விட அன்னதானங்களும் நிச்சயம் தேவை.*

### வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்....

இரண்டு நண்பர்கள் நீண்ட நாட்களுக்குப் பின்னர் சந்தித்துக் கொள்கின்றார்கள்.

நண்பர்: இந்த உலகத்திலேயே என்னைப் போல கஷ்டப்படுற ஆளே இருக்க மாட்டினமடா. அவ்வளவு கஷ்டப்படுகின்றேன்

மற்றவர்:– ஏன் வாழ்வே வெறுத்த மாதிரி பேசுகிறாய்?

நண்பர்:– இல்லடா என்னோட மனைவி சமைக்கிற சாப்பாட்ட இன்டைக்கு வரைக்கும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேனே இதை விட ஒரு கஷ்டம் வேணுமா?

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# யாழ்.குடாநாட்டில் வாகன கடத்தல் சம்பவங்கள் அதிகரிப்பு

## விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவில் தற்போது வாகன கடத்தல் காரர்களும் உருப்பெற்றுள்ளதால் வாகன உரிமையாளர்களினை அவதானமாக இருக்குமாறு யாழ்.பொலிஸார் கோரியுள்ளனர். கடந்த வாரத்தில் இவ்வாறான வாகன கடத்தல் சம்பவங்கள் 3 இடம்பெற்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான காரொன்றினை கடத்திச் சென்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இக்கடத்தல் தொடர்பான முறைப்பாடு கடந்த 19 ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் காரின் உரிமையாளர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள அலுவலகம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளினை காணவில்லை என கடந்த 20 ஆம் திகதியன்று பருத்தித்துறை புலோலியினை சேர்ந்தவரினால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 60 ஆயிரம் பெறுமதியான மோட்டார் சைக்கிளினை காணவில்லையென கடந்த 22 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்கள் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வாகன கடத்தல்கள் அதிகரித்து காணப்படுவதனால் தமது வாகனங்கள் குறித்து உரிமையாளர்கள் அதிக அக்கறையுடன் செயற்படல் வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

## கண்ணீர் அஞ்சலி



ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை அதிபர் திரு.மகேசன் உமாசங்கர் அவர்களது அன்புத் தாயார்

### திருமதி புனிதவதி மகேசன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்

(சி-2776)

# ஒட்டுசுட்டான் வீதியூடான பயணிகள் பேருந்துகள் அதிக கட்டணம் அறவீடு

## பயணிகள் ஆதங்கம்

முல்லைத்தீவில் இருந்து ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஊடாக வவுனியா செல்லும் அரச, தனியார் பேருந்துகள் அதிக கட்டணங்களை அறிவிடுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த போக்குவரத்துப் பாதையானது 78 கிலோ மீற்றர் தூரமுடையதாக காணப்படுகின்றபோது அரச பேருந்துகள் 136 ரூபாவினையும் தனியார் பேருந்துகள் 180 ரூபாவினையும் பயணிகளிடம் இருந்து அறவிடுகின்றனர்.

அத்துடன் வீதிகளுக்கு காப்பெற் இடப்பட்ட போதும் பயணிப்பதற்கு 3 மணித்தியாலங்கள் எடுக்கின்றது.

பணத்தையும் கூட அறவிடுவதோடு நேரமும் அதிகமாக எடுக்கின்றது என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியாவில் இருந்து மன்னாருக்கு செல்லும் போக்குவரத்து பாதையானது 78 கிலோ மீற்றர் தூரமுடையதாக இருக்கின்ற போதும் அரச பேருந்துகளில் 107 ரூபாவும் தனியார் பேருந்துகளில் 110 ரூபாவும் அறவிடப்படுகின்றது.

அத்துடன் பயணிப்பதற்கு 2 மணித்தியாலமே எடுக்கின்றது.

எனவே, போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட தமக்கு மட்டும் ஏன் அதிக பணத்தை அறவிடுகின்றனர் எனவும் அதிகநேரம் எடுக்கின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து பயணிகள் குறைவான கட்டணங்களுடன் குறைவான நேரத்துடன் பயணிக்க ஆவன செய்யுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-[illegible])

SHAKTHY microtec
Hotline : 077 9120842
Computer wholesaler
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...
அனைத்து வகையான Branded கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை மிகவும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
19" Monitor Rs. 7,000/=
17" Monitor Rs. 6,000/=
15" Monitor Rs. 5,000/=
Casing with power supply Rs. 2,200/=
Keyboard & Mouse Rs.800/=
Dongle Rs. 3,600/=
Techfine UPS Rs. 4,500/=
4GB pen drive Rs. 850/=
Headphone Rs. 500/=
Rs. 800/=
LCD Combo Rs. 3,500/=
(சி-2767)
இல.170, V.M.K. கட்டிட மேல்மாடி, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக அமெரிக்கா நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள்

இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமை பேரவையின் 22 ஆவது அமர்வில் அமெரிக்கா முன்வைத்து நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரானவை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அத்துமீறல்கள் குறித்து சுதந்திரமான நம்பகரமான சர்வதேச விசாரணை வேண்டுமென்ற உயர் ஆணையரின் கோரிக்கையை இலங்கை மீதான தீர்மானம் கவனத்தில் கொண்டுள்ளதாக அமெரிக்கத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையும் அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையம் முழுமையாக அனுபவிப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஒவ்வோர் அரசுக்கும் உண்டு என்பதை மறுவுறுதி செய்தல்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தாங்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையையும் சர்வதேசச் சட்டத்துக்கு இயைந்ததாக, குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அகதிகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் இவற்றில் எது பொருத்தமானதோ அதற்கு இயைந்ததாக இருக்க வேண்டியதை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் நினைவு கூர்ந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாகாண சபைக்கான தேர்தல்களை 2013 செப்டெம்பரில் நடத்தப் போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளதை வரவேற்று உட்கட்டமைப்பை மறுவுருவாக்கம் செய்தல்.

கண்ணிவெடிகளை அகற்றுதல், உள்நாட்டு அகதிகளில் பெரும்பாலானோரை மீள்குடியமர்த்தல் ஆகிய பணிகளில் இலங்கை அரசு பெற்றுள்ள முன்னேற்றத்தை வரவேற்று அங்கீகரிக்கும் அதேவேளையில் நீதி, நல்லிணக்கம் மற்றும் வாழ்வாதார மீட்பு ஆகிய பரப்புகளில் இன்னும் மிகுதியான பணி காத்திருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த முயற்சிகளில் பொதுச் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மையினப் பிரதிநிதிகள் உள்ளிட்ட உள்ளூர் மக்கள் தொகையினுடைய முழுமையான பங்கேற்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்.

இலங்கை அரசினுடைய படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணையத்தின் அறிக்கை அதன் விசாரணை முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு இது இலங்கையில் தேசிய நல்லிணக்கத்துக்கான வழிமுறைக் குப் பங்களிக்கும் சாத்தியம் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டு படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணையத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான இலங்கை அரசின் தேசிய நடவடிக்கைத் திட்டத்தையும் அந்த ஆணையத்தின் விசாரணை முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுக்கான மறுவினையாக அறிவித்துள்ள பொறுப்புறுதிகளையும் கவனத்தில் கொள்ளல்.

ஆணையத்தின் விசாரணை முடிவுகள் மற்றும் ஆக்கபூர்வமான பரிந்துரைகள் அனைத்தையும் இந்த தேசிய நடவடிக்கைத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் குறித்துக் கொள்ளல்.

சட்டவிரோதமான கொலைகள் மற்றும் கட்டாயத் தலைமறைவுகள் குறித்த பரவலான குற்றச்சாட்டுகளை நம்பகமான முறையில் புலன் விசாரணை செய்தல்.

இலங்கையின் வடக்குப் பிரதேசத்தை இராணுவ ஆதிக்கத்திலிருந்து விடுவித்தல், நிலத் தகராறுத் தீர்ப்புக்கான பாரபட்சமற்ற அமைப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல். காவல் வைப்புக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்தல், முன்பு சுதந்திரமாகச் செயற்பட்ட பொதுச்சமூக நிறுவனங்களை வலுப்படுத்தல், மாகாணங்களுக்கு அதிகார ஒப்படைப்பு குறித்து ஓர் அரசியல் தீர்வை எட்டுதல், கருத்துச் சுதந்திரத்துக்கு அனைவருக்கும் உள்ள உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல், சட்டத்தின் ஆட்சி நிலவத் தேவையான சீர்திருத்தங்களைச் சட்டமாக்கல் ஆகியவற்றுக்கான தேவை உள்ளிட்ட ஆணையத்தின் அறிக்கையில் உள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நினைவுகூர்ந்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான சட்டமீறல்கள் பற்றிய எளிதில் புறந்தள்ள முடியாத தீவிரமான குற்றச்சாட்டுக்களை இந்த ஆணையத்தின் அறிக்கையும் தேசிய நடவடிக்கைத் திட்டமும் போதுமான அளவு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதைக் கவலையோடு குறித்துக் கொள்ளல்,

கட்டாயத் தலைமறைவுகள், சட்டவிரோதமான கொலைகள், சித்திரவதை, கருத்துச் சுதந்திரம், சங்கம் அமைத்தல் மற்றும் அமைதியாகக் கூட்டம் நடத்துதல் ஆகியவற்றுக்கான உரிமைகள் குலைக்கப்படுதல்,

மனித உரிமைப் பாதுகாப்பாளர்கள், பொதுச்சமூக உறுப்பினர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான மிரட்டல்கள் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகள், நீதிமன்றச் சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு உள்ள அச்சுறுத்தல்கள், மதம் அல்லது கோட்பாடு அடிப்படையிலான பாகுபாடு ஆகியவை உள்ளிட்ட இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் பற்றித் தொடர்ந்து வெளிவரும் செய்திகள் குறித்துக் கவலை தெரிவித்துக் கொள்ளல்,

நல்லிணக்கத்துக்கும் நாட்டு மக்கள் தொகையின் அனைத்து உறுப்பினர்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கும் இன்றியமையாத தேவையான அரசியல் அதிகார பகிர்வு உள்ளிட்ட இலங்கை அரசு வெளிப்படையாக அறிவித்துள்ள பொறுப்புறுதிகளை அந்த அரசுக்கு நினைவுறுத்தல்,

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகிய வற்றுக்குச் எதிரானவை என்று குற்றஞ்சாட்டப்பட்ட அத்துமீறல்கள் குறித்து சுதந்திரமான நம்பகமான சர்வதேச விசாரணை வேண்டுமென்ற உயர் ஆணையரின் கோரிக்கையை கவனத்தில் இருத்தி இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பதில் சொல்லும் பொறுப்பை மேம்படுத்த அந்நாட்டு அரசுக்கு ஆலோசனையையும் தொழில்நுட்ப உதவியையும் வழங்குவது குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கையையும் அவ்வறிக்கையும் உள்ள பரிந்துரைகள் மற்றும் முடிவுகளையும் குறிப்பாக இடைக்கால நீதிக்கு தேவையான இன்னும் அனைத்தளவிலான உள்ளிணைத்துக் கொண்டதான ஓர் அணுகுமுறையின் இன்றியமையாத அங்கமாக ஓர் உண்மை தேடும் அமைப்புவழிமுறையை நிறுவுவது தொடர்பான பரிந்துரையையும் வரவேற்கிறது.

உயர் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசை ஊக்குவிக்கிறது. மேலும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான அத்து மீறல்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து சுதந்திரமான, நம்பகமான விசாரணையை நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை கோருகிறது.

படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணையத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை பயன்விளையும் வகையில் நிறைவேற்றும்படியும் தனக்குள்ள பொருத்தப்பாடான சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றத் தேவையான கூடுதல் நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளும்படியும் இலங்கை மக்கள் அனைவருக்கும் நீதி, சமநிலை, பதில் சொல்லும் பொறுப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்த தேவையான சுதந்திரமான, நம்பகரமான நடவடிக்கை களை தொடங்குவதற்கான பொறுப்புறுதியை நிறைவேற்றும்படியும் இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை மீள வலியுறுத்துகிறது.

சிறப்பு நடைமுறைகளுக்கான உரிமை ஆணை பெற்றவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கும்படியும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் அணுகல் உரிமை வழங்குதல் உட்பட நிலுவையிலுள்ள அவர்களின் கோரிக்கைகளுக்கு முறைப்படி மறுவினையாற்றும்படி இலங்கை அரசை ஊக்குவிக்கிறது.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவியை இலங்கை அரசோடு கலந்தாலோசித்து அதன் ஒப்புதலோடு, வழ ங்க உயர் ஆணையர் அலுவலகம் மற்றும் சிறப்பு நடைமுறைகளுக்கான உரிமை ஆணை பெற்றவர்களை ஊக்குவிக்கிறது.

இப்போது முன்வைக்கப்படும் இந்த தீர்மானத்தின் செயற்படுத்தல் குறித்து தொடர்புடைய சிறப்பு நடைமுறைகளுக்கான உரிமை ஆணை பெற்றவர்களிடமிருந்து உள்ளீட்டை பெற்று பொருத்தமான வகையில் நிகழ்நிலை குறித்த வாய்மொழி அறிக்கையை மனித உரிமைகள் குழுவிற்கு அதன் இருபத்து நான்காவது அமர்வில் வழங்கும்படியும் இருபத்தைந்தாவது அமர்வில் விவாதத்தை தொடர்ந்து ஒரு முழுமையான அறிக்கையை வழங்கும்படியும் உயர் ஆணையர் அலுவலகத்தை கேட்டுக்கொள்கிறது. (அ-2)

## அகதிகள் முகாமில் தீ விபத்து; 30 பேர் உடல் கருகி பலி

தாய்லாந்தில் அகதிகள் முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் 30 பேர் பரிதாபமாக உடல்கருகி பலியாகியுள்ளதுடன் 200 க்கு மேற்பட்டோர் எரிகாயங்களிற்கு உள்ளாகியுள்ளனர்.

தாய்லாந்து- மியன்மார் எல்லைப்பகுதியான வடக்குமாயே ஹாங் சன் மாகாணத்தில் உள்ள மாயே சூரின் என்ற அகதிகள் முகாமிலே மேற்படி தீ விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த அகதி முகாமில் மியன்மாரில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உள்ளனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென தீப்பிடித்ததில் 30 பேர் உடல்கருகி பலியானதுடன் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வீட்டில் சமையல் செய்த போது இந்த தீ விபத்து ஏற்பட்டதாகவும் அடுத்தடுத்தகணங்களில் அயல் வீடுகளுக்கும் தீ பரவியதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளுக்கு அந்நாட்டு உள்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (அ-5)

## பூமியின் அளவு கொண்ட 1700 கோடி கிரகங்கள் கண்டறிவு

நமது சூரியனைப்போன்ற அளவுகொண்ட நட்சத்திரங்களை நாசாவின் கெப்லர் விண் வெளி தொலைநோக்கி ஆராய்ந்தது. அப்படி யான நட்சத்திரங்களில் ஆறில் ஒன்றில் பூமியின் அளவு கொண்ட கிரகங்கள் இருப்பதற்கான அறிகுறிகளை விஞ்ஞானிகள் கண் டறிந்துள்ளனர்.

கலிபோர்னியாவில் உள்ள அமெரிக்க விண்ணியல் ஆராய்ச்சிக் குழுமத் தின் முன்பு இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பூமியை ஒத்த அளவில் ஏராளமான கிரகங்கள் இருந்தாலும் இவற்றில் பெரும்பான்மையானவை உயிர்கள் வாழ முடியாத அளவுக்கு அதிக வெப்பம் கொண்டவையாக இருக்கும் என்பதை விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு கோளத்தில் உயிர்கள் வாழ்வதற்கு திரவ வடிவில் நீர் வேண்டும். ஆனாலும் ஆயிரங்கோடிக் கணத்தில் பூமியை ஒத்த கிரகங்கள் இருக்கின்ற படியால் பூமியைப் போல உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற அம்சங்களைக் கொண்டிருக்கும் என்று விண்ணியல் நிபுணர்கள் [illegible] என நம்பப்படுகின்றது. (அ-5)

## நிர்வாக சேவை பரீட்சை முடிபுகள் வெளியாகின

(கொழும்பு)

இலங்கை நிர்வாகச் சேவையின் IIIஆம் தரத்துக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான (SLAS) போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளதாக இலங்கை பரீட்சை திணைக்களம் தெரிவிக்கின்றது.

இலக்கம் 177, நாவல வீதி, நாரஹேன் பிட்டியிலுள்ள அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் இந்த பெறுபெறுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.

அவ்வாறே இலங்கை வெளிநாட்டுச் சேவையின் IIIஆம் தரத்துக்கு ஆட்களைசேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளும் வெளிவந்துள்ளதாக திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (அ-2)

## லண்டன் தேவாலயத்தில் முஸ்லிம்களும் தொழுகை நடத்தலாம்

லண்டனில் உள்ள தேவாலயத்தில் சர்வ மதத்தினரும் பிரார்த்தனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கொட்லாந்தின் அபெர்டீனில் புனித யோவான் தேவாலய பங்குத்தந்தையாகவுள்ள ஜோசப் என்பவரே மேற்படி தேவாலயத்தை சர்வ மதத்தினரும் பிரார்த்தனை செய்யும் வகையில் அமைக்க முடிவு செய்துள்ளார்.

இதனையடுத்து வெள்ளிக்கிழமைதோறும் 100 முஸ்லிம்கள் 5 வேளை தொழுகை நடத்தும் வகையில் தேவாலயத்தில் இடம் ஒதுக்கியுள்ளனர். இதுகுறித்து தேவாலய பங்குத்தந்தை கூறுகையில்,

இந்தியாவில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் என பல மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். அக்கம் பக்கத்தில் வாழும் இவர்கள் பண்டிகை காலத்தில் ஒன்றாகவே கொண்டாடுகின்றனர்.

மதச்சார்பற்ற இந்தியாதான் எல்லா மதத்தையும் சமமாக மதிக்கும் பாடத்தை எனக்கு கற்று கொடுத்தது எனக் கூறியுள்ளார்.

மேலும் பனிக்காலத்தில் முஸ்லிம் சகோதரர்கள் வெட்டவெளியில் குளிரில் தொழுகை நடத்துவதை பார்த்தேன்.

அவர்களுடைய கை, கால்கள் பனியில் நடுங்கின. உடனே நான் பொறுப்பு வகிக்கும் தேவாலய மேலிட நிர்வாகிகளிடம் இதுகுறித்து பேசினேன். அவர்களும் அனுமதி வழங்கினர் என்றார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நன்னுவர்.
-ஔவையார்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உயிர் பறிக்கும் மீற்றர் வட்டி

யுத்தத்திற்குப் பின்பான வட புலத்து மக்களின் வாழ்க்கை நிலை குறித்து பல விடயங்களில் கவலை கொள்ள வேண்டியுள்ளது.

ஒழுங்கமைப்பு, திட்டமிடல், முகாமைத்துவம், சுயகட்டுப்பாடு என எதுவும் இல்லாது, எழுந்தமானமாக தொழில் முயற்சிகளை ஆரம்பித்து அதனை போட்டுடைத்தவர்களின் சோகக் கதைகள்; எங்கள் மக்கள் பாவங்கள் இவர்களை வழிப்படுத்த யாருமே இல்லையென்று வேதனை கொள்ளச் செய்யும். அந்தளவுக்கு நாளாந்தம் அறிகின்ற தகவல்கள் இதயத்தைக் கருக்கக்கூடியன.

நிதிநிறுவனங்கள் வாரிக்கொடுத்த கடன்கள், லீசிங் கம்பனிகள் கூவி அழைத்து இந்தா கொண்டு போ! என்று வழங்கிய வாகனங்கள்,

இருபத்து நான்கு மணித்தியாலங்களில் குறைந்தது பத்து மணித்தியாலங்கள் தொலைபேசியில் நடத்தும் உரையாடலுக்காகக் கட்டவிழ்க்கும் பணங்கள் என எல்லாமும் சேர்ந்து மூலதனத்தை முடக்குவாதமாக்க,

யாழ்ப்பாணத்துக் காசோலைகள், காலம் கடத்தவும் ஏமாற்று நாடகம் நடிக்கவும் பயன்படும் காகிதாதியாகிப் போனது.

இவற்றின் விளைவு கடுமையான மன அழுத்தம், தொழில்முறிவு, சுயத்தை இழந்து போகும் பரிதாபம் என்றாகிவிட,

இவையனைத்தையும் கடந்து கடன்பட்டவனின் கதையை முடிக்கும் காலனாக மீற்றர் வட்டிக் கொடுமை சங்காரம் செய்கிறது.

நட்டங்களும் கஷ்டங்களும் ஏற்பட்டவருக்கு முன்னால் இதோ! மீற்றர் வட்டிக்கு காசு என்றவுடன் மனதைத் தேற்றிக் கொண்டு மீற்றர் வட்டிக்கேனும் காசைப் பெற்று கடனை சமாளிக்கலாம் என்று ஏழை மனம் நினைத்து கையை நீட்ட, மீற்றரின் வேகம் உயிரை மாய்த்து விடுவதைத் தவிர வேறுவழி ஏதும் இல்லையெனத் தீர்மானம் எடுக்கும் அளவில் கடன்பட்டவனை சாவுக்கு இழுத்துச் செல்கிறது.

அந்தோ! பரிதாபம். பொருள் சேர்ப்பதிலும் அறமுண்டு. மற்றவரின் உயிரைப் பறித்து செல்வம் சேர்ப்பதென்பது மிகவும் ஆபத்தானது. எனவே வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கலாசாரம் முற்றாக முடிபுறுத்தப்பட வேண்டும்.

அறத்தின் வழியில் பொருள் ஈட்டும் வழிமுறைகள் ஏராளமாக இருக்கும் போது மீற்றர் வட்டியென்ற ஈவு இரக்கமற்ற தொழிலைச் செய்ய வேண்டியதில்லையல்லவா!

தர்மத்தின் வழியில் சேர்க்கப்படுகின்ற செல்வங்கள் கூட; நிலையாமை என்ற நியதிக்குள் அகப்பட்டு அழிந்தொழிந்து போகின்ற காலச் சக்கரத்தில் மனித உயிர்களை வதம் செய்து சேர்க்கப்படும் செல்வத்தின் தேய்வு என்பது தனித்தது அல்ல. அது இருக்கின்ற செல்வம் அனைத்தையும் சிதைத்துவிடும்.

# துரித அபிவிருத்தியால் தீவகத்தின் அதிசயமாக நெடுந்தீவு திகழ்கிறது

## நெடுந்தீவு பிரதேச சபை அறிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் ஒரு பொழுதேனும் தரித்திருந்து மக்கள் நற்பணியாற்ற முடியாதவர்கள் தமது சுயலாப அரசியலுக்காக உண்மைகளை திரிவுபடுத்தி நெடுந்தீவுப் பிரதேசம் அபிவிருத்தியில் புறந்தள்ளப்பட்டுள்ளதாக நீலிக் கண்ணீர் வடிப்பது வேடிக்கையானது. இதனுடன் நெடுந்தீவில் அபிவிருத்தி செயற்பாடுகளை விமர்சித்தும் பாகுபாடுகளுடன் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஊடகங் களில் பிரசுரமாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என நெடுந்தீவு பிரதேச சபை தவிசா ளர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எதுவித வசதிகளுமற்ற அபிவிருத்தியின்றி வறண்டதேசமாக காணப்பட்ட நெடுந்தீவுபிரதேசம் 1990 ஆம் ஆண்டின் பின் பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டு செயற்றிட்டங்களையும் அபிவிருத்திகளையும் பெற்று இன்று தீவகத்தின் அதிசயமாக நெடுந்தீவு விளங்குகின்றது.

இதனால் பாதுகாப்பானதும் விரைவானதுமான கடற்போக்குவரத்து, தடங்கலற்ற சிறப்பான உள்ளூர் போக்குவரத்துச்சேவை, 24 மணிநேர மின் விநியோகம், நவீனமுறையில் சீரமைக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம், வீதி அபிவிருத்திப் பணிகள், விவசாய வணிக மற்றும் கைத்தொழில் மேம்பாட்டுநடவடிக்கைகள், வாழ்வாதார உதவித் திட்டங்கள் எனப்பல்வேறு அபி விருத்தித்திட்டங்கள் மூலம் நெடுந்தீவு வளமான தேசமாக மாற்றமடைந்துள்ளது.

தீவகம் தவிர்ந்த யாழ்.குடாநாட்டின் ஏனைய பிரதேச சபைகளால் ஆற்ற முடியாத மக்கள் நலப்பணிகளை கடலின் நடுவே தனித்திருக்கும் நெடுந்தீவில் நாம் ஆற்றி வருகின்றோம். கடல் போக்குவரத்தில் சில தடங்கல்கள் இயற்கை மாற்றங்களால் ஏற்படுகின்றபோது நிறைவான சேவையை எமது பிரதேச மக்களுக்கு தொடர்ந்தும் வழங்கி வருகின்றோம்.


இவ்வாறான சமூக நலப்பணிகளை தமது சுயலாப அரசியல் வாழ்வுக்காக காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாய் உண்மைகளை திரிவுபடுத்தி செய்திகளை வெளியிட்டு வரும் தான்தோன்றித் தனமான செயற்பாடு ஆடு நனைகிறது என ஓநாய் அழுதது போலானது.

மரண வீடொன்றில் கலந்துகொள்ள நெடுந்தீவுக்கு வருகை தந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் யாழ்.மாநகரசபை உறுப்பினர் விந்தனும் தமது உறவினர் வீடொன்றில் அறுவருடன் கலந்துரையாடிவிட்டு நெடுந்தீவு மக்களுடன் கலந்துரையாடியதாக சார்பு ஊடகங்களில் செய்தி வெளியிட்டிருப்பது கேலிக்கிடமானது.

எம் தீவுக்கு வாருங்கள். உங்களிலான பணியை எம் மக்களுக்குச் செய்யுங்கள். இத்தீவின் அழகான துறைமுக வாசல் என்றுமே உங்கள் வரவுக்காக திறந்தேயுள்ளது. இதைவிடுத்து சுயலாப அரசியலுக்காக சொந்த மண்ணையும் சொந்த உறவுகளையும் தாங்கும் எம் தீவை கொச்சைப்படுத்தாதீர்கள். வரலாறு உங்களை மன்னிக்காது என்றுள்ளது. (அ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இன்பம் எது



முத்தமிழ்ச் சங்கம் மல்குதல் இன்பம்
வித்தகர் சங்கம் விரவிடல் இன்பம்
பக்தர் சங்கம் பரவுதல் இன்பம்
நற்றவர் சங்கம் நாட்டிடும் இன்பமே
எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனிற்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே
பவநெறி கடக்கப் பிறந்திடு மின்பம்
அவநெறி துடைப்ப அணைந்திடு மின்பம்
தவநெறி தலைப்படத் தழைத்திடு மின்பஞ்
சிவநெறி பூத்திடுஞ் சச்சிதா னந்தமே

# புனிதத்திற்கு புத்துயிரூட்ட கல்வாரி பயணத்திற்கு புதிதாய் அன்பர்களைத் திரட்டுவோம்

இயேசு வெற்றியோடு எருசலேமில் நுழைந்ததை நினைவுகூரும் விதமாக இன்று நாம் குருத்தோலைப் பவனி ஞாயிறைக் கொண்டாடுகின்றோம். இந்தப்பவனி ஓர் ஆழமான ஆன்மீக அடையாளத்தைக் கொண்டுள்ளது. வாழும் கடவுளை நோக்கி இட்டுச் செல்லும் உன்னத பாதை வழியாக நாம் இயேசுவோடு சேர்ந்து பயணம் தொடர இது அழைக்கின்றது.

நாம்வாழும் இக்காலத்தில் காலநிலை மாற்றத்தால் கடந்த வருடம் முதல் இன்றுவரை பல எதிர்பாராத விளைவுகளை நாம் கண்டு வருகின்றோம். இன்னும் சூறாவளி வரப்போகின்றது என கடந்த வருட இறுதியில் நாம் எச்சரிக்கை செய்யப்பட்டோம். இன்று நாம்

## பரமபிதா காட்டிய பாதை

குருத்து ஞாயிறு, சூறாவளி இரண்டையும் இணைத்து நோக்கினால் வரலாற்றில் முதல் குருத்து ஞாயிறு நடந்த போது சூறாவளி ஒன்று எருசலேம் நகரைத் தாக்கியது. காற்று வடிவத்தில் வந்த சூறாவளி அல்ல, கடவுள் வடிவத்தில் வந்த சூறாவளி எனலாம். சூறாவளி என்ன செய்யும்? எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப்போடும். இதனடிப்படையில் பார்க்கும்போது முதல் குருத்து ஞாயிறு நிகழ்வுகள் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப்போட்டது.

இயேசு எருசலேமில் நுழைந்தபோது மக்கள் ஊர்வலம் ஒன்று தானாகவே ஏற்பட்டது. இன்று நடப்பது போல ஏற்பாடு செய்யப்பட்டதல்ல. அங்கு திருவிழா நாட்களில் எருசலேமில் இப்படித் தானாக ஏற்படும் கூட்டங்கள், மதத் தலைவர்களுக்கும் உரோமைய அரசுக்கும் பலவித பயங்களை உருவாக்கியிருந்தன, என்பதை நாம் வேதாகமத்தில் பார்க்கின்றோம்.

இயேசுவைச் சுற்றிவந்த இந்த ஊர்வலமும் [illegible] வார்க்கத்தை அங்கு ஆட்டிப் படைத்திருக்க வேண்டும். இயேசு தன் பணி வாழ்வை ஆரம்பித்ததிலிருந்து யூத மதத் தலைவர்களின் அதிகார வாழ்வு ஆட்டம் கண்டது. இந்தத் தலைகீழ் மாற்றங்களின் சிகரம் எருசலேம் நகரில் இயேசு ஊர்வலமாய் வந்தது. இதைத் தொடர்ந்து அவர் அந்த மதகுருக்களின் அரணாக இருந்த எருசலேம் கோவிலில் நுழைந்து அங்கிருந்த அமைப்பையும் துரத்தினார். எனவே இந்த குருத்து ஞாயிறு, அதிகார அமைப்புக்களைப் பல வழிகளிலும் புரட்டிப்போட்ட ஒரு சூறாவளிதானே எனலாம்.

இயேசு ஊர்வலத்தில் போய்க் கொண்டிருந்த போது அங்கிருந்தவர்கள் தங்கள் மேலுடைகளை வழியில் விரித்துக் கொண்டே சென்றார்கள். அவர்கள் அனைவரும் தாங்கள் கண்ட எல்லா வல்ல செயல்களுக்கும் உரத்த குரலில் மகிழ்ச்சியோடு கடவுளைப் புகழத் தொடங்கினர். ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக! விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக! என்றனர்.

அப்போது கூட்டத்தில் இருந்த பரிசேயர்களுள் சிலர் அவரை நோக்கி போதகரே உம் சீடர்களைக் கடிந்து கொள்ளும் என்றனர். அதற்கு இயேசு மறுமொழியாக இவர்கள் பேசாதிருந்தால் கற்களே கத்தும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார். இன்றும் உலகெங்கும் அரசர்களைக் காப்பாற்ற ஊர்வலங்கள் நடக்கின்றன.

மக்கள் எவ்வாறு திரட்டப்படுகின்றார்கள். அவர்களின் ஏழ்மையை எள்ளிநகையாடும் ஆதிக்கசக்தியின் திருவிளையாடல் என்பது இங்கு உண்மையாகின்றதல்லவா. இயேசு தனது பதிலில் உண்மையை மறைக்க திரட்டப்படுவோர் வாழ்வதற்கான வழிகளுக்காக தம்மை கற்களாக்கியே செல்கிறார்கள்.



குருத்து ஞாயிறு நிகழ்வு அநீதிக்கெதிரான போராட்டமும் உண்மையைக் காக்க வேண்டுமென்ற விடா உறுதியும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவை. இவற்றில் ஒன்றைப் பிரித்து மற்றொன்றுக்காக யாராலும் உழைக்கமுடியாது என்பதே நமக்குச் சொல்லித்தருகிறது. அநீதிகளை எதிர்த்து உண்மையைக் காக்கப் போராடுகின்றவர்கள் இறந்தும் வாழ்கின்றார்கள். இன்றுடன் புனிதவாரம் தொடங்குகின்றது. இந்த வாரத்தில் நடந்தவைகளில் புனிதம் எதுவும் வெளிப்படையாகத் தெரிகிறதா. நம்பிக்கைக்குரிய

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

நண்பர் காட்டிக்கொடுத்தார். அன்புக்குரிய அன்பர் மறுதலித்தார். ஏனைய நண்பர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். மனச்சாட்சி விலைபோனது. பொய்ச்சாட்சிகள் சொல்லப்பட்டன.

கடவுள் என்ற மறையுண்மைக்கே மாற்று இலக்கணம் தந்தவர் இயேசு. கடவுள் துன்பப்படக்கூடியவர்தான். அதுவும் அன்புக்காக எந்தத் துன்பத்தையும் எவ்வளவு துன்பத்தையும் ஏற்பவரே நம் கடவுள் என்று கடவுளைப்பற்றி வித்தியாசமான ஓர் இலக்கணத்தை இயேசு அந்தச் சிலுவையில் சொன்னாரே, அதேபோல் இந்தப் புனிதவாரம் முழுவதும் இயேசுவின் வாழ்வில் நடந்த எல்லா நிகழ்வுகளும் புனிதத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தன. வெளிப்படையாகத் தெரியாத இந்தப் புனிதத்தை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். புனிதவாரம் கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைப் பாடங்கள் பல உள்ளன. கற்றுக்கொள்ளச் செல்வோம் கல்வாரிக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லயன் மிரட்டல்; இந்தியா திணறல்!

டில்லியில் நடைபெறும் நான்காவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சுக்காக ஆடிய அவுஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்த இந்தியா 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதல் நாள் ஆட்ட நேரமுடிவின்போது 8 விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களை பெற்றிருந்த அவுஸ்திரேலிய அணி 2 ஆம் நாள் ஆட்டம் ஆரம்பித்து ஒரு மணித்தியாலத்திற்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்டமிழக்காமல் சிடில் 47 ஓட்டங்களுடனும் பற்றினசன் 11 ஓட்டங்களுடனும் களத்திலே இருந்தனர். இருவரும் நேற்று 2ஆம் நாள் ஆட்டத்தை தொடர்ந்தனர். ஆட்டம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே சிடில மேலும் 4 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த நிலையில் அஸ்வின் பந்து வீச்சில் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த லயன் பற்றின்சனுடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. அணி 262 ஓட்டங்களைப் பெற்றபோது அவுஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பற்றின்சன் 30ஓட்டங்களுடன் ஒஜா பந்தில் ஆட்டமிழந்தார். லயன் ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் அஸ்வின் அபாரமாக பந்து வீசி 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இஷாந்த் சர்மா, ஜடேஜா தலா 2 விக்கெட்டுகளையும், ஒஜா 1 விக்கெட்டையும் கைப்பற்றினார்.

அடுத்து தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்தது இந்தியா. தொடக்க வீரர்கள் புஜாரா, முரளி விஜய் களம் இறங்கினார்கள். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். புஜாரா 52 ஓட்டங்களைப் பெற்றபோது லயன் பந்தில் போல்டானார்.

அடுத்து வந்த கோலி 1 ஓட்டத்துடன் லயன் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த சச்சின், முரளி விஜய்யுடன் இணைந்து ஆடி அணியின் ஓட்டத்தை உயர்த்தினர். நிதானமாக ஆடிய முரளி விஜய் 57 ஓட்டங்களுடன் சிடில் பந்து வீச்சில் வெளியேறினார். அடுத்து வந்த ரகானே 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப தொடர்ந்து களம் இறங்கிய அணித் தலைவர் தோனி, சச்சினுடன் ஜோடி சேர்ந்து ஆடினார். நிதானமாக ஆடிய சச்சின் லயன் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவர் 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அப்போது இந்திய அணி 180 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து ஜடேஜா, தோனியுடன் சேர்ந்து ஆடினார். அவரும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. பற்றின்சன் பந்தில் வொட்சனிடம் பிடிகொடுத்து 24 ஓட்டங்களுடன் தோனி ஆட்டமிழந்தார். பின்னர் களம் இறங்கிய அஸ்வின், ஜடேஜாவுடன் ஜோடி சேர்ந்தார். இந்தஜோடி தமக்குள்ளே 44 ஓட்டங்களை பகிர்ந்தபோது ஜடஜா 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து அஸ்வினும் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்து வீச்சில் நாதன் லயன் 5 விக்கெட்டுக்களையும், பற்றின்சன், சிடில், மக்ஸ்வெல் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## முதுகு வலிக்கு முடங்கமாட்டேன் –கிளார்க்

தனக்கு ஏற்பட்டுள்ள முதுகு உபாதை தனது கிரிக்கெட் வாழ்வைப் பாதிக்க அனுமதிக்கப் போவதில்லை என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளாரக் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் அவரால் பங்குபற்ற முடியாதுபோன நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது கிரிக்கெட் வாழ்வில் முதன்முறையாக டெஸ்ட் போட்டியொன்றை உடல் உபாதையின் காரணமாகத் தவறவிட்ட கிளார்க், தனக்குள்ள முதுகு உபாதை தனது கிரிக்கெட் வாழ்வில் தாக்கங்களைச் செலுத்தாது என நம்பிக்கை தெரிவித்தார். கடந்த காலங்களைப் போலவே, எதிர்காலத்திலும் இதை முகாமை செய்ய முடியுமென நம்பிக்கை வெளியிட்டார்.

17 வயதில் முதன்முறையாக முதுகு உபாதை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், தற்போது 31 வயதாகுவதாகவும், இதுவரை இதைச் சமாளித்துள்ள நிலையில், எதிர்காலத்திலும் இதைச சமாளிக்க முடியுமெனத் தெரிவித்தார்.

## ஐ.சி.சியின் புதிய விதிக்கு இரையான முதல் வீரர்





தென்னாபிரிக்க அணியுடன் நடைபெற்ற 4ஆவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் தொடக்க வீரர் முகமது ஹபீஸ் 'களத்தடுப்புக்கு இடையூறு செய்ததாக' ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டார்.

டர்பன், கிங்ஸ்மீட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றிருந்தது


இந்தப் போட்டியில் பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியபோது சோட்சோபி வீசிய பந்தை இம்ரான் பர்கத் தட்டிவிட்டு 2 ஓட்டங்கள் எடுக்க முயற்சித்தார். முதல் ஓட்டத்தை பூர்த்தி செய்த நிலையில் விக்கெட் காப்பாளர் எறிந்த பந்தை பார்த்தபடியே ஓடிவந்த முகமது ஹபீஸ் மீது பந்து தாக்கியது.

இதைத் தொடர்ந்து தென்னாபிரிக்க வீரர்கள் ஆட்டமிழப்பு என்று முறையிட்டனர். ஹபீஸ் ஓடிவந்தபோது தனது பாதையில் சிறு மாற்றத்தை செய்ததால் ஐசிசி அறிமுகம் செய்துள்ள புதிய விதியின்படி அவர் 'களத் தடுப்புக்கு இடையூறு செய்ததாக' நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்தார்.

இந்த விதியின்கீழ் ஆட்டமிழக்கும் முதல் வீரர் ஹபீஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆட்டங்காண்கிறது இங்கிலாந்து

அக்லாந்தில் நடைபெறும் 3ஆவது டெஸ்டில் இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர்



ஸ்டீவன் பின் அசத்த, முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 443 ஓட்டங்களை எடுத்துள்ளது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில், ஒரு விக்கெட்டுக்கு 250 ஓட்டங்களை எடுத்திருந்தது. புல்டன் (124), வில்லியம்சன் (83) ஆட்டமிழக்காமல் களத்திலே இருந்தனர்.


இரண்டாம் நாள் ஆட்டத்தில், முதல் இன்னிங்சை தொடர்ந்த நியூசிலாந்து அணியின் வில்லியம்சன் (91) சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். அடுத்து வந்த ரொஸ் டெய்லர் (19) நிலைக்கவில்லை. புல்டான் (136) நம்பிக்கை தந்தார். நடுவரிசையில் களமிறங்கிய அணித் தலைவர் பிரண்டன் மெக்கலம் (38). பிரவுன்லி (36) பெரிய அளவில் சாதிக்கவில்லை. டிம் சவுத்தி (44) ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தார். தொடர்ந்து வந்த புரூஸ் மார்டின் (10), வாட்லிங் (21), டிரன்ட் போல்ட் (0) ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 443 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இங்கிலாந்து சார்பில் ஸ்டீவன் பின் 6, ஜேம்ஸ ஆண்டர்சன் 2, மான்டி பனேசர், ஜோனாதன் டிராட் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் அலெஸ்டர் குக் (4) ஏமாற்றினார். அடுத்து வந்த டிராட் (27) நிலைக்கவில்லை. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்கு 50 ஓட்டங்களைப் பெற்று. 393 ஓட்டங்கள் பின்தங்கி உள்ளது. காம்ப்டன் (12), பெல் (6) ஆட்டமிழக்காமல் களத்திலே உள்ளனர். நியூசிலாந்து சார்பில் வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுக்களையும் [illegible] பவுல்ட் வீழ்த்தினார்.

## 2 ஆவது போட்டியையும் இழந்தது சிம்பாவே

# தொடர் தீவுகள் வசம்



டொமினிகாவில் இடம்பெற்ற 2ஆவது டெஸ்டில் அசத்திய மேற்கிந்தியத் தீவுகள் சிம்பாப்வேயை இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன மூலம் தொடரை 2-0 என சுலபமாக வென்றது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள சிம்பாப்வே அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் மேறகிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றது. இரண்டாவது டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே முதல் இன்னிங்சில் 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

பதிலுக்கு முதல் இன்னிங்சிற்காக ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 8 விக்கெட்டுக்களை இழந்து 381 ஓட்டங்களைப் பெற்றது.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய கிறிஸ கெயில் 101 ஓட்டங்களை (15 ஆவது சதம்) பெற்றார். தொடர்ந்து வந்த சந்தர்போல், ராம்தின் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது ஐந்தாவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 173 ஓட்டங்களைச் சேர்த்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சந்தர்போல்(108), தனது 28வது சதத்தை பதிவு செய்தார். ராம்தின் (86) அரைசதம் கடந்தார். அடுத்து வந்த சமி (9), ரோச் (0) ஏமாற்றினர். இந்நிலையில் 8 விக்கெட்டுக்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் 381 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதன் மூலம் சிம்பாபேயின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களை விட 206 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

பின் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த சிம்பாப்வே அணி, ஷில்லிங்போர்டு 'சுழலில்' மீண்டும் திணறியது. சிபாண்டா(35), வாலர்(20), கிரிமர்(20) மட்டும் சிறிது நேரம் தாக்குப்பிடித்தனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சிம்பாப்வே அணி 141 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இரு இன்னிங்சிலும் சேர்த்து மேற்கிந்தியத் தீவின் ஷில்லிங்போர்டு மொத்தம் 10 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

ஆட்ட நாயகன், தொடர் நாயகன் விருதுகளை இவரே வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு மீது...

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை படைத்தரப்பினரால் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்படி அமெரிக்கா இலங்கை அரசிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை கவனத்தில் கொண்டு தனது சொந்த மக்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 22-வது அமர்வில் அமெரிக்கா முன்வைத்த இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரித்து 24 நாடுகள் வாக்களித்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியும்.

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கும் கடப்பாடு உண்டு என்பதை இத்தீர்மானம் இலங்கை அரசுக்கு தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை அரசுக்கு நாம் 6 மாதங்களுக்கு முன்னதாக வேண்டுகோள் விடுத்திருந்ததுடன், வாஷிங்டனுக்கு விஜயம் செய்திருந்த இலங்கையின் உயரதிகாரிகளிடமும் இது குறித்து நாம் மிகத் தெளிவாகவே கூறியிருந்தோம்.

அத்துடன், மனித உரிமை விவகாரங்களில் இலங்கை அரசு முன்னேற்றத்தை வெளிப்படுத்தாதுவிட்டால், இதேபோன்ற தீர்மானங்களை நாம் மீண்டும் கொண்டு வருவோம் என்று ஏற்கெனவே அவர்களிடம் கூறியிருந்தோம்.

ஆனால் இதுதொடர்பில் நாம் அவர்களிடம் கூறி ஆறு மாதங்கள் கடந்து விட்டநிலையிலும், எவ்வித முன்னேற்றத்தையும் நாம் காண முடியவில்லை. இலங்கை அரசாங்கம் மீண்டும் எத்தகைய முடிவை எடுக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இந்நிலையில், இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை கவனத்தில் கொண்டு முன்னேற்றத்தை வெளிப்படுத்தவில்லை என்றால், நாம் அடுத்த நகர்வுகளை தொடர்ந்து சட்டரீதியாக மேற்கொள்ள முடியும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கும் எண்ணம் இல்லை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மைக்கல் ஜே சிசன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்த போதிலும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கும் எண்ணம் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தியும் மனித உரிமைகளை பாதுகாக்கும் நோக்கிலுமே ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# இலங்கையின் வாக்குறுதி...

மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து இலங்கையின் முன்னேற்ற நடவடிக்கைகள் எவ்வாறுள்ளன என்பது பேரவையால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆராயப்பட்டு அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். வாக்குறுதிகள் வழங்கி ஒரு வருடம் கடந்து விட்டால் சர்வதேச சமூகம் அவற்றை மறந்துவிடும் என்று இலங் கை அரசு நினைப்பது தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய அரசு செயற்படுமாயின் அதற்கு ஆதரவளிக்க நாம் தயாராகவுள்ளோம்.

யுத்தம் முடிபடைந்த பின்னர் நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கையரசு நிறைவேற்ற வேண்டுமென்று தான் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2009-ம் ஆண்டு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை இலங்கை அரசு எப்படி வென்றது? 13-வது திருத்தச்சட்டத்துக்கமைய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும். நாட்டில் அநீதி ஒழிக்கப்படும். 17-வது திருத்தச்சட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். ஊடகச் சுதந்திரம் நிலைநாட்டப்படும். ஆயுதக் குழுக்கள் இல்லாதொழிக்கப்படும் எனப் பல உறுதிமொழிகளை சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு வழங்கியது. அதுதான் இந்த வெற்றிக்குக் காரணம்.

அத்துடன், 2009-ம் ஆண்டு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கூட்டறிக்கையில் இந்த உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. உறுதிமொழிகளைக் கொடுத்து ஒரு வருடம் கடந்துவிட்டால் சர்வதேச நாடுகள் அதனை மறந்துவிடும் என அரசு நினைக்கிறது.

கொழும்பில் அமெரிக்க இந்தியத் தூதரகங்களின் முன்னால் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தத் தேவையில்லை. நாடாளுமன்றம், அலரி மாளிகை ஆகியவற்றின் வளாகங்களில்தான் அவற்றை நடத்த வேண்டும்.

இந்தியாவுடன் உறவு கொள்வதுதான் எமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சம். அதிலும் தென்னிந்தியாவின் உறவு மிக முக்கியம். இருப்பினும், இந்த உறவை சரியாகப் பேணுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

**ஜப்பானின் வாக்கு எங்கே?**

ஜப்பானுடன் நல்லுறவைப் பேணுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் அங்கு சென்று வந்தார்.

இருப்பினும், இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணைக்கு ஜப்பானின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்ததா? இல்லை. அந்த நாடு ஒதுங்கிநின்று நடுநிலைவகித்துள்ளது என்றார். (செ-1)

# மனித உரிமை...

இதன்போது ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிட்டு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தவை வருமாறு:

1988,1989 காலப்பகுதியில் நாட்டில் பல பிரச்சினைகள் இடம்பெற்றன. இருப்பினும் மனிதவுரிமை விவகாரம் தற்போது ஜெனிவா செல்வதற்கான காரணம் என்ன?

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே மனித உரிமைகள் குறித்துப் பேசப்படுகின்றது. தோற்கடிக்கப்படாவிட்டால் இவை தொடர்பில் பேசப்பட்டிருக்க மாட்டாது.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு எமக்கு வேறெந்த நாடோ அல்லது அமைப்போ கூறமுடியுமா? வேறு நாடுகளுக்குள் இராணுவ முகாம்களை அமைத்து செயற்படுபவர்கள்தான் இவ்வாறு சொல்கின்றனர். லிபியா, எகிப்து, சிரியா போன்ற நாடுகளுக்குள் நுழைந்தது போன்ற நிலைமையே உருவாக்கப் பார்க்கின்றனர்.

அதேவேளை, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரசாரங்களை முன்னெடுத்த அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சுதந்திரமாக வந்து இறங்குகின்றனர். நாட்டில் வாழ்கின்றனர். இதிலிருந்தே எமது நாட்டில் மனிதவுரிமைகள் எவ்வளவு தூரம் மதிக்கப்படுகின்றது என்பதை அறியமுடியும்.

இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தனதுரையில் தெரிவித்தார். (செ-11)

# அரசுக்கு கால அவகாசம்...

தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு நீதியை, தீர்வைப் பெற த. தே. கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தை நாடியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐநாமனிதவுரிமைகள் பேரவையின் 22 வது கூட்டத்தொடரில் ,இலங்கை அரசிற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் த.தே. கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு குறித்து அதன் தலைவர் சம்பந்தனிடம் வினாவியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். இதன் போது அவர் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையின் இறுதியுத்தத்தில் அரச படைகளினால் மனிதவுரிமைகள், போர் விதிகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. இந்த நிலையில், இலங்கை அரசிற்கு எதிராக தனது 2-வது பிரேரணையை அமெரிக்கா நிறைவேற்றியுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம். இந்தப் பிரேரணைக்கு ஆதரவளித்த இந்தியா உள்ளிட்ட 25 சர்வதேச நாடுகளுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதே வேளை, இந்தப் பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரவலாகப் பேசப்படுகின்றன. ஆனால் சொற்பதங்களில் மட்டும் தான் சிறு சிறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் உள்விடயங்களில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

அமெரிக்கா ஒரு வல்லரசு நாடு. அந்த நாடு தான் கொண்டு வரும் பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்று வேண்டுமெனில் உலக நாடு களை இராஜதந்திர ரீதியில் தன்பக்கம் வளைத்துப் போட வேண்டும்.

அந்த அடிப்படையில் பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டும் என்பதற்காக அதில் சில சொற்பதங்களில் அமெரிக்கா திருத்தங்களை மேற் கொண்டிருக்கலாம்.

எனினும், இந்தப்பிரேரணை இலங்கையில் இறுதி யுத்தத்தில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை வரவேற்றுள்ளது. அத்துடன் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை வேண்டி நிற்கின்றது. சுயாதீன விசாரணையை எதிர்பார்த்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் ஆக்கபூர்வமான விசாரணை நடத்த வேண்டும் என்பதில் இந்தியா குறியாக உள்ளது.

இந்தியாவின் ஐ.நா பிரதிநிதி ஜெனிவாவில் இதனைத் தெளிவாக் கூறியுள்ளார்.

**தமிழகத்தில் பாரிய மாற்றம்**

இதேவேளை, தற்போது தமிழகத்தில் மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள் பொங்கியெழுந்து இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடி வருகின்றனர். இதனால் அங்கு பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. தமிழகப் போராட்டங்களை நாம் மதிக்கின்றோம். வரவேற்கின்றோம். தமிழக உறவுகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து வருகின்றோம். தமிழக உறவுகளின் ஒத்துழைப்பு எமக்குத் தொடர்ந்து தேவை.

இந்தியா இந்தப் பிரேரணையை ஆதரிக்குமா, இல்லையா என்று சர்வதேச மட்டத்தில் கேள்விகள் எழுந்த நிலையில், தமிழகத்தில் மாணவர்களின் போராட்டம் வெடித்தது. இதன் விளைவாக கடந்த வருடத்தைப் போல இந்த வருடமும் அமெரிக்காவின் பிரேரணையை இந்தியா ஆதரித்துள்ளது.

**இனியும் கால அவகாசம் வேண்டாம்**

இந்த நிலையில், அமெரிக்காவின் பிரேரணையில் குறிப்பிட்ட விடயங்களை இலங்கை அரசு ஒரு வருடத்திற்குள் நிறைவேற்ற வேண்டும். ஆனால் இலங்கை அரசு இதனைச் செய்யாது என்று தான் நாம் நினைக்கின்றோம். ஏனெனில் கடந்த வருடம் அமெரிக்கா நிறைவேற்றிய முதலாவது பிரேரணையில் குறிப்பிட்ட விடயங்கள் எதனையும் இலங்கை அரசு நிறை வேற்ற வில்லை.

இனியும் இலங்கை அரசு இதனை நிறைவேற்றும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

எனவே, இந்த சுயாதீனமான விசாரணை சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும். இதனூடாகத்தான் நாம் தீர்வை எதிர்பார்க்கலாம்.

எனவே பிரேரணைகளை நிறைவேற்றிக் காலத்தை வீண் விரயமாக்காமல் அடுத்த கட்ட நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும் என சம்பந்தன் தெரிவித்தார். (செ-11)

# பொதுநலவாய...

நிறைவேற்றப்படும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருந்த நிலையில் உப்புசப்பில்லாத தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஐ.நா மனிதவுரிமை ஆணையத்தில் தமிழர்களுக்கு சாதகமாக தீர்மானம் நிறை வேற்றப்படவில்லை என்ற போதிலும், அதற்காக தமிழர்களும், தமிழக மாணவர்களும் நடத்திய தன்னெழுச்சியான போராட்டம் வீணாகி விடாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தண்டிக்கப்படும்வரை தமிழகத்தின் உணர்ச்சிகரமான போராட்டம் தொடரும். ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் உதவியுடன் தப்பித்துக் கொண்ட இலங்கை , அடுத்தாக உலக நாடுகளின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ள பொதுநலவாய மாநாட்டை நடத்த ஆயத்தமாகி வருகிறது.

எதிர்வரும் நவம்பர் 15 முதல் 17 வரை கொழும்பில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் பொதுநலவாயத் தலைவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் ஏற்றி, அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு, அவர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்வதுதான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நோக்கமாகும்.

எனவே இலங்கையில் தமிழர்கள் விரும்பும் மாற்றம் ஏற்படாத நிலையில், கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் கனடா பங்கேற்காது என அந்நாட்டு பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் அறிவித்துள்ளார்.

ஆனால், ஈழத்தமிழர் படுகொலைக்கு கண்டனம் தெரிவிப்பதற்காக இம் மகாநாட்டை புறக்கணிக்க வேண்டிய இந்தியாவோ, இம்மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்காக இலங்கைக்கு உதவி வருகிறது.

பாகிஸ்தானில் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதாகக்கூறி பொதுநலவாய அமைப்பிலிருந்து அந்தநாடு பலமுறை நீக்கப்படுவதற்கு காரணமாக இருந்த இந்தியா, தற்போது இலங்கையை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று வலிறுத்துவதை விடுத்து அந்நாட்டுக்கு ஆதரவாக செயற்படுவது கண்டிக்கத்தக்கது என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## மரண அறிவித்தல்

### சதானந்தகுமார் சீதாதேவி



மாலுசந்தியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட (பிள்ளையார் கோவி லடி) சதானந்தகுமார் சீதாதேவி கடந்த 22.03.2013 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருள்நந்தி- கமலாதேவி தம்பதிகளின் புதல்வியும், சதானந்தகுமாரின் அன்பு மனைவியும், சசிந்தர், சதுசாயினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலகிருஷ்ணன்- தங்கம்மாவின் அன்பு மருமகளும், நந்தாதேவி, யசோதாதேவி, ராஜாரஞ்சித், இந்திரஜித், சந்திரஜித், அமுதா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.03.2013 இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-2790) தகவல்: குடும்பத்தினர்


மாபெரும் விசேட விலைக்கழிவு

**Jet D Express Courier Service**

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

(சி-2761)

விரைவு
பாதுகாப்பு
உத்தரவாதம்



| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 kg 1100/= | |
| Canada | Over 5 kg 1200/= | |
| Norway | Over 5 kg 1100/= | |
| Italy | Over 5 kg 1100/= | |
| France | Over5kg 1000/= | Over11kg 800/= |
| Germany | Over5kg 1000/= | Over 11kg 800/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 700/= |
| Australia | Over 5kg 1000/= | Over 11lg 850/= |
| Netharland | Over 5kg 1000/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1100/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1100/= | Over 11kg 850/= |

Note: 25kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.



Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை. (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place,
Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Banking CBF, Chartered கற்கை நெறிகளிற்கான புலமைப் பரிசில் திட்டங்கள்**

**Banking CBF :** A/L 3 'A' Passes 40% Discount
2 'A' Passes 30% Discount
1 'A' Pass 20% Discount
மற்றவர்களுக்கு: 10% Discount

*Special Offer for Bank Staff:- 50% CBF Course fee refund! if you continue in DBF Classes in Our Center.*

**Chartered** A/L 3 'A' Passes 20% Discount
2 'A' Passes 15% Discount
1 'A' Pass 10% Discount
மற்றவர்களுக்கு: 5% Discount

முடிவுத் திகதி: ஏப்ரல் 5ம் திகதி 2013

தொடர்புகளுக்கு: Spectra Skills
19, Stanley Road, Jaffna.
Tel: 0212221422

(C-2787)



# வீட்டுடன் காணி விற்பனைக்கு

பழைய பொலிஸ் ஸ்ரேசன் வீதி (நாகம்ஸ் திரையரங்கு அருகாமையில்) சுன்னாகத்தில் பிரதான வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் வீட்டுடன் கூடிய ஆறு பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0777222468, 0777222467**

(2205)


# அரசியலில் மீண்டும் சந்திரிகா?

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் பலம்மிக்க மாற்று அரசியல் சக்தி ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்த மந்திராலோசனையில் முக்கிய அமைச்சர்கள் சிலர் உட்பட சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டதாகவும் கொழும்பு செய்திகள் நேற்றுத் தெரிவித்தன. (செ-11)


# வேலைவாய்ப்பு

## டோகா /கட்டார்

- ✔ மாதாந்த சம்பளம் , 45000+ மேலதிக நேரம்
- ✔ தச்சுத் தொழிலாளர் ✔ வெல்டர்
- ✔ பிளம்பர் ✔ மேசன் ✔ எலெக்றீசியன்
- ✔ டிரைவர் ✔ உதவியாளர் ✔ A/C மெக்கானிக்

**மேலும் பல வாய்ப்புக்கள்**

- உங்களுக்காக 50,000/- கடன் வசதி செய்து தரப்படும்
- ஒரு மாதத்திலேயே விசா ஒழுங்குகள் அனைத்தும் செய்து தரப்படும்.

*In Joint Venture With* iCS Study Overseas

*Supra Foreign Employment Agency*
*No.77, Clock Tower Road,* (பெருமாள் கோயிலுக்கு அருகாமை)
*Jaffna. 021 730 6000*



**Pc MATE SYSTEMS**

**Computer Sales & Repair**

உங்களது கணினியில் ஏற்படும் *Software/Hardware/Virus* பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்.

மலிவு விலையில்
Core 2 duo, Dual Core , LGA HT Branded Computers ✆ 0779689043

*478 Mother Board*
*LGA DDR2 Board*
*DDR/DDR2 Rams*
*IDE/SATA HDD*
*LCD Monitors*
*Computers*

எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

**புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.:021 222 8093**
61, Kachcheri-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

(2223)



# வேலையாட்கள் தேவை

விருந்தினர் விடுதிக்கு, சமையலறை உதவியாளர்கள் மற்றும் உணவு பரிமாறுவோர் தேவை.

உணவு, தங்குமிடம் இலவசம். 26,27,28ம் திகதிகளில் நேரில் வரவும்.

**பிறைட் இன்**

**இல.51, சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

(C-2779)



**A/L வரலாறு**

யாழ்.மாணவர்களின் தொடர்ச்சியான சாதனை மிக்க பெறுபேற்றிற்கு உதவி வரும் உங்கள் ஆசான்

**M.பத்மன்** MA(History)

அவர்களின் வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:

| DMI | உயர் கலைக்கல்லூரி | புகழ் கல்வி நிலையம் |
|---|---|---|
| யாழ்.நகர் | குளப்பிட்டிச் சந்தி | மானிப்பாய் |

- இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக A/L 2013 மற்றும் Day Class புதிய அனுமதிகள் 30.03.2013 உடன் நிறுத்தப்படும்.
- A/L 2014 மற்றும் A/L 2015 வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

C-2730)






GREY

**பற்களின் கூர்உணர்ச்சி என்பது நீங்கள் எண்ணுவதை விடவும் பாரதூரமான ஒன்றாக அமையலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?**

சூடான, குளிரான, புளிப்பான அல்லது இனிப்பான, ஏதேனும் ஒன்றை நீங்கள் உள்ளெடுக்கும் சமயத்தில் உங்களுடைய பற்களில் சிறிய நேரத்திற்கு ஏற்படுகின்ற கூரிய வலியே பற்களின் கூர் உணர்ச்சி எனப்படுகின்றது. பற்களில் கூர்உணர்ச்சி உள்ள போது கூரிய வலி ஏற்படுவதும், பின்னர் அற்றுப்போவதுமான நிலைமை காணப்படுகின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளாத பட்சத்தில் நிலைமை மோசமாக மாறலாம்.

**உரிய காலத்தில் சிகிச்சையை மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து உங்களுடைய வாழ்வில் மோசமான பாதிப்பிற்கு முகங்கொடுக்க வேண்டாம்**

பற்களின் கூர்உணர்ச்சிக்கு உரிய சிகிச்சையை மேற்கொள்வது மிக முக்கியமானது. உங்களுடைய பல்வைத்தியரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களையும், உரிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியத்திற்கான இச்செய்தியை உங்களுக்கு வழங்குவது இலங்கை பல் மருத்துவர்கள் சங்கம்

வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்பு - கிளக்ஸோஸ்மித்கிளைன்

SRI LANKA DENTAL ASSOCIATION

GlaxoSmithKline






**நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு**



பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறைவீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)
0773818799

பல்வேறு வடிவமைப்புக்களைக் கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள காட்சியறைகளில் பார்வை இடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.